KALKI 14.2.88 ரூ. 2.

கல்கி



சத்யராஜ்
சிறப்புப் பேட்டி



படியுங்கள் இதோ...ஃபேர் அண்ட் லவ்லி எப்படி ராதாவுக்கு கவனிக்கத் தக்க சிகப்பழகை அளித்துவிட்டது... இயற்கைக்கே உரிய இதமான வழியில்.

விளக்கேற்றி வணங்குகிறாள் ராதா...நெஞ்சிலே நன்றிக் கீதம்—பூரணமாய்த் தன் மீது பொன்மாரி பொழிந்ததற்கு, மேனிமலர நன்றி... நன்றி பொங்க வாழ்த்துகிறாள் ஃபேர் அண்ட் லவ்லி க்ரீமை. எந்தப் பெண்ணும் கனவு காணும் பொன்வண்ணம்—சிகப்பழகு, அதனை மேனி மென்மையோடு இயல்பாகப் பூக்க வைத்த க்ரீம்—அதன் வண்ணஜாலமோ, துவக்கிய இரண்டே மாதங்களில்! நடந்ததை நம்பமுடியவில்லை. இந்நாளிலோ, ராதாவின் காதுகளில் ராகமென ஒலிக்குது ராஜா 'அவர்' கொஞ்சும் ரகசியப் புகழுரை: ''பொன்னிறமாய் பூக்குதே உன் அழகு...!''

ராதாவைப் போலவே உங்களுக்கும், அந்த சிகப்பழகுக் கனவு பலித்திட முடியும் - ஃபேர் அண்ட் லவ்லி துணையோடு.



ஃபேர் அண்ட் லவ்லி துவங்குமுன்



ஃபேர் அண்ட் லவ்லி உபயோகிக்கும் நாட்களில்

ஒரு முக்கிய விஞ்ஞானக் கண்டுபிடிப்பு...

ஃபேர் அண்ட் லவ்லி, இயல்பாக உங்களை சிகப்பழகியாக்க இதிலுள்ள ஒப்பற்ற ஃபார்முலா—இரு முக்கிய வழிகளில் வேலை செய்கிறது. ஒன்று: சருமத்தின் அடியாழத்தில்



செயல்பட்டு, உடல் கறுக்கும் உள்வினையைத் தடுக்கிறது—வேறெந்த க்ரீமுக்கும் இது இயலாத சாதனை. மற்றொன்று: இதிலுள்ள இரட்டை ஸன்ஸ்க்ரீன் ஆற்றல், உடல் கறுக்க வைக்கும் சூரிய ஒளியை உட்புகாதபடி தடுத்து நிறம் காத்திடுகிறது. ஆகவே, 6 முதல் 8 வாரங்களில் புதிதாக மேலெழும்பும் கொழுந்துச் சருமப் படலங்களில் செவலையான சாயல் மிளிரும். அன்றாடம் இருமுறை ஃபேர் அண்ட் லவ்லி—நாள் தவறாமல் உபயோகித்து வந்தால், மென்மை கொஞ்சும் இயல்பான சிகப்பழகு உறுதியாக உமதாகிவிடும்.

உபயோக முறை:

கழுவிக் கொண்ட முகம், கழுத்து, கரங்கள்மீது ஃபேர் அண்ட் லவ்லி க்ரீமை பொட்டுப் பொட்டாக இட்டபின், மேல் நோக்கித் தேய்க்க வேண்டும் மெதுவாக. ஃபேர் அண்ட் லவ்லி செயல்படத் துவங்கும் போது சற்றே கூசும் உணர்வு ஏற்படுமானால் கவலை வேண்டாம், விரைவில் அது மறைந்துவிடும்.

எளிதில் உள் உறிஞ்சப்படும்.

குழைவு குணமோங்கி முன்னிலும் மென்மையாக வருகிறது ஃபேர் அண்ட் லவ்லி, ஒரேசீராய் பரவுகிறது சருமத்தில் மேலும் எளிதில் உறிஞ்சப்படுகிறது. உடலார உணருவீர் அந்த மாறுதலை...பிறகு காண்பீர் கண்கூட

ஃபேர் அண்ட் லவ்லி பற்றி மேலும் கேட்டறிய விரும்பினீரானால் எழுதுங்கள் இம் முகவரிக்கு: திருமதி கவிதா குமார், ஃபேர் அண்ட் லவ்லி அட்வைசர், பி.ஓ. பாக்ஸ் 758, பம்பாய் 400 021.

ஃபேர் அண்ட் லவ்லி
சிகப்பழகு க்ரீம்



கண்காணும் சிகப்பழகை உமதாக்கும்... இயற்கைக்கே உரிய இதமான வழி

இந்துஸ்தான் லீவரின் தரமான த

LINTAS FAL 54 2517 TM

'ஆக்டிவ் ஹீரோவாக நடித்தது தவறா?'

— சிந்திக்கிறார் சத்யராஜ்

இடம்: பெங்களூர் 'ஹாலிடே இன்' ஹோட்டல். இரண்டாவது மாடி. ரூம் நம்பர் 207.

கதவு 'டொக்' 'டொக்' கென்று தட்டப்படுகிறது. டர்க்கி டவலைச் சுற்றிக் கொண்டு பாத்ரூமிலிருந்து வெளியே வந்து கதவைத் திறக்கிறார் சில்க் ஸ்மிதா. பரபரவென்று உள்ளே வந்து சோபாவில் உட்கார்ந்து கொள்கிறார் சத்யராஜ். பிறகு நிதானமாக 'மே ஐ கம் இன்' என்று கேட்க, அவரைக் கடுகடுப்புடன் பார்க்கிறார் ஸ்மிதா.

ஸ்மிதா: "என்னையே ஏன் ஃபாலோ பண்ணறீங்க?"

சத்யராஜ்: "அது... தமிழ்ல சொன்னா விதிங்க. இங்கிலீஷ்ல சொன்னா ஃபேட். இந்திலே சொன்னா ஜனங்க அடிப்பாங்க!"

'கட்' என்று டைரக்டர் பிரதாப் கூற, ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டு நம்மை நோக்கி தோழமையான புன்னகையுடன் வருகிறார் சத்யராஜ்.

"பரவாயில்லையே. என்னை ஃபாலோ பண்ணிட்டு நீங்க பெங்களூர் வரையும் வந்திட்டீங்களே?" என்று ஆரம்பிக்கிறார்.

"என்ன படம் இது?"

"படத்துக்குப் பேரு 'ஜீவா'. ஆர். எம். வி. மாப்பிள்ளை தியாகராஜன் தான் தயாரிப்பாளர். வழக்கப்படி இதுவும் ஒரு **action oriented** படங்க."

"உங்களோட உயரத்துக்கும், உடல் கட்டுக்கும் இந்த மாதிரி படங்கள்தான் சரி" என்று நாம் சொல்ல....

"நோ... நோ..." என்று இடைமறிக்கிறார் சத்யராஜ். நான் இதுவரை 92










''இண்டர்விழுவுக்குக் கைநிறையப் பணத்தோட போயும் அந்த வேலையை வாங்க முடியலே!''

''தகுதி அடிப்படையில குடுத்துட்டாங்களா?''

''இல்லே, பைநிறையப் பணத்தோட வந்த ஆளுக்குக் குடுத்துட்டாங்க!''

— ஆல்பர்ட் ராஜ்.



டைரக்டர்: என்னுடைய புதுப்படம் எப்படி? நினைவில் நிற்கிற மாதிரி இருக்கா?

மற்றவர்: இல்லே. நிறைய படங்களை நினைவூட்டற மாதிரி இருக்கு!

— கிழை. அ. கதிர்வேல்.

''கதை எழுதறதிலே முன்னைக்கு, என் கணவர், ரொம்ப முன்னேறிட்டார்!''

''எப்படிச் சொல்றே?''

''முன்பு, அவர் கதை, 'ஒரு மாசம்' கழிச்சுத்தான் பத்திரிகையிலேருந்து திரும்பும். இப்போ, 'ரெண்டே நாள்லே' திரும்பிடுதே...!''

— ஆர். வசந்தகுமார்.



படங்களில் நடித்திருக்கிறேன். கிட்டத்தட்ட 70 படங்களில் வில்லனாகவும், சில்லறை வேஷங்களிலும்தான் தோன்றியிருக்கிறேன். நான் வில்லன்—கம்—கதாநாயகனாகவும், மற்றும் கதாநாயகனாகவும் நடித்த படங்களைப் பற்றித்தான் உங்களுக்கு அதிகம் தெரியும். 'பகல் நிலவு' என்ற படத்திலும், 'மிஸ்டர் பாரத்' படத்திலும் தாத்தா வேடங்களில் நடித்திருக்கிறேனே! ஏன்? தற்போது வெளியான 'வேதம் புதிது' படத்தை எடுத்துக் கொள்ளுங்கள். பாரதி ராஜா 'உனக்கு வயதான ரோல்தான், பரவாயில்லையா?' என்று கேட்ட உடனே ''ஓ.கே.'' சொன்னவன் நான்.''

வேதம் புதிது படத்தைப் பற்றி சத்யராஜ் சொன்னதும், ''உங்க கேரக்டரையும் 'வேதம் புதிது' பாலுத் தேவர் கேரக்டரையும் ஒற்றுமைப்படுத்திப் பார்க்கலாமா?'' என்று கேட்கிறோம்.

''அந்த அளவுக்கு நான் நாத்திகனில்லே.''

''அப்ப கோயிலுக்குப் போவீங்களா?''

''எனக்குக் கடவுள் நம்பிக்கை இருக்கு; அதனாலதாங்க கோயிலுக்குப் போறதில்லே.'' என்று சொல்லிவிட்டுச் சிரிக்கிறார்.

''ஜோஸ்யம் என்றும் நேரம் ஒத்துவரணும் என்றும் சொல்றாங்களே — இதிலெல்லாம் உங்களுக்கு நம்பிக்கை உண்டா?''

''கோயம்முத்தூரில் என் கையைப் பார்த்த ஒன்று இரண்டு ஜோஸியர்கள் என் உடற்கட்டைப் பார்த்து 'நீங்க மிலிட்டரிலே ஆபீஸராக வருவீங்க'ன்னும், 'இன்ஜினியரா வருவீங்க'ன்னும் சொன்னாங்களே தவிர, ஒருவர் கூட சினிமாவில் நடிப்பேன்னு சொல்லலியே! ஜோஸ்யம் சொல்ற ஆயிரம் பேரில் 999 பேர் புருடாதான் உடறாங்க. ஒருத்தர் வேணா சரியாச் சொல்லலாம். அந்த ஆயிரத்தில் ஒருவரை எங்கே போய்த் தேடறது! அதாங்க எனக்குச் சுத்தமா நம்பிக்கை இல்லாமல் போயிட்டுது. நேரம் ஒத்து வர்ற சமாசாரம் ஓரளவுக்குச் சரியாத்தான் இருக்கும் போலிருக்கு; இல்லாட்டி 1977ல் சான்ஸ் தேட ஆரம்பித்த எனக்கு ஐந்து வருஷம் கழித்தே 1982ல் முதல் சான்ஸ் கிடைத்திருக்குமா?''

''மக்கள் என் பக்கம் படத்திலும், மற்றும் சில படங்களிலும் நெகடிவ் ஹீரோவாக நடித்தது பற்றி...''

''இம்மாதிரிப் படங்களில் நான் நடிப்பதை ரசிகர்கள் மிகவும் விரும்புகிறார்கள். கொள்ளையடிப்பது, கொலை செய்வது, எல்லாம் இது போன்ற படங்களில் நியாயப்படுத்தப்படுகின்றன. அதற்கு வலுவான காரணங்கள் கற்பிக்கப்பட்டபோதிலும் கூட, ஒட்டு மொத்தமாகப் பார்க்கும் போது சமுதாயத்தில் இதுபோன்ற படங்கள் ஒரு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் எனத் தெரிகிறது. இப்படிப்பட்ட படங்களில் நடிப்பது நியாயமா, சரியா என்பது பற்றி நான் யோசித்துக் கொண்டிருக்கிறேன்.''

''ஏதாவது அரசியல் கட்சியில் சேர்ந்து சமுதாயத்துக்குச் சேவை செய்ய இருக்கிறீர்களா?''

''என்ன ஸார் விளையாடுகிறீர்களா; நான் எதுக்கு அரசியல் கட்சியிலே சேரணும்? எனக்கென்று ஒரு பாப்புலாரிட்டி இப்போது இருக்கிறது. நான் ஏதாவது கட்சியில் சேர்ந்தால், அந்தச் செயல் எடுபடாமலும் போகலாம். அப்படியிருக்க நான் ஏன் ஸார் ரிஸ்க் எடுக்கணும்? என் மனசுக்குள்ளே இருக்கிற ஒரே எண்ணம் சினிமாதாங்க...''

'''பாலைவன ரோஜாக்கள்' படத்தில் நடித்த போது உங்களைத் தி. மு. க. வோடு தொடர்புபடுத்திப் பேசினாங்களே!''

''அதெல்லாம் சரியில்லீங்க! அந்தப் படத்துலே என்னை 'புக்' செய்த போதே நான், 'தயவு செய்து நான் வரும் காட்சிகளில் பின்புறத்தில் தி. மு. க. கொடியையோ, உதயசூரியன் சின்னத்தையோ காட்டாதீர்கள்' என்று வேண்டிக் கொண்டேன். என் வேண்டுகோளை ஏற்றுச் செயல்பட்டார்கள். 'சட்டம் என் கையில்' படத்தின் வெற்றி விழாவில் கலைஞர் கையால் கேடயம் வாங்கினேன். எம். ஜி. ஆரின் கடைசிக் காலத்தில்தான் அவருடன் பழகும் சந்தர்ப்பம் கிடைத்தது. எம். ஜி. ஆர். கடைசியாகப் பார்த்த படம் 'வேதம் புதிது.' படம் முடிந்ததும் அவர் என் கைகளைப் பற்றி முத்தம் கொடுத்ததை என்னால் மறக்க முடியாது.

''ஒரு நடிகன் ஃபீல்டில் நிலைக்கணும்னு எப்படி நடந்துக்கணும்?''

''நான் உயரமா, வாட்டசாட்டமா இருப்பதற்குக் காரணம் என் பெற்றோர்களின் உபயம் என்று சொல்லலாம். ஆனால் இவை மட்டுமே என்னை ஃபீல்டில் நிலைநிறுத்தி விடாது. அழுது, சத்தம் போட்டு நடித்த காலம் மலையேறிவிட்டது. நடிப்புத் திறமை பளிச்சிடணும். மேலும், ஒரு நடிகனின் சுபாவமும் முக்கியமானது. புகழேணியில் ஏற ஏற எல்லோர் கண்களும் அவனை நோக்கியே இருக்கும். அவன் பேச்சு, செயல் எல்லாம் அவனுக்குச் சாதக பாதகங்களை ஏற்படுத்தும்.''

'''இமேஜ்' என்று சொல்கிறார்களே!''

''என்னைப் பொறுத்தவரை இமேஜ் என்ற போலி வட்டத்துக்குள் நான் இல்லை. நான் சாதாரண சத்யராஜாகத்தான் இருக்க விரும்புகிறேன். நான் ஒன்றும் கவர்ந்திழுக்கும் ஹீரோ இல்லை. என்னைச் சுற்றிக் கல்லூரிப் பெண்கள் ஓடி வருவதுமில்லை. இந்த சினிமா ஃபீல்டில் புரொடக்ஷன் சைடிலிருந்து, உதவி டைரக்டர் வரையில் பலவிதமாகப் பணியாற்றியிருக்கிறேன். 1980—களில் நான் ஏறி இறங்காத சினிமா கம்பெனி கிடையாது. எனக்கு அப்போது கிடைத்த மரியாதைக்கும், இப்போது கொடுக்கப்படும் மரியாதைக்கும் நிறைய வித்தியாசங்கள் இருக்கின்றன. இதை நான் ஏன் சொல்கிறேன் என்றால் சினிமாவில் சான்ஸ் தேடணும்னு யாராவது வந்தால், அவன் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு, யதார்த்த நிலைமைகளை ஏற்றுக் கொள்ள வேண்டும். ஏமாற்றங்களைத் தாங்கிக் கொள்ளத் தயாராக இருக்க வேண்டும். அப்போதுதான் அவன் வளர முடியும். சில்லறை வேடத்தில் நடிக்கப் போய், 'எனக்கு உட்காரத் தனியாகச் சேர் போடலையே' என்று வருத்தப்பட்டுக் கொண்டிருக்கக் கூடாது. தாழ்வு மனப்பான்மை, உயர்வு மனப்பான்மை இரண்டுமே உதவாது.

''உங்களைப் பற்றிக் கிசுகிசு எதுவும் வருவது போலத் தெரியவில்லையே!'

''என்னைப் பற்றி, எந்தவிதமான கிசுகிசு வந்தாலும் பாதிக்கப்படுவது நானாகத்தான் இருப்பேன். அதுபற்றிக் கவலை இல்லை. ஆனால் பிரபலமாக இருக்கும் ஒரு நடிகனைப் பற்றி அல்லது நடிகையைப் பற்றி நான் கேவலமாகச் சொன்னேன் என்று ஒரு கிசுகிசு வருகிறது என்றால், இதனால் பாதிக்கப்படுவது இரண்டு பேர். இதுபோன்ற கிசுகிசுக்களை நான் வெறுக்கிறேன்.''

''பல ஸீரியஸான ரோல்கள் செய்து மக்களைக் கவர்ந்துள்ள நீங்கள், 'அண்ணா நகர் முதல் தெரு' போன்ற படங்களில் நடிப்பது சரியா?''

''தெரியுமே... கேப்பீங்கன்னு தெரியும்! உங்க விமர்சனத்துலதான் 'திருஷ்டிப் பரிகாரம்' அப்படீன்னு எழுதியிருக்கீங்களே! அந்தப் படம் கதை ஒண்ணுமில்ல; காதுல பூதான். ஒத்துக்கறேன். ஆனால் நகைச்சுவையாக நடிப்பது எவ்வளவு கஷ்டம் தெரியுமா? இன்றைக்குப் பெரும்பாலான சென்டர்களில் ரசிகர்களின் ஏகோபித்த ஆதரவோடு ஓடிக் கொண்டிருக்கிறது. ஆயிரம் அடிக்கு ஒரு தரம் ரசிகனைக் கைதட்ட வைக்கிறதே அந்தப் படம்!''

'லைட்டிங்' எல்லாம் செய்துவிட்டு அடுத்த காட்சிக்கான வசனத்தைச் சொல்ல வருகிறார்கள், டைரக்டர் பிரதாப் போத்தனும், உதவியாளரும்.

''வாங்க தலைவரே'' என்று கூறி, மீண்டும் தொழிலோடு ஐக்கியமாகிறார் சத்யராஜ்.

கல்கி வாசகர்கள் சார்பில் சதம் போட அவரை வாழ்த்திவிட்டு நாமும் விடைபெறுகிறோம்.

பேட்டி: **ப்ரியன்**



புகைப்படங்கள், மேலட்டை வண்ணப் படம்: **யோகா**

இன்ஸ்பெக்டரான அப்பா விஜய் காந்தை மூன்று சமூக விரோதிகள் தீர்த்துக் கட்டுகிருர்கள். அவருடைய மனைவியான லட்சுமியின் கண்களைக் குருடாக்குகிருர்கள். இந்த ஜோடியின் பிள்ளைகளான, பிள்ளை விஜய் காந்தும், பிரபுவும் பிரிந்து, வேறு வேறு இடங்களில் வளர்ந்து ஒருவர் பேட்டை 'வாத்தியார்;' இன்னெருவர் இன்ஸ்பெக்டர். பேட்டை வாத்தியாரும் இன்ஸ்பெக்டரும் அம்மாவை அடையாளம் கண்டு இணைந்து அப்பாவைக் கொன்றவர்களுக்கு அம்மாவின் கையாலேயே தண்டனை கொடுக்கச் செய்து, அந்தச் சமூக விரோதிகளில் ஒருவன் சாகும் தறுவாயில் சுடுவ



தால் குண்டடி பட்டு அம்மா லட்சுமி சாக — போதுமடா சாமி!

ஏற்கெனவே இந்தியாவின் எல்லா மொழிகளிலும் வெளிவந்த ஒரு படத்தின் கதையை உல்டா பண்ணி, அதையே மறுபடி நம் மீது திணிக்கப் பார்க்கும் டைரக்டர் மீது எரிச்சல் தான் வருகிறது.

காலையும் நீயே மாலையும் நீயே

படத்தில் ஒரு பழைய பாட்டை ரீப்ளே செய்து அதற்கு ஒரு விசுவேஷனையும் நுழைத்துக் காட்டியிருக்கிருர்களே எதற்கு? புதுமை என்று இதைச் சம்பந்தப்பட்டவர்கள் யாராவது சொல்வார்களேயாளுல்... ஹா... ஹா... ஹா...

கண் தெரியாத லட்சுமியைத் தேடிப் பாண்டியன் வீட்டில் அலேகிருர். லட்சுமி எங்கே இருக்கிருர் என்று பாண்டியனுக்குத் தெரிவதற்குள், அல்லது பாண்டியன் எங்கே என்று லட்சுமிக்குத் தெரிவதற்குள் விளக்கு அணைந்து விடுகிறது. அடுத்த காட்சியில் லட்சுமி காரில் இருக்கிருர். பாண்டியன் காரை ஓட்டிப் போய் வில்லன்களிடம் மாட்டிக் கொண்டு அடிபடுகிருர். அப்புறம் கண் தெரியாத லட்சுமி பாண்டியனின் உதவியால் காரை ஓட்டி... ஹையோ... ஹையோ... அபத்தங்களின் சிகரம். டைரக்டரும் எடிட்டரும் ஒன்ருகச் சேர்ந்து குறட்டை விட்டிருக்கிருர்கள்.

இந்தப் படத்திற்கு இரண்டு ஹீரோயின்கள். ராதிகாவும், ரேகாவும். மற்ற படப் பிடிப்புகளில் கிடைக்கும் இடைவேளைகளில்



வந்து காமிரா முன்னுல் நின்றுவிட்டுப் போயிருக்கிருர்கள் போலும்! ப்ச்... ப்ச்.

'குக்கூ' பாட்டு பரவாயில்லே. மற்றபடி பாடல்கள் எல்லாம் ஸோ... ஸோ...

செந்தில் இருக்கிருர். சிரிப்பு இல்லே.

கண் தெரியாத லட்சுமி வசிக்கும் வீடு நன்ருக இருக்கிறது — பார்ப்பதற்கு.

டைரக்டர் இதற்கு முன் டைரக்ட் செய்த படங்கள் மூலம் ஏதாவது கொஞ்சம் நற்பெயரைச் சம்பாதித்து வைத்திருந்தால் அதை இந்தப் படத்தில் சுத்தமாகத் தொலேத்து விட்டார்.

படத்தின் தலேப்பு கவிதையாக இருக்கலாம்.

படம் சண்டிக் கழுதை போல் தெரிகிறதே, என்ன செய்ய!

— ஜெயமன்மதன்

ஃபாரெக்ஸ்®
முதலான விருப்பம்!



பாப்பா வளர்ச்சிக்கான திட உணவுகளில் பாசத்தாய் அளிக்கும் முதலிடம் ஃபாரெக்ஸ்®

தாய், தன் குழந்தைக்கு தேர்ந்தெடுக்கும் முதலான திட உணவு புதிய செழுமையான ஃபாரெக்ஸ். காரணம்:

பாப்பாவின் உடல் நலத்திற்கான புரதமும், ஜீரணத்திற்கு உகந்த கொழுப்புச் சத்தும் சரியான அளவில் கொண்டது.

பாப்பாவுக்கு ஆரோக்கியமான ரத்தத்தை தரவல்ல இரும்புச் சத்துள்ளது.

எலும்பும் பற்களும் வலுவோடு வளர்ந்திட கால்சியமும் ஃபாஸ்ஃபரஸும் 2:1 என்ற அளவில் சேர்க்கப்பட்டது.


தின்னத் தெவிட்டாதது; கலப்பதும் கொடுப்பதும் எளிது.



பால் சேர்க்கத் தேவையில்லை! நீருடன் கலந்து கொடுத்தாலே போதும்.

தாயன்பைக் கூறிடும் தரமிக்க திட உணவு ஃபாரெக்ஸ்®

CLARION/B/GX/15/203


மகளே, நினைவு வச்சுக்க. முதலில் டார்டாய்ஸ் கொசு வர்த்திச் சுருளே கொளுத்தி வைக்கணும்.
வாழ்விலே ஒரு முக்கிய உபதேசம்: கொசுத்தொல்லையிலிருந்து விடுபட டார்டாய்ஸ் கொசுவர்த்திச் சுருள்
என் மாசற்ற மேனிஎழிலின் ரகசியம், டார்டாய்ஸ் கொசுவர்த்திச் சுருள்.
சினிமா நட்சத்திரங்களை நிம்மதியாக உறங்கவைக்கும் அழகிய சாதனம்:
டார்டாய்ஸ் கொசு வர்த்திச் சுருள்
தயாரிப்பாளர்:
பாம்பே கெமிகல்ஸ் ப்ரைவேட் லிமிடெட்
போர்ட், பம்பாய்-400 023. போன்: 273831

தார்மீகக் கோபத்துடன் ஒரு மறுப்பு!

நடந்த கொடூரத்துக்குத் தூக்குத் தண்டனை போதாது!

மாயா தியாகி வழக்கில், வழக்கறிஞர் ஜோதி பாலசுந்தரம், கற்பழிப்பிலும், பிறகு கொடூரமான செயல்களிலும் ஈடுபட்ட பத்து போலீசாருக்கும் ஆயுள் தண்டனை மட்டுமே வழங்கப்பட்டிருக்க வேண்டும் என்றும், ஆறு பேருக்குத் தூக்குத் தண்டனை விதித்திருப்பது காட்டுமிராண்டித்தனமானது என்றும் கூறியிருப்பது அதிர்ச்சியைத் தருகிறது. (கல்கி, 7.2.88 இதழ்) புலந்த்ஷஹர் கூடுதல் நகர மற்றும் செஷன்ஸ் நீதிபதி விஷ்ணு தத் துபே தீர்ப்பு அளித்த உடனேயே, உத்தரப்பிரதேச உள்துறை அமைச்சர் கோபிநாத் தீட்சித், இந்தத் தீர்ப்பை எதிர்த்து உயர்நீதி மன்றத்தில் அப்பீல் செய்யப் போவதாகச் சொன்னதும், அடுத்த இரண்டே நாட்களில், ஆயுள் தண்டனை பெற்ற நால்வரையுமே, அலகாபாத் உயர் நீதி மன்றம் ஜாமீனில் ஜாலியாக விட்டு விட்டதையும் பார்க்கும் போது, 'ஆயுளுக்கும் நான்கு சுவர்களுக்குள் குற்றவாளிகள் மனத்தால் சித்திரவதை அனுபவிக்க வேண்டும்' என்று ஜோதி பால சுந்தரம் கூறியிருப்பதற்கு அர்த்தமே இல்லாமல் போய்விடவில்லையா? மிருகத்தனமாக நடந்து கொண்ட பாக்பத் போலீஸ் ஸ்டேஷன் ஆபீசர் கவுர், வெளியே சுதந்திரமாகச் சுற்றுகிறார் என்பது இன்னும் அதிர்ச்சி அளிக்கவில்லையா?

தூக்குத் தண்டனைகாட்டுமிராண்டித்தனமானதுதான். ஆனால் சம்பவத்தின் குரூரமான பின்னணியில் அல்லவா அதைப் பார்க்க வேண்டும்? ''சமுதாயம் சாகாமலிருக்க, இப்படிப்பட்ட கொடூர மனம் படைத்தவர்களுக்கு மரண தண்டனை விதிப்பதைத் தவிர வேறு என்ன வழி?'' என்று கேட்கிறார் துபே. சம்பவத்தின் குரூரமான பின்னணியைப் பாருங்கள்.

ஐந்து மாதக் கர்ப்பிணியான மாயா, தன் கணவர் மற்றும் இரு உறவினர்களுடன், தன் மருமாளின் கல்யாணத்துக்குச் சங்கல்பட்டி என்ற கிராமத்திலிருந்து கிளம்புகிறார். பாக்பத் அருகே கார் ரிப்பேராகி நின்று விடுகிறது. டயரை மட்டும் மாற்றி விட்டுக் காத்திருக்கும் போது, சாதா உடையிலிருந்த இரண்டு போலீசார் மாயாவை நெருங்கி வம்புக்கிழுத்து, கேலி செய்கிறார்கள். கணவர் ஈசுவர் சிங் தியாகி, மனைவியைச் சீண்டியவர்களிடம் சண்டைக்குப் போய் விரட்டுகிறார். போன போலீசார், படையாகத் திரும்பி வந்து மாயாவை நிர்வாணமாக்கித் தெருவில் இழுத்துக் கொண்டு போகிறபோது, ஒரே ஒருவர் மட்டும் அனுதாபப்பட்டு வீசிய மேல்துண்டைக் கூட போலீசார் பாய்ந்து தடுத்து எடுத்துக் கொண்டார்களே, அதுவல்லவா காட்டுமிராண்டித்தனம்? மானபங்கப்படுத்தி மாயாவை நிமிடம் நிமிடமாகச் சித்திரவதை செய்து சிதைத்தார்களே, அதுவல்லவா காட்டுமிராண்டித்தனம்? இத்தனை கொடுமைகளுக்கும் பிறகு, மீரட்டில் மருத்துவமனை, மருத்துவமனையாக இரவு முழுதும் அலைக்கழித்தார்களே அதுவல்லவா காட்டுமிராண்டித்தனம்? மனைவியைக் காக்கப் போன தியாகியைச் சுட்டுக்கொன்றதல்லவா காட்டுமிராண்டித்தனம்?

'தெருவில் யாருமே உங்களுக்கு உதவ முன்வரவில்லையா?' என்று கேட்ட போது, 'போலீசை எதிர்த்துக் கொண்டு செயல்பட யாருக்குத் தைரியம் இருக்கிறது?' என்றார் மாயா.

காட்டுமிராண்டித்தனமான கொடூரத்துக்கு, காட்டுமிராண்டித்தனமான தண்டனைதான் நீதிபதி வழங்க முடியும்.

— சித்தார்த்



* எட்டு வருடங்களாக பிரமை பிடித்துப் போய் அழுதவாறு இருக்கும் மாயா தியாகி.



இலங்கைப் பிரச்னையில் மத்திய அரசுக்கு முழு ஆதரவு
இலங்கைப் பிரச்னையில் மத்திய அரசுக்குத் தொடர்ந்து ஆதரவு கொடுப்போம்! எங்களை நம்புங்க! எங்களை நம்புங்க!
நேற்று
வீரமணி
எவண்டாவன்!.. அமைதிப் படையாம்.. அமைதி. அமைதிப் படை ஈழத் தமிழனைத் தொட்டீங்க!.. கீசிடுவேன்.. ஜீவி!
இன்று
ஹரா.. ஹரா.. தமிழ் தேசம் துவங்காமெ மலை ஏற மாட்டேண்டா!.. ஹரா ஹரா!
வீரமணி
நீ அடிச்ச கொள்ளையாலே தான் தமிழ் நாடு அரசு திவால் ஆயிடுச்சு!
அதிமுக கோப்புகள்
தமிழக அரசு
நீ மாத்திரம் யோக்யனா?



கல்கி

1988 பிப்ரவரி 14
மலர்: 46 இதழ் 29
பிரபவ மாசி 2



தமிழக காங்கிரஸின் தலைவிதி மாறுமா?

தமிழகத்தின் இன்றைய நிலைமையை ஆராயவும் கட்சியின் எதிர்காலத் திட்டத்தை வகுக்கவும் இரண்டு முக்கியஸ்தர்களை இங்கு அனுப்பி வைப்பதாகக் காங்கிரஸின் மத்தியத் தலைமை நிர்மானித்தது. அவர்கள் கே. என். சிங்கும், கருணாகரனும் என்று அறிவித்தது. இதுவரை சரி. ஆனால் கருணாகரன் இங்கு வந்து சேர்வதற்கு முதல் நாளே, திருவனந்தபுரத்தில் பத்திரிகையாளர்களைச் சந்தித்து, 'அ. தி. மு. க. வுடன் கூட்டணி என்பது ஒப்புக் கொள்ளப்பட்ட விஷயம்' என்றும் 'இனி பின்வாங்குவதற்கில்லை' என்றும் கூறியிருக்கிறார். அதுமட்டுமல்ல, 'ஜெயலலிதா அணிதான் மெய்யான அ. தி. மு. க.' என்றும், 'அவர்தான் எம். ஜி. ஆரின் வாரிசு என்றும் நம்ப இடமிருக்கிறது' எனவும் பேசியிருக்கிறார்.

இவ்வாறு முன் கூட்டியே ஒரு முடிவுக்கு வந்த பிறகு, தமிழகத்துக்கு வருவது, இங்குள்ள காங்கிரஸ்காரர்களைக் கலந்தாலோசிப்பது, சூழலை ஆராய்ந்து ஒரு திட்டத்தை வகுப்பது என்ற கண்துடைப்பு நாடகமெல்லாம் எதற்காக? தமிழக காங்கிரஸ் தலைமைப் பதவி, மறுபடியும் ஒரு நியமனமாகத்தான் இருக்கப் போகிறது என்றால் இங்கு வந்து அபிப்பிராயங்களைக் கேட்டறிவது எதற்காக?

எம். ஜி. ஆர். மறைந்ததும் 'ஒன்றுபட்ட அ.தி.மு.க.வுக்கே எங்கள் ஆதரவு' என்று அர்த்தமில்லாத வார்த்தைகளைப் பேசியது காங்கிரஸ் தலைமை. அ.தி.மு.க. ஒன்றுபட்டிருந்தால் இவர்கள் ஆதரவு எதற்கு? தேவையே இல்லையே! மேலும் அ.தி.மு.க. பிளவுபட்டிருப்பது நிதர்சனம் என்னும் போது, 'ஒன்றுபட்ட அ.தி.மு.க.வுக்கு ஆதரவு' என்று பேசுவதில் அர்த்தமென்ன? ஜானகிக்கு ஆதரவு என்று நம்ப வைத்துப் பிறகு காலைவாரிவிட்ட அதே குழப்ப சிந்தனை தொடர்ந்து காங்கிரஸைப் பிடித்து ஆட்டுவிக்கிறது.

அ.தி.மு.க. உடைந்ததும் பொழிந்த வசைமாரிகள்; நடந்த சடுகுடு விளையாட்டுக்கள்; தாவல் நாடகங்கள்; அடிதடி சண்டைகள் போன்ற எதுவுமே காங்கிரஸின் கண்களைத் திறந்து வைத்ததாகத் தெரியவில்லை. பரஸ்பரக் குற்றச்சாட்டுக்களைப் பார்த்தால் 'அ.தி.மு.க. வின் இருதரப்பிலும் யோக்கியமான தலைவரே யாருமில்லை' என்ற முடிவுக்குத்தான் வரவேண்டியிருக்கும். 'ஒரு கூடை செங்கல்லும் பிடாரி' என்ற வழக்குத்தான் நினைவுக்கு வரும். அவ்வாறிருந்தும் காங்கிரஸோ, மறுபடி ஜெயலலிதா முன் கைகட்டி நிற்கவே தயாராகி வருகிறது. இது பாரம்பரியம் மிக்க அந்தக் கட்சிக்கு மானக்கேடு.

சுயபலத்தை வளர்த்துக் கொள்ளாமல் இந்நாள் வரை ஒட்டுண்ணியாகச் செயல்பட்டு வந்ததாலேயே, காங்கிரஸ் ஒரு லட்சியமோ, திட்டமோ இன்றிப் பொழுது போகாமல் உட்பூசல்களை வளர்த்துக் கொண்டிருந்தது. நல்லதொரு லட்சியமும் அதை அடையச் சிறந்ததொரு திட்டமும் வழங்கப்பட்டால் காங்கிரஸ் ஊழியர்களும் தலைவர்களும் சுறுசுறுப்பாகச் செயலாற்றுவார்கள். இந்த லட்சியத்தையும், திட்டத்தையும் இன்று தமிழக காங்கிரஸுக்கு வழங்கக் கூடியவர் மூத்த தலைவர் மூப்பனார் ஒருவரே. ப. சிதம்பரத்தின் ஆற்றல் ஆட்சியில் பிரகாசிக்கலாம்; கட்சியில் அல்ல. கட்சித் தலைமை, காமராஜ் பாணியில் தொண்டர்களைத் தட்டிக் கொடுத்து வேலை வாங்க வேண்டும்; ஒற்றுமையை வளர்த்து, நல்லாட்சி என்ற லட்சியத்தை நோக்கி நல்லதொரு திட்டத்துடன் முன்னேற வேண்டும்; தனித்தன்மை கொண்ட சீரிய கொள்கைகளை மக்கள் பார்வைக்கு வைக்க வேண்டும்.

'எம். ஜி. ஆர். அனுதாப அலையைப் பயன்படுத்திக் கொள்ளலாம்' என்ற குறுகிய நோக்கு உதவாது. தேர்தல் தள்ளிப் போடப்பட்டாலும் பாதகமில்லை. ஏன், அடுத்து வரும் தேர்தலில் தோற்றாலும் கவலையில்லை. அதற்கு அடுத்த தேர்தலில் வழிபிறக்கும் என்ற நம்பிக்கை வேண்டும்.

காங்கிரஸ் தன்னந்தனியாக, தன் கால்களில் நின்று பழகட்டும். இன்றைய வாய்ப்பை நழுவ விட்டு விட்டால் மீண்டும் கிடைக்காது.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.

"சீதா...! சீதம்மா... என் கண்ணே..." ஒரு குழந்தையைக் கொஞ்சும் குழைவுடன், பரிவுடன் காப்டன் சுந்தரத்தின் குரல் ஒலித்தது. அவரது வலிமை வாய்ந்த கரங்களில் பூப்பந்து போல் சுருண்டு படுத்துக் கொண்டு, அவரது வருடலைச் சுகித்துக் கொண்டிருந்த சீதம்மா., மெள்ளத் தன் சிறு கோலி குண்டுக் கண்களைத் திறந்து 'மியாவ்' என்றாள்!

"சீதம்மா பிறந்த சில தினங்களுக்குள் அனாதையாக என்னிடம் வந்து சேர்ந்தாள். அவளுடன் வந்த மற்ற தம்பி தங்கைகளை வளர்த்துப் பொறுப்பான கைகளில் ஒப்படைத்து விட்டேன். சீதாவுக்குத்தான் இன்னும் ஒரு வீடு அமையவில்லை..." என்றார் காப்டன் சுந்தரம். தொடர்ந்து தாமும் தமது குடும்பத்தாரும் சீதாவையும், அவளுடன் பிறந்த மற்ற பூனைக் குட்டிகளையும் வளர்த்த விதத்தை விளக்கினார்:

"அந்தப் பருவத்தில் பூனைக் குட்டிகளுக்குத் தாய்ப்பால் தவிர வேறு எதுவும் உட்கொள்ளத் தெரியாது. எனவே, அந்த அனாதைக் குட்டிகளுக்கு ஃபீடிங் பாட்டிலில் பால் புகட்டி வளர்த்தோம். நம் குழந்தைகள் பயன்படுத்தும் பாட்டில்கள் பூனைக் குட்டிகளுக்கு மிகவும் பெரிது என்பதால் அயல் நாட்டிலிருந்து குழந்தை மிருகங்களுக்கென்று பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்ட ஃபீடிங் பாட்டில்களை வரவழைத்துப் பால் புகட்டினோம். மாட்டுப் பால், குட்டிகளுக்கு ஒத்துக் கொள்ளாது. அதனால் அவற்றின் தாய்ப்பாலைப் போல் கிட்டத்தட்ட அமைந்துள்ள ஒரு பிரபல குழந்தை உணவை வாங்கிக் கரைத்துக் கொடுத்தோம்..."

காப்டன் சுந்தரம் பேசிக் கொண்டிருந்த போதே மற்றொரு பூனை அவர் வீட்டின் இன்னோர் அறையிலிருந்து ஓடி வந்தது.

"இதற்குக் கண் பார்வை நாளுக்கு நாள் மங்கிக் கொண்டே வருகிறது... இருந்தாலும் பழக்கம் காரணமாக இந்த வீட்டின் மூலை முடுக்குகளிலெல்லாம் இடித்துக் கொள்ளாமல் நடமாடும்" என்றார் சுந்தரம். "நாங்கள் வளர்க்கும் பூனைகள் எல்லாமே மனிதர்களைக் கண்டு பதுங்குவதோ, பயந்து விலகுவதோ இல்லை — மிகுந்த நட்புணர்வோடு தைரியமாய் எல்லோரையும் அணுகும்" — என அவர் முடிப்பதற்குள் சீதா என்ற பூனைக் குட்டி. மிகுந்த உரிமையோடு நம் உடைகளைப் பற்றிக் கொண்டு நம் மடி மீது ஏறி உட்கார்ந்து கொண்டது! சீதாவை மெள்ளக் கீழே இறக்கி விட்டுவிட்டு காப்டன் சுந்தரத்தினிடம் விலங்குகளிடத்தில் இவ்வளவு ஆழ்ந்த ஈடுபாடு அவருக்கு எப்படி ஏற்பட்டது என்று கேட்டறிந்தோம்.

"முப்பத்தாறு வருடங்கள் இந்திய அரசின் ஊழியனாக விமானம் ஓட்டும் பணியில் இருந்தேன். அந்த முப்பத்தாறு வருடங்களில் இருபதாயிரம் மணி நேரங்கள் ஆகாயத்தில் கழிந்தன. அந்த நாளில் இப்போது உள்ளது போன்ற நவீன விமானங்கள் கிடையாது. அதனால் ஒவ்வொரு 'பிளைட்'டும் ஒரு கண்டமாகத்தான் கருதப்பட்டது. என் சக ஊழியர்களுள் சிலர்

காப்டன் சுந்தரம்



விலங்குகள் நலனுக்குப் போராடும் விமானி!




* ப்ளூ க்ராஸ் ஆம்புலன்ஸ்

விமான விபத்துக்களில் மாண்டனர். ஆனால் நான் ஓட்டிய போது ஒரு விபத்தும் நேரவில்லை, ஒரு சிறு காயம் கூட எனக்கு ஏற்படவில்லை! இதைஎனதுபேரதிர்ஷ்டமாக வும் கடவுள் எனக்கு அருளிய கிருபையாக வும் கருதினேன். என் மீது காட்டப்பட்ட கருணையையும் அன்பையும் நான் பதிலுக்கு யாரிடமாவது காண்பித்தே ஆக வேண்டும் என்று எனக்குள்ளே ஓர் உந்துதல் ஏற்பட் டது. யோசித்தேன்... மனிதர்களிடம் அன்பு காட்டி நேசிக்க ஏற்கெனவே சிலர் இருக்கி றார்கள் — ஆனால் வாயில்லா ஜீவன்களிடம் அன்பைப் பொழியத்தான் யாருமே இல்லை. அதனால் விலங்குகளிடம் அன்பு செலுத்தி, அவற்றின் ஒரு பிரதிநிதியாக விளங்க வேண்டும் எனத் தீர்மானித்தேன். சென் னையில் ப்ளூ கிராஸ் ஆஃப் இந்தியா என்ற பிராணிகள் நல சங்கத்தை நிறுவினேன்" என்றார் எழுபத்தொரு வயதான காப்டன் சுந்தரம்.

விமானியாகப் பணிபுரிந்த போதே அவருக்கு அந்த வாயில்லா ஜீவன்களிடம் பரிவும் பற்றுதலும் அபரிமிதமாக இருந் தன. ஒரு முறை ஹைதராபாத் விமான நிலை யத்தில் சுந்தரம் ஓட்டி வந்த விமானம் பழு தாகிவிட்டது. விமானத்தைச் சரி செய்ய இரண்டு மணி நேரமாகும் என்றார்கள். அதற்குள் நகருக்குள் சென்று வரலாம் என்று புறப்பட்டனர் விமானம் ஓட்டும் குழு வினர். நகருக்குள், ஆஸ்பெஸ்டாஸ் தகடு களைச் சுமந்து செல்லும் ஒரு மாட்டு வண்டி யைப் பார்த்தார் சுந்தரம். தகடுளின் கூரிய முனை மாட்டின் பின்புறத்தில் உரசி, உரசி ஆழமான காயத்தை ஏற்படுத்தியிருந்தது. வண்டியைச் செலுத்தியவன் மாட்டின் துன்பத்தைப் பொருட்படுத்தாமல் அதை விரட்டிக் கொண்டிருந்தான். சுந்தரத்தால் இதைச் சகித்துக் கொள்ள முடியவில்லை. வண்டிக்காரனிடம் சண்டைக்குப் போய் விட்டார். அவனோ, 'உன் வேலையைப் பார்த் துக் கொண்டு போ!' என அலட்சியமாய்க் கூறிவிட்டான். 'என் வேலை இந்த வாயில்லா ஜீவன்களுக்காகப் போராடு வதுதான்' என்று கங்கணம் கட்டிக் கொண்டு, நேரே காவல் நிலையத்துக்குப் போய்ப் புகார் செய்தார் சுந்தரம். காவல் துறை அதிகாரி வந்து நடவடிக்கை எடுத்து, வண்டி மாட்டைத் துன்பத்திலிருந்து மீட்கும் வரை சுந்தரத்துக்கு விமானத்தின் நினைவு வரவேயில்லை. அன்று அவரது விமானம் ஆறு மணி நேரம் தாமதமாகப் புறப்பட்டது! ஆனால் அதற்கு அறிவிக்கப்பட்ட அதிகார பூர்வமான காரணம் — இயந்திரக் கோளாறு! சுந்தரத்தின் தார்மீக உத்வேகத்தைப் புரிந்து கொண்ட அவருடைய மேலதிகாரிகள் அவர் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

மற்றும் ஒரு முறை, சென்னை விமான நிலையம் நோக்கிப் போய்க் கொண்டிருந்த சுந்தரம், தாள முடியாத சுமையை இழுத்துக் கொண்டிருந்த ஒரு வண்டி மாட்டுக்காக வக்காலத்து வாங்கப் போனார். அன்றைக்கு முதல்வர் காமராஜ் உள்படப் பல பிரயாணி கள் அசௌகரியத்துக்கு உள்ளானார்கள். நல்ல வேளை, இது போன்ற சம்பவங்கள் மிக அபூர்வமாகவே நடந்தன.

காப்டன் சுந்தரம் நிறுவிய ப்ளூ கிராஸ் சுமார் இருபத்தைந்து வருடங்க ளாகச் சென்னையில் இயங்கி வருகிறது. இந்தியாவின் மிகப் பெரிய பிராணி நலச் சங்கங்களுள் ஒன்று இது. சென்னை அடை யாற்றில் உள்ள இந்தச் சங்கம் தற்போது சுமார் இருபது கால்நடைகளையும், ஐம்பது நாய்களையும் பராமரித்து வருகிறது. இவை தவிர ஏராளமான பூனைகளும் இருக்கின் றன. இந்த விலங்குகள் எல்லாமே அனாதர வாய், சென்னையிலும் சுற்றுப்புறங்களிலும் திரிந்து கொண்டிருந்தவை. இவற்றைப் பரா மரிக்கவே சங்கத்துக்கு மாதம் இருபத்தையா யிரம் ரூபாய் செலவாகிறது. இச்சங்கத் திற்கு மத்திய, மாநில அரசுகள் ஆண் டொன்றுக்குத் தலா ஒரு லட்சம் ரூபாய் நிதி வழங்குகின்றன. தவிர, உறுப்பினர் சந்தா மற்றும் நன்கொடை என்று சிறு தொகைகள் சங்கத்துக்குக் கிடைக்கின்றன. ஆனால், ஆதரவு வேண்டும் விலங்குகளின் எண்ணிக்கையோ பிரமிக்க வைப்பதாக உள்ளது. எனவேதான் இச்சங்கம், தம்மிடம் வந்து சேரும் பூனை, நாய் போன்ற வற்றை, விலங்குகளிடம் உண்மையான அன்பு உள்ளவர்களிடம் செல்லப் பிராணி களாக வளர்க்கக் கொடுக்கிறது. அதோடு இளைஞர்களை உறுப்பினர்களாகக் கொண்ட



* விலங்குகளுக்கு மருத்துவ வசதி



"நம்ம கட்சி ரெண்டாப் பிரிஞ்சதிலே ருந்து வெளியே தலைகாட்ட முடியலே!"

"ஏன், நீங்க எந்த கோஷ்டின்னு கேட்டு மானத்தை வாங்கறாங்களா?"

"அப்படிக் கேட்டாப் பரவாயில்லையே! 'நீங்க என்ன அஞ்சு லட்சமா, அல்லது பத்து லட்சமா'ன்னுல்ல கேட்கிறாங்க!"

— டி. எஸ். சீதாராமன்.

கருணைச் சங்கங்களை ஆரம்பித்து, விலங்குகளிடம் அன்பும் ஆதரவும் காட்ட வேண்டும் என்ற கருத்தைப் பரப்புகிறது. விலங்குகளுக்கான மருத்துவ வசதி, நாய், பூனை ஆகியவற்றுக்குக் குடும்பக் கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சை செய்யும் வசதி, தடுப்பூசி போடுவது போன்றவற்றையும் ப்ளூ க்ராஸ் செய்து வருகிறது. விலங்குகளுக்கென்று ஓர் ஆம்புலன்ஸ் வண்டியும் தயாராய் ப்ளூ கிராஸில் நிற்கிறது.

ஹவாயியைச் சேர்ந்த வாடமுல் ஃபவுண்டேஷன், விலங்குகள் நலனுக்காகச் சுந்தரம் செய்துள்ள சேவைகளைப் பாராட்டிச் சமீபத்தில் தங்கப் பதக்கம் அளித்திருக்கிறது.

"விலங்குகளால் மனிதர்களின் துணையின்றி இயற்கையில் உயிர் வாழ முடியும்... ஆனால் மனிதனால் அவற்றின் உதவியை ஏதேனும் ஒரு வடிவத்திலாவது நாடாமல் அன்றாட வாழ்க்கையை நடத்த முடியுமா...? யோசித்துப் பாருங்கள். இந்தப் பிரக்ஞை இருந்தால் யாரும் மிருகங்களை அலட்சியமாக நடத்த மாட்டார்கள்," என்று சொன்ன காப்டன் சுந்தரம் மற்றொரு விஷயத்தையும் வருத்தத்தோடு குறிப்பிட்டார்.

"சில வருடங்களுக்கு முன் சென்னை ரேஸ் கிளப் ஒரு ஆம்புலன்ஸ் வண்டியை ப்ளூ க்ராஸுக்கு வழங்க முன்வந்தது. அப்போதைய போலீஸ் டி. ஜி. பி. அதைக் காவல் துறைக்குக் கொடுத்தால் இருபத்திநாலு மணி நேரமும் அதைப் பொது மக்கள் பயன்படுத்திக் கொள்ள முடியும் என்று கூறி, அதைக் காவல் துறைக்கே வழங்கச் செய்தார். ஆனால் அந்த ஆம்புலன்ஸ் சரியான கவனிப்பின்றிப் பழுதாகி, அவசரத்துக்கு உதவாமல் வீணாகிக் கொண்டிருக்கிறது!"

காப்டன் சுந்தரம் பேசிக் கொண்டிருந்த போதே, தமக்கு ஒரு பூனைக் குட்டி வேண்டும் என்று கேட்டுக் கொண்டு ஒருவர் வந்தார். "வீட்டில் எலித் தொல்லை..." என்று இழுத்த அவரிடம் தம் சீதாவை ஒப்படைக்க மனமில்லை சுந்தரத்துக்கு. அவரை அனுப்பி விட்டு,

"எலியை ஒழிக்க ஒருவர் பூனை வளர்த்தால், அவை ஒழிந்த பிறகு பூனையைக் கவனிக்க மாட்டார். பூனை வளர்ப்பதற்கு அவர் சொன்ன காரணம் எனக்குச் சரியானதாகப் படவில்லை. உண்மையான ஈடுபாடு இல்லாதவரிடம் என் சீதாவை எப்படிக் கொடுப்பேன்?" என்றார் சுந்தரம்!

— சீதா ரவி

புகைப்படங்கள்: கே. வி. ஆனந்த்

அந்த இதழில்...



இன்றையச் சூழலில் தி. மு. க.

— கருணாநிதி சிறப்புப் பேட்டி

இல்லத்துணைவிக்கென எதிர்நோக்கிக் காத்திருக்கும் மணமகன்... நூறு ஆண்டுகளுக்கு முன்னால்.



நூறு ஆண்டுகளுக்கு முன்பாக எடுக்கப்பட்ட இந்த புகைப்படம்
ஹைதராபாத்தைச் சேர்ந்த திரு. லாலா தீன்தயாள் அவர்களின் கலைவேலைகளில் இருந்து

இன்றும் அத்தோற்றத்தைப் பசுமையாக நினைவுகூர வைப்பது பிளாக் & ஒயிட் படங்களே !

உங்கள் குடும்ப போட்டோ ஆல்பத்தைப் புரட்டிப் பாருங்கள்!

பல்லாண்டுகளுக்கு முன் எடுத்த பிளாக் & ஒயிட் படங்கள் இன்றும் கருக்கழியாமல், மங்காமல் இருப்பதைக் காண்பீர்கள்.

அதுவே பிளாக் & ஒயிட் படங்களின் சிறப்பு! அறுபது, எழுபது ஏன் எண்பது வருடங்களானாலும் மங்காது. சொல்லவும் வேண்டுமா?

காலத்தை வென்றிடும் பிளாக் & ஒயிட் படங்களே உங்களது தேர்வாக இருக்க முடியும்.



அழியாத நினைவுகளுக்கு காலத்தால் அழியாத பிளாக் & ஒயிட் படங்கள் !

இந்து பிளாக் & ஒயிட் ரோல் பிலிம் மற்றும் ப்ரோமைடுகள்.

* எம். செல்லையா, சாத்தூர்.

? ஹண்டே ராஜினாமா பற்றி?

! அவர் ராஜினாமா பற்றி இப்போது சொல்ல என்ன இருக்கிறது? குட்டிக்கரணம் அடித்து மறுபடி ஜெயலலிதா கோஷ்டியில் சேர்ந்து விட்டாரே! 'ராஜாஜி இப்போது இருந்தால் என்னை வாழ்த்தி ஆசி வழங்குவார்' என்று அறிக்கை விடாமல் இருந்தாலே போதும்!

* ஜி. பாலகிருஷ்ணன், விசலூர்.

? சிவாஜி கணேசன் காங்கிரஸை விட்டு விலகியதால் நஷ்டம் சிவாஜிக்கா? காங்கிரஸ் கட்சிக்கா?

! நஷ்டம் காங்கிரஸ் கட்சிக்கு. பிரச்னைகள் தோன்றப் போவது சிவாஜிக்கு.

மோசடி இல்லாத அரசு வியாபாரமே கிடையாதா?



• குட்டிக்கரணம்

* போத்தனூர் புலிச்சோழன், கோவை.

? தாம் ஆட்சிக்கு வந்த பிறகு பொருளாதார நிலைமை அபிவிருத்தி அடைந்துள்ளதாக ராஜீவ் சொல்வது குறித்து?

! யாருடைய பொருளாதார நிலைமை? நாட்டினுடையதா? காங்கிரஸ் கட்சியினுடையதா? அல்லது ராஜீவின் நண்பர்களுடையதா?

* எஸ். ராம்கோபால், சென்னை — 33.

? என்ன ஸார், கோபுலு எங்கே? இப்போதெல்லாம் எதிலும் பார்க்க முடிவதில்லை?

! கலைஞரின் பொன்னர் சங்கரையும் தேவனின் துப்பறியும் சாம்புவையும் நீங்கள் படிப்பதில்லையா, என்ன? 'ஆட்வேவ்' விளம்பர நிறுவன அதிபரான கோபுலுவுக்கு இதற்குமேல் பத்திரிகைகளுக்கு ஓவியப் பணியாற்ற நேரமிருப்பதில்லை.

* எம். சம்பத், வேலாயுதம்பாளையம்.

? 28.1.88 அன்று தமிழக சட்டசபையின் கௌரவத்தை — நற்பெயரைக் குழி தோண்டிப் புதைத்த கலவரங்களுக்கு உண்மையான காரணகர்த்தா யார்?

! இ. காங்கிரஸ்தான். 'அ. தி. மு. க. பிளவு பட்டு இருப்பதால் அந்த இருதரப்பினருக்குமே சட்டசபையில் எங்கள் ஆதரவு கிடைக்காது' என்றோ அல்லது 'ஜெயலலிதா கோஷ்டிக்குத்தான் எங்கள் ஆதரவு' என்றோ ஆரம்பத்திலேயே தெளிவாகக் கூறியிருந்தால் ஜானகி அமைச்சரவையே அமைந்திருக்காது. நேரடியாக ஜனாதிபதி ஆட்சி வந்திருக்கும். எல்லாவிதமான அசம்பாவிதங்களும் தவிர்க்கப்பட்டிருக்கும். ஆனால் அப்படி இ. காங்கிரஸ் சொல்லாததும் ஒரு விதத்தில் நல்லதாயிற்று! ஏனெனில் இவ்விரு கட்சியினரின் உண்மை சொரூபங்களை இதனால்தானே மக்கள் புரிந்து கொள்ள முடிந்தது!

* ஆற்காடு எழிலன், திருச்சி.

? பி. எச். பாண்டியன் என்றதும் உங்கள் நினைவுக்கு வருவது என்ன?

! அதிகாரங்கள் இல்லாவிட்டாலும் அவர் இன்னும் அவைத் தலைவராக நீடிக்கிறார் என்ற செய்தி. இதற்குப் புதுதில்லி உடனடியாகப் பரிகாரம் காண வேண்டியது அவசியம்.

* சுவாதி செந்தில்குமார், திருமங்கலம்.

? முதல்வர் ஜானகி எம். ஜி. ஆர்.; ஜானகி ராமச்சந்திரன் எந்தப் பெயர் பொருத்தம்?

! அவர் முந்நாள் முதல்வர் ஆகிவிட்டார் என்பது ஒருபுறமிருக்க, "இருபத்தி நாலு நாள் முதல்வர்" என்ற பெயரே பொருத்தமாய் இருக்கும்.

* ஆர். பி. திருஞானம், கொரட்டி.

? குடியரசு தின அணிவகுப்பில் காவல் துறையினரின் சாதனை அலங்கார வண்டியில் எம். ஜி. ஆரின் இறுதி ஊர்வலக் காட்சிகளை ஓவியமாகத் தீட்டி எடுத்துச் சென்றனரே. இது சரியா?

! முற்றிலும் தவறு. எம். ஜி. ஆரின் மரணம் போலீஸாரின் சாதனையாகி விடாது. மேலும் அன்றைய தினம் சட்ட ஒழுங்கைக் காப்பாற்ற முடியாமல் போலீஸ் துறை திணறியது என்பதால் மேற்படி அலங்கார வண்டியானது பொருத்தமற்றதாக மட்டுமின்றி அநாகரிகமாகவும் கருதப்பட வேண்டியது.



இதற்கு ஜானகி தலைமையிலான தமிழக அரசு முதல் பரிசு வழங்கியது அபத்தங்களில் தலையாயது.

* இடலை சுதா, குளத்தூர்.

? எம். ஜி. ஆர். காலத்தில் நடந்த முறை கேடுகள் எல்லாம் இப்போது ஒவ்வொன்ருக அம்பலமாவதைப் பார்த்தீர்களா?

! இரு கோஷ்டியினரும் பரஸ்பரம் சுமத்தியுள்ள குற்றச்சாட்டுக்களை விசாரித்து உண்மைகளைக் கண்டறிய மத்திய அரசு ஒரு கமிஷனை நியமிக்க வேண்டும். எம். ஜி. ஆர். மறைவுக்குப் பிறகு நடந்த முறைகேடுகளும் கொஞ்சநஞ்சமல்ல. எம். எல். ஏக்களை விலைக்கு வாங்க நடந்த முயற்சிகளையும் அதற்கு அவ்வளவு பணம் எங்கிருந்து வந்தது என்பதையும் ஸி. பி. ஐ. ஆராய வேண்டும். ஆனால் மத்திய அரசே ஊழலில் மிதக்கும்போது இதிலெல்லாம் கவனம் செலுத்தவா போகிறது!

* ஏ. கிரி, மேலக்காவேரி.

? 28.1.88 அன்று சட்டசபையில் சபா நாயகர் பாண்டியன் செயல் குறித்து?

! கட்சித்தாவல் சட்டத்தை அதன் நோக்கங்களுக்கு மாருகவும் விதி முறைகளுக்குப் புறம்பாகவும் அவர் துஷ்பிரயோகம் செய்திருக்கிருர் என்பது தெளிவு. மீண்டும் இன்னெரு பாண்டியன் இன்னெரு சட்டசபையில் தோன்ற மாட்டார் என்பது என்ன நிச்சயம்? எனவே கட்சித் தாவல் சட்டத்தில் தேவையான திருத்தங்கள் செய்து பாண்டியன் போன்றவர்களால் அநீதிகள் நிகழாமல் மக்கள் பிரதிநிதிகளுக்குப் பாதுகாப்புத் தருவது அவசியமாகிறது.

* வி. சங்கரராமன், பம்மல்.

? ஐந்நூறு ரூபாய் நோட்டில் காந்தி படம் இடம் பெறப் போவது பற்றி?...

! கறுப்புப் பணமாகவும், லஞ்சமாகவும் அந்த நோட்டு பயன்படப் போகிறதே என்ற உங்கள் வருத்தத்தை நானும் பகிர்ந்து கொள்கிறேன். ஆனல் காந்தியை அறிந்தவர்களுக்கல்லவா அவரை அவமதிக்கிருேமோ என்ற உணர்வு தோன்றப் போகிறது? ஜனவரி 30—இல் காந்தி திரைப்படத்தின் ரீல்களை மாற்றிப் போட்டுக் குழப்பியதிலிருந்தே புரியவில்லையா, இன்று காந்தியை அறிந்தவர்களே அரசில் இல்லை என்று!

* கே. இந்து குமரப்பன், விழுப்புரம்.

? தமிழ்நாட்டில் மோசடியில்லாத அரசு வியாபாரமே கிடையாதா?

! இந்தியாவிலேயே கிடையாது! லேட்டஸ்ட்டாக ஒன்று: வி. ஐ. பிக்களுக்காக ஆறு ஹெலிகாப்டர்களை 48 கோடி கொடுத்து வாங்கிய மத்திய அரசு இப்போது அவை போதிய வசதிகள் உள்ளவை அல்ல என்று அரசுத் துறை நிறுவனமான ஹெலிகாப்டர் கார்ப்பரேஷன் தலையில் கட்டப் பார்க்கிறது. இந்த நிறுவனம், தன்னிடம் ஏற்கெனவே உள்ள ஹெலிகாப்டர்களுக்கே உபயோகமில்லாமல் அவை துருப்பிடித்துக் கொண்டிருக்க, இந்தப் புதிய ஹெலிகாப்டர்களை வைத்துக் கொண்டு என்ன செய்வது என்று புரியாமல் திணறுகிறது! மக்களின் வரிப் பணம் விரயமாகும் வகை பார்த்தீர்களல்லவா?

* ரூ. 15 பரிசு பெறுபவர்:

ஆர். பி. திருஞானம்,
கொரட்டி அஞ்சல்,
(வழி) திருப்பத்தூர்,
வட ஆற்காடு (மாவ.)

தன்னம்பிக்கை



ஒவ்வொரு மனிதனும் முதலில் தன்னிடம் நம்பிக்கை வைக்க வேண்டும். என்னால் இயலாது என்று ஒரு நாளும் சொல்லாதீர்கள். நீங்கள் வரம்பில்லா வலிமை பெற்றவர்கள். எதையும், எல்லாவற்றையும் சாதிக்கும் ஆற்றல் படைத்தவர்கள் நீங்கள்.

மனித வரலாற்றை முழுவதும் பார்க்கும் போது ஆணோ, பெண்ணோ வரலாற்றில் சிறப்புடன் விளங்கினார்கள் என்றால் அதற்கு முக்கியக் காரணம் அவர்களது தன்னம்பிக்கைதான் என்று சுவாமி விவேகானந்தர் வீர முழக்கமிடுகிறார்.

ஆனால் நம்மில் பலர் ஓரளவு கல்வித் தகுதியிருந்தும் மற்றவர்களிடம் ஆங்கிலத்தில் பேசத் தயங்குகிறார்கள்.

தவறாகப் பேசி விடுவோமோ என்ற பயமும், முறையான பயிற்சியின்மையுமே இத்தயக்கத்திற்கான முக்கியமான காரணங்களாகும்.

உங்களது இத்தயக்கத்தைப் போக்கி நீங்கள் ஆங்கிலத்தில் சரளமாக உரையாட, இலக்கணப் பிழையின்றி கடிதங்கள், கட்டுரைகள் எழுத விவேகானந்தா கல்வி நிலையத்தினர் தபால் மூலம் மிகச் சிறந்த முறையில் பயிற்சியளித்து வருகிறார்கள். நேர்முகப் பயிற்சியும் உண்டு. இப்பயிற்சியைப் பற்றி மேலும் தகவல் அறிய விரும்புவோர் கீழ்க்கண்ட முகவரிக்குக் கடிதம் எழுதி இலவசமாக தகவல் புத்தகத்தைப் பெற்றுப் பயிற்சியில் சேர்ந்து பயன் பெறலாமே!

விவேகானந்தா கல்வி நிலையம் (Regd)

9, மேட்லி ரோடு, தி. நகர், சென்னை-600 017



• செயற்கை மருந்து—ஆஸ்துமா நோயாளிக்குஸ்ப்ரே மருந்து. காற்றை உள்ளிழுக்கும் போது வாயு ரூபத்தில் மருந்து ஸ்ப்ரே செய்யப்படுகிறது.

ஆஸ்துமாவைக் கண்டு அஞ்சவேண்டாம்

ஜாதகம் நன்றாகப் பொருந்தியிருக்கிறது. பெண்ணும் மாப்பிள்ளையும் சந்தித்து, கல்யாணத்துக்குச் சம்மதம் தெரிவித்தாயிற்று... ஆனால் மாப்பிள்ளையின் அம்மா கல்யாணத்துக்கு ஒப்புக் கொள்ள மறுக்கிறார்... காரணம் கேட்டால்... பெண்ணுக்கு ஆஸ்துமாவாமே! அவளைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு என் மகன் ஆயுசெல்லாம் கஷ்டப்படணும்! வேண்டாமே... வேறு நல்ல இடமா கிடைக்காது...' என்கிறார். வேறு சில பெற்றோர்கள் மகளுக்குத் திருமணம் தடைபட்டுவிடுமோ என்கிற பயத்தில் அவளுக்கு ஆஸ்துமா இருப்பதை ஒரு பெரிய ரகசியமாகவே கட்டிக் காக்கின்றனர்!

உண்மையில் ஆஸ்துமா ' அவ்வளவு கொடிய, ஆபத்தான நோய் அல்ல. இன்னும் சொல்லப் போனால் அது உடல் இயங்கு இயலில் உள்ள ஒரு மாறுபாடுதானே யொழிய,கிருமிகளால் பரவும் வியாதியோ அல்லது தொற்று நோயோ அல்ல. காச நோய் போல் ஒட்டுவாரொட்டி என்றோ கான்ஸரைப் போல் உயிர்க் கொல்லி என்றோ ஆஸ்துமாவைக் கருதுவது அறியாமையின் உச்சம்! சிலரது நுரையீரலில் உள்ள காற்றுக் குழாய்களில் உண்டாகும் இயல்புக்கு மாறான ஒரு மாறுபாடு என்றே ஆஸ்துமாவை வர்ணிக்கலாம்.

நாம் மூச்சு விடும் போது மார்புக் கூடு சுருங்கிச் சுருங்கி விரிவடைகிறது. எலாஸ்டிக் தன்மையுள்ள நுரையீரல் நாம் மூச்சை உள்ளிழுக்கும் போது விரிவடைவதால், அதனுள் காற்றழுத்தம் குறைகிறது. இந்தச் சமயத்தில் வெளிக் காற்று மண்டலத்தின் காற்றழுத்தம் அதிகமாக இருக்கிறது. அதனால் மூக்கால் உள்ளிழுக்கப்படும் காற்று வேகமாகச் சுவாசக் குழாய் வழியே முன்னேறி நுரையீரலை நிரப்புகிறது. இப்படி உள்ளிழுக்கப்பட்ட காற்றிலிருந்து பிராண வாயுவை மட்டும் பிரித்தெடுத்துக் கொண்டு மீதியை வெளியே செலுத்திவிடுகிறது நுரையீரல். மூச்சை வெளியே விடும்போது, வெளிக் காற்று மண்டலத்தைக் காட்டிலும் காற்று நிரம்பிய நுரையீரலில் காற்றழுத்தம் அதிகமாயிருக்கும்.

ஆஸ்துமா நோயாளிகளுக்கு மூச்சை உள்ளிழுப்பதில் எந்தவிதச் சிரமமும் இருக்காது. இழுத்த மூச்சை மீண்டும் வெளிவிடுவதில் தான் பிரச்னை ஏற்படுகிறது. இந் நோயாளிகளின் நுரையீரலில் உள்ள மெல்லிய காற்றுக் குழாய்கள் (bronchioles) இயல்பாக விரிந்து காற்றை உள்ளிழுத்துக் கொள்கின்றன. ஆனால் அவை சுருங்கும்போது வெகு சீக்கிரமாகவும் அதிக அளவிலும் சுருங்கி விடுகின்றன. இதனால் நுரையீரலிலிருந்து வெளியேற்றப்பட வேண்டிய காற்று இயல்பான அளவிலும் வேகத்திலும் வெளியேற்றப்படாமல் தேங்கிப் போகிறது. நோயின் தீவிரத்துக்கு ஏற்ப,காற்றை வெளியேற்ற எடுத்துக் கொள்ளப்படும் நேரம் அதிகரிக்கிறது. ஆரோக்கியமான மனிதன், மூச்சை ஒரு முறை உள்ளிழுத்து, வெளியேற்ற மூன்று வினாடிகள் எடுத்துக் கொள்கிறான். இதே செயலுக்கு ஓர் ஆஸ்துமா நோயாளி ஆறு வினாடிகள் எடுத்துக் கொள்கிறான்! ஆரோக்கியமான மனிதன், உள்ளிழுத்த காற்றில் 85 சதவிகிதத்தை ஒரு வினாடியில் வெளியேற்றுகிறான்; ஆஸ்துமா நோயாளியோ ஐம்பது சதவிகிதம் காற்றைத்தான் அந்த ஒரு வினாடியில் வெளியேற்றுகிறான்.



* இயற்கை மருந்து



எஸ். மீனாக்ஷி

காற்றுக் குழாய்கள் இயற்கைக்கு மாறாகச் சீக்கிரம் சுருங்கி விடுவதால் உள்ளேயே தேங்கும் மூச்சுக் காற்று வெளியே வரத் திணறுகிறது. அப்போது மெலிதாகச் சீட்டி அடிப்பது போன்ற ஓசை எழுகிறது. இதையே இழுப்பு என்கிறோம். நோய் முற்றியிருந்தால் இந்த ஒலி நன்றாகக் காதில் விழும்; இளநிலையில் இருந்தால் ஸ்டெத்தை மார்புக் கூட்டில் பொருத்தி இவ்வொலியைக் கேட்கலாம்.

காற்றுக் குழாய்கள் ஏன் இவ்வாறு இயற்கைக்கு மாறாக, சீக்கிரம் சுருங்குகின்றன...? காற்றுக் குழாயின் விட்டத்தைச் சுற்றிலும் மெல்லிய தசை நார்கள் உள்ளன. இவை சுத்தமான, சூடான காற்று, உடலின் உஷ்ணம் ஆகியவற்றுக்கு ஏற்ப விரிவடைந்து காற்றுக் குழாயின் சுற்றளவைப் பெரிது படுத்துகின்றன. குளிர்ந்த காற்று, ஐஸ், பனி, அதிக வியர்வை, மழையில் நனைதல் போன்றவற்றால் இந்தத் தசை நார்களின் விரியும் தன்மை பாதிக்கப்படுகிறது. அவை சீக்கிரத்தில் சுருங்கி ஒடுங்கிவிடுகின்றன. வம்ச வழியாக ஆஸ்துமா உள்ள குடும்பத்தவர்களுக்கு,காற்றுக் குழாய்கள் இவ்வாறு பாதிக்கப்படுவதற்கான சாத்தியக் கூறுகள் அதிகம். தூசி, மலர்களின் மகரந்தம், புகை, சீயக்காய், மிளகாய்த்தூள், சாம்பிராணி போன்ற சில பொருட்கள் சிலருக்கு ஒவ்வாமை விளைவுகளை ஏற்படுத்தும். இவற்றாலும் காற்றுக் குழாய்களின் திசுக்கள் பாதிக்கப்படுகின்றன. சிலருக்குக் கோழி, புறா இறகுகளினால் கூட ஒவ்வாமை ஏற்படுவதுண்டு. ஒவ்வாத பொருள் எது என்பதைக் கண்டுபிடித்து அதை ஒதுக்கிவிட்டால் இழுப்பு இராது.

ஆனால், மிகச் சிலரே ஒவ்வாமை காரணமாக ஆஸ்துமா வரப் பெற்றவர்களாய் உள்ளனர். பெரும்பான்மை நோயாளிகளுக்கு ஆஸ்துமா வரக் காரணம் மனம் தான்! கவலை, சஞ்சலம், குழப்பம், டென்ஷன் — என்று எல்லாவித 'நெகடிவ்' உணர்ச்சிகளும் காற்றுக் குழாய்களைப் பாதிக்கின்றன. அளவுக்கு அதிகமாக உணர்ச்சிவசப் படுவதால் வயிற்றில் அமிலம் அதிகமாகச் சுரந்து அல்சர் உண்டாவது போல்தான் இதுவும். வம்ச வழியாகவோ ஒவ்வாமை காரணமாகவோ சுவாச கோசத்தில் தொற்று நோய் உள்ளதாலோ ஆஸ்துமா வரப் பெற்றவர்கள் இவ்வாறு மன உளைச்சலுக்கு உள்ளாவதால் நோயை அதிகப்படுத்திக் கொள்வார்கள்.

ஆஸ்துமா நோயாளிகள் மருத்துவர்களிடம் சென்றால், காற்றுக் குழாய்களை விரிவடையச் செய்யச் சில மருந்துகளைத் தருவார்கள். உட்கொள்ள, அல்லது தொண்டைப் பகுதியில் ஸ்பிரே செய்யத் தரப்படும் மருந்துகள் இவை. ஒவ்வாமையை எதிர்க்கும் சில மருந்துகளையும் தரலாம். ஆனால் இவற்றால் இந்த நோயை முற்றிலும் குணப்படுத்த முடியாது. எந்தமருத்துவமுறையிலும் ஆஸ்துமாவுக்குப் பூரண குணமளிக்கும் மருந்து இல்லை. காரணம், மருந்துகள் உடல் கோளாறுகளை மட்டுமே நிவர்த்தி செய்கின்றன. மன அமைதியை அவற்றால் தர முடியாது.

போதாக்குறைக்கு, ஆஸ்துமா நோயாளிகள் பலர் 'என்ன செய்தாலும் மூச்சுத் திணறுகிறது' என்று காரணம் காட்டி அன்றாட வேலைகளைச் செய்வதைக் கூட நிறுத்தி விடுகின்றனர். இதனால் காற்றுக் குழாய்களுக்குக் கிடைக்கும் கொஞ்சம் நஞ்சம் பயிற்சியும் நின்று போய் அவை மேலும் ஒடுங்கி விடுகின்றன; நோய் வலுக்கிறது. உடலால் மனத்துக்கும், மனத்தால் உடலுக்கும் மாறி மாறிப் பாதிப்புப் பெருகுகிறது!

எனவே, மனத்தைத் தெளிவாகவும் சிந்தனைகளைக் குழப்பமின்றியும் வைத்துக் கொள்வது ஆஸ்துமா நோயாளிகளுக்கு அத்தியாவசியமாகிறது. இதைச் செய்வதைக் காட்டிலும் சொல்வது சுலபம்தான்... ஆனால் மன அமைதிக்கு ஓர் எளிமையான அறிவுபூர்வமான வழியை நமது முன்னோர்கள் காட்டியுள்ளனர். 'பிராணாயாமம்' என்ற மூச்சுப் பயிற்சிதான் அவ்வழி. பிராணாயாமம் என்பது கடுமையான நிஷ்டை என்றோ, வழிபாட்டு முறை என்றோ அர்த்தம் கொள்ளக் கூடாது. மனத்தை ஒருமைப்படுத்தும் அதே நேரத்தில் உடலின் சுவாச மண்டலத்துக்குச் (respiratory tract) சீரான பயிற்சி தருவதுதான் இந்தப் பிராணாயாமம்.

நிமிர்ந்த நிலையில் தரையில் அமர்ந்து, மூக்கின் ஒரு துவாரத்தை மூடிக் கொண்டு மறு துவாரத்தால் காற்றை மெள்ள உள்ளிழுக்க வேண்டும். பிறகு மறு துவாரத்தை மூடிக் கொண்டு முதல் துவாரத்தின் வழியே மூச்சை வெளியேற்ற வேண்டும். திறந்த வெளியிலோ, காற்றோட்டமான அறையிலோ இப்பயிற்சியைக் கண்களை மூடிய நிலையில் அமர்ந்து தினமும் சில நிமிடங்களுக்குச் செய்தால் நிச்சயமாகப் பலன் கிடைக்கும். ஆனால், பலன் கிடைத்து விட்டது என்று பயிற்சியை நிறுத்திவிடக்கூடாது. நோய் குணமான பின்பும் தொடர்ந்து செய்து கொண்டே இருக்க வேண்டும்.

இப்போது மேலை நாடுகளில் கூட மருந்துகளை மட்டுமே நம்பியிருந்த விஞ்ஞானிகளும் மருத்துவர்களும் ஆஸ்துமாவுக்குச் சுவாசப் பயிற்சி மிக அவசியம் என்று உணர்ந்து அறிவுறுத்தி வருகின்றனர்.

— எஸ். மீனாக்ஷி

(துணைப் பேராசிரியை, சென்னை மருத்துவக் கல்லூரி.)


உங்கள் திறமையைப்
பிரதிபலிக்கச் செய்வது
உங்கள் சமையல்
பாத்திரங்கள்.
நான் உபயோகிப்பது...
உயர்ந்த தரமான
பாத்திரங்களுக்கான
இந்திய அரசின்
தேசிய விருதினைப் பெற்றது.
காளி
காப்பர்-
பாட்டம்
ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்
பாத்திரங்கள்
38 வருட சிறந்த அனுபவம் பளிச்சிடுவது
kali
kali
ISI
ISI முத்திரை பெற்றது.
காளி: கவர்ச்சியானது மட்டுமல்ல, சிக்கனமாயும் சீக்கிரமாயும் சமைக்கவல்லது.
விற்பனை ஏஜெண்ட்: ஸ்ரீவித்யா ஏஜன்சீஸ், கும்பேஸ்வரர் சன்னதி, கும்பகோணம் 612 001. போன்: 20136.
மண்டல ஏஜெண்டுகள்: சம்மு & கோ., த.பெ.எண். 3622, மகாத்மா காந்தி ரோடு, எர்ணாகுளம், கொச்சின் 682 035. போன்: 361139. ● விக்டரி மெட்டல்ஸ், 101, கேத்வாடி மெயின் ரோடு, பம்பாய் 400 004. போன்: 354507/380075.
● தினேஷ் எண்டர்பிரைசஸ், 41/1942, கரோல்பாக், புதுடில்லி 110 005. போன்: 5716923.
● ஈஸ்ட் இந்தியா கம்பெனி, 3, பாலர்ஜி ரோடு, (காளிகாட் P.O. எதிரில்), கல்கத்தா 700 026. போன்: 47-1840.
ADWAVE/KBS/3428 TAM A

18

பீரோவைத் திறந்து புடவையை வெளியே எடுத்துக் கொண்டிருந்த வசந்தா சரக்கென்று திரும்பினாள்.

கீழே உட்கார்ந்து, குழந்தை தன் பிஞ்சுக் கைகளால் அவள் கால் கட்டை விரலைப் பிடித்து இழுத்துக் கொண்டிருக்க, அந்த மென்மையான விரல்களின் குறுகுறுப்புத் தாங்காமல் காலை உதறிக் கொண்டவள், குனிந்து குழந்தையைத் தூக்கினாள்.

"அட, போக்கிரிக் கழுதை! அப்பாவைப் பார்த்துக்கச் சொல்லிட்டு உன்னை ஹால்ல இல்லே விட்டுட்டு வந்தேன்! அம்மாவைத் தேடிக்கிட்டு அங்கிருந்து தவழ்ந்துக்கிட்டே



வேரில்லாத மரங்கள்

வந்திட்டியா? என் ராஜா... என் தங்கம்...''

மூச்சு முட்ட முட்டக் குழந்தையைக் கட்டிப் பிடித்து வரிசையாய் முத்தமிட்டவள், தன்னைத் தேடிக் கொண்டு குழந்தை வந்துவிட்ட பெருமையைக் கணவனோடு பகிர்ந்து கொள்ளும் உத்தேசத்தோடு 'மாது' என்று அழைத்தாள்.

அவனிடமிருந்து பதில் ஏதும் வராது போக, ''என்ன பண்றீங்க, குழந்தையைக் கவனிக்காம, நான் கூப்பிடறது காதுல விழாமா?'' என்று கேட்டவாறு பிள்ளையுடன் கூடத்துக்குப் போனாள்.

கூடை நாற்காலியில் மாதவன் பேப்பரும் கையுமாய் அமர்ந்திருந்தான்.

பார்வை,விரித்திருந்த பேப்பரில் இல்லை.

ஜன்னலுக்கு வெளியே சாம்பல் பூத்துக் கொண்டிருந்த ஆகாயத்தில் படர்ந்திருந்தது.

''பேப்பர்ல அத்தனை சுவாரஸ்யமா நியூஸ் போட்டிருக்கானு என்ன! புள்ளை தவழ்ந்துக்கிட்டே பெட்ரூமுக்குப் போறதைக் கூட கவனிக்காம இருக்கிற அளவுக்கு... நல்ல வேளையா என்னைத் தேடிக்கிட்டு வந்தான்... வாசப்பக்கம் போயிருந்தான்னு படிக்கட்டுல எறங்கத் தெரியாம விழுந்து...''

இப்போதும் அவன் எதுவும் பேசாமல் வெறித்த பார்வை வெறித்தபடி இருக்க, குழந்தையை இடுப்பில் இடுக்கிக் கொண்டு வசந்தா குனிந்தாள்.

''என்ன மாது, நான் பேசறது காதுல விழலயா?''

''ம்?''


''ப்ச்... குழந்தை தானு என்னைத் தேடிக்கிட்டு வந்திட்டான் மாது... பெட்ரூமுக்கு வர்றதுக்குப் பதிலா வாசப் பக்கம் போயிருந்தான்னு என்ன ஆகியிருக்கும்னு பதறிக்கிட்டுச் சொல்றேன், என்ன ஏதுன்னு கூடக் கேட்காம இருக்கீங்களே!''

''......''

''மாது...'' என்று அவள் மறுபடி ஆரம்பிப்பதற்குள், ''சரி... சரி... காதுல விழுந்திச்சு... ஒரே விஷயத்தைத் திருப்பித் திருப்பிச் சொல்லாதே...'' என்ற மாதவன் பேப்பரை அலட்சியமாய்த் தரையில் எறிந்துவிட்டு எழுந்து நின்றான்.

அவன் குரலில் இருந்த அலுப்பைப் புரிந்து கொள்ள முடியாமல் போனதில், காரணமேயில்லாமல் எதற்காக இப்படி எரிந்து விழுகிறான் என்கிற குழப்பத்துடன் திரும்பிய வசந்தாவின் கண்களில் கணவனின் முழு உருவம் விழ, சிரித்தாள்.

''ஐயே, என்னாச்சு உங்களுக்கு? ஷர்ட் பட்டனையெல்லாம் ஏன் இப்படி மாத்தி மாத்திப் போட்டிருக்கீங்க?''



குனிந்து தன்னையே ஒரு தரம் பார்த்துக் கொண்ட மாதவன், ஷர்ட் பட்டன்களை அவிழ்த்துச் சரியாகப் போடத் துவங்கினான்.

''பட்டனைச்சரியாப்போடலைன்னுமட்டும் சொன்னாப் பத்தாதா? பெரிசா சிரிப்பென்ன வேண்டிக் கிடக்கு!''

மொணமொணவென்ற குரலில் அவன் சொன்ன விதம் சிரிப்பை அதிகமாக்க, வசந்தா கிட்டத்தில் வந்தாள்.

''கோணமாணன்னு டிரெஸ் பண்ணிக்கிட்டா, சிரிக்காம அழவா செய்வாங்க? இப்பவாவது நான் மட்டும் சிரிச்சேன். இப்படியே தெருவில இறங்கிப் போயிருந்தீங்கன்னு, பார்க்கிறவங்க அத்தனை பேரும் இல்ல சிரிச்சிருப்பாங்க!''

சிரிப்பு மாறாமல் சொல்லிவிட்டு அவள் நகர, மாதவன் மறுபடி முணுமுணுத்தான்.

''ஆ...மா! எல்லாரும் உன்னை மாதிரிப் பைத்தியம் பாரு, எடுத்ததுக்கெல்லாம் சிரிக்கிறதுக்கு!''

அந்த முணுமுணுப்பு, காதில் விழுந்தும் கூடச் சிரிப்பை நிறுத்தாமல் குழந்தையைக் கொஞ்சிக் கொண்டே வசந்தா அறையை விட்டு வெளியேறினாள்.

கூடத்தில்வந்து நாற்காலியில் உட்கார்ந்து, குழந்தையை மடியில் இருத்திக் கொண்டு, ஒரு கிண்ணத்தில் இருந்து கூழை ஒவ்வொரு ஸ்பூனாகக் குழந்தைக்கு ஊட்டத் துவங்கினாள்.

''ஆ... ஆ... அம்... எங்க வாயைத் திற... என் ராஜா இல்ல... என் தங்கம் இல்ல... ஆ... ஆ... அம்...''

ஸ்பூனின் நுனியை உதடுகளின் இடையில் பொருத்தி, குழந்தையின் குருவி வாயைத் திறக்கச் செய்து, துளித் துளியாய்ப் பழக் கலவையை ஊட்டிய நாழிகையில் படுக்கை அறையில் இருப்புக் கொள்ளாமல் இப்படியும் அப்படியுமாய் மாதவன் அல்லாடுவதைப் பார்க்க முடிந்தது.

புருவங்கள் முடிச்சுப் போட அரை நிமிஷம் யோசித்தவள் அவனைக் கூப்பிட்டு என்னவென்று விசாரிக்கலாமா என்று எண்ணுவதற்குள் பிள்ளை தன் குஞ்சுக் கையால் அவள் கன்னத்தில் தட்டி 'ம்மா... பா...' என்று பேசும் விதமாய் உளற, அவள் கவனம் குழந்தையிடம் திரும்பியது.

ஒரு வழியாய்க் கூழை ஊட்டி, கொஞ்சம் தண்ணீரைக் குடிக்க வைத்து, வாயைத் துடைத்து, ''தங்கத்துக்குத் தொப்பை ரொம்பிடுச்சா?'' என்று கொஞ்சிக் கொண்டிருந்தவளின் அருகில் மாதவன் வந்து நின்றான்.

''வசு?''

''ம்?''

''வந்து...'' என்று ஆரம்பித்தவன், தலையை வேகமாய் ஆட்டி,

சிவசங்கரி



டாக்டர்: கணவன் மனைவி சண்டைன்னு அதைப் பேசியே தீர்த்திருக்கலாமே!

கணவன்: அப்படிப் பேசித் தீர்க்க முயற்சி பண்ணினதில்தான் டாக்டர் இப்படி அடிதடி ஆனது!''

— கிழை. அ. கதிர்வேல்.

''ஒண்ணுமில்லே...'' என்று தயங்கிவிட்டு மீண்டும் படுக்கை அறைக்கே போக, வசந்தா விழித்தாள்.

ஏதோ சொல்ல வந்துவிட்டு, சொல்லாமலே போகிறாரே!

மாதவன் தயக்கத்தோடு மறுபடியும் அறையின் வாசல்படியில் வந்து நின்று எட்டிப் பார்த்தான்.

''என்ன மாது?''

''அ? ஒண்ணுமில்ல... அத்தம்மா இல்லியா? குழந்தையை அவங்ககிட்ட விட்டுட்டு வாயேன்... உன்கிட்ட கொஞ்சம் பேசணும்...''

''அத்தம்மா வெளியே போயிருக்காங்க... 'தெரிஞ்சவங்க உடம்புக்கு முடியாம ஆஸ்பத்திரியில படுத்திருக்காங்க, போய்ப் பார்த்திட்டு ஏழு மணிக்குள்ள வந்திடறேன்'னு உங்களுக்கு எதிரிலதானே சொல்லிட்டுப் போனாங்க!''

''எப்போ?''

''சரியாப் போச்சு... என்னாச்சு உங்களுக்கு? ஏன் ரெண்டு மூணு நாளா எப்படியோ இருக்கீங்க? எதை மனசுல வைச்சுக்கிட்டு இப்படி அவஸ்தைப்படறீங்க? என்கிட்டச் சொல்லக் கூடாதா? மாது... ப்ளீஸ்... இங்க வாங்க... சொல்லுங்க... வாட் ஈஸ் ராங்? ஆபீஸ்ல பிராப்ளமா? இல்ல, ஊர்ல அப்பா ஏதாச்சும் சொன்னாரா? ம்? குழந்தையைக் கொஞ்ச மாட்டேன்றீங்க... அவனைப் பத்தி நான் எதுனாச்சும் சொன்னாலும் காதுல வாங்க மாட்டேன்றீங்க... எதையோ சொல்ல வர்ற மாதிரி படுது... ஆனா அதையும் சொல்ல மாட்டேன்றீங்க... நானாகப் பேச்சுக் கொடுத்தாலும் பேசப் பிடிக்காத மாதிரி சள்ளுன்னு விழறீங்க... என்ன ஆச்சு உங்களுக்கு?''

இலேசான கோபத்துடன் துவங்கினவளின் குரல் பேசி முடிப்பதற்குள் வருத்தத்தில் தழுதழுக்க முற்பட, மாதவன் அவசரமாய் மனைவியின் அருகில் வந்து ''ஏய்... வசு... என்னம்மா இது...?'' என்று தோளைத் தட்டிச் சமாதானப்படுத்த முயன்றான்.

குழந்தையைத் தான் வாங்கிக் கொண்டு, மறு கையால் அவளை இறுகத் தழுவிக் கொண்டான்.

தோளில் சாய்ந்து கொண்ட வசந்தா, கண்களை மலர்த்தி அவனை ஏறிட்டாள். ஒரு கையால் அவன் கன்னத்தைத் தடவி, ''என்ன விஷயம் மாது?'' என்றாள் கிசுகிசுப்பாய்.

குனிந்து அவளை அழுந்தப் பார்த்தவன் நீளமாய்ப் பெருமூச்சு விட்டான். 'ப்ச்' என்று சூள் கொட்டினான். பின், ''என்னன்னு சொல்றது வசு... எதை நினைச்சாலும் ஒரே வெறுப்பா இருக்கு...'' என்றான்.

வசந்தா குழந்தையை அவனிடமிருந்து வாங்கி, தரையில் துணியைப் பரத்தி, கிடத்தினாள். அருகில் உட்கார்ந்து தட்டிக் கொடுத்தபடி சின்னக் குரலில் வினவினாள்.

''அம்மாவை நினைச்சு வருத்தப்படறீங்களா? உங்க வேதனை எனக்குப் புரியுது... அந்த வலியை நான் உணர்ந்தவதானே... போகப் போகத்தான் வருத்தம் குறையும் மாது... அதுவரைக்கும் கஷ்டம்தான்... அவஸ்தைதான்...''

''அம்மா போனதை நினைச்சுக்கூட நான் அத்தனை வருத்தப்படலே வசு... ஆனா அப்பா ஒண்டியாக் கஷ்டப்படறதை நினைச்சுக்கிட்டாத்தான் தாங்க மாட்டாம ஆயிடுது...''

''கஷ்டம்தான்... முப்பத்தஞ்சு வருஷம் கூடவே வாழ்ந்த மனைவியைத் திடீர்னு பறிகொடுத்திட்டு நிக்கறது பரிதாபம்தான்... ஆனா, இது வேணுன்றதும் வேணான்றதும் நம்ம கையில இல்லியே! அப்பா தனியா இருக்காரேன்னு நீங்களும்தான் வாரா வாரம் போய் ரெண்டு நாள் இருந்திட்டு வர்றீங்க... இதுக்கு மேல...''

மாதவன் எழுந்து வேகமாய் அவளருகில் வந்தான்.

''நாம என்ன செய்ய முடியும்னு கேக்கற, அதானே? இதெல்லாம் நமக்குள்ள பேசிப் பேசிச் சமாதானமாயிடறது சுலபம் வசு... ஆனா மத்தவங்களுக்குப் புரியுமா?''

''மத்தவங்களா? அப்பா ஏதாச்சும் சொன்னாரா?''

''அவரு ஒண்ணும் சொல்றதில்லே... 'இப்படி சனி, ஞாயிறு தவறாம நீ இங்கே வந்து அலையறது கஷ்டமா இருக்குதம்பி'ன்னுதான் சொல்றாரு... ஆனா, ஊர்க்காரங்க பேசற பேச்சுத்தான் காதுல வாங்கற மாதிரியில்லே...''

வசந்தா குழப்பமாகப் பார்த்தாள்.

''ஊர்க்காரங்களா? அவங்களுக்கு என்ன?''

''என்ன, சும்மா ஒரு வம்புதான்... பஸ்ஸ்டாண்ட்ல எறங்கி, தெருவுல நடந்து வீட்டுக்குள்ள நுழையற வரைக்கும், எப்படியும் நாலஞ்சு பேரையாவது பார்க்க வேண்டி வந்திடுது... எவன் எதிர்ல வந்தாலும் சொல்லி வச்ச மாதிரி, 'என்ன இப்படி உங்கப்பாவைத் தனியா விட்டுட்ட தம்பி?'ன்னு என்னமோ தான்தான் கேக்க பாத்தியதை உள்ளவன் மாதிரி பளிச்சுனு கேக்கறான்.''

''.......''

''எவனோ, எதுவோ பேசினா நமக்கென்னன்னுதான் நானும் காதுல வாங்காம இருந்

தேன்... ஆனா, இந்த முறை நாட்டாண்மைக் காரரு என்னைத் தனியாக் கூப்பிட்டுப் பேசினாரு... அவருக்கு அப்பாகிட்ட அலாதி சினேகிதம்... அந்த ஊர்லேயே நம்ம குடும்பத் தோட ரொம்ப அக்கறையோட பழகறவரு... அவரு வார்த்தைக்குக் கூட மதிப்புத் தரலேன்னா எப்படி?''

''அப்படி என்ன சொல்றாரு?''

''சொல்றேன்... போன முறை போனப்ப, அப்பா கையில ஏதோ நெருப்புக் காயம் மாதிரி இருந்திச்சு, நாங்கூட கவனிச்சேன். கேட்டதுக்கு, அரிக்கேன் லைட்டுல சுட்டுக்கிட் டேன்னு மழுப்பிட்டாரு... ஆனா, தானே சமைக்கிறேன் பேர்வழின்னு அப்பா கூத்த டிச்சதுல உண்டான காயம் அதுன்னு நாட்டாண்மைக்காரரு சொன்னப்புறம் தான் எனக்கே சேதி தெரிஞ்சுது!''

''சமையலா? அப்பாவா? சமைக்கறதுக் கும் மத்த வேலைங்களைக் கவனிக்கறதுக்கும் தான் அந்தத் தடியன் பெருமாளு இருந் தானே? அவனுக்கு என்ன ஆச்சு?''

''அது ஒரு கதை வசு! அஞ்சாறு வருஷமா வீட்டோட இருந்து, அம்மாகிட்ட எல்லா வேலையும் நல்லாக் கத்துக்கிட்ட பெருமாளைக் கண்டா அப்பாவுக்கு இப்ப ஆகலை... 'நீ சமைக்கிறது நல்லாவே இல்லே, இதுல காரம் இல்லே, அதுல உப்பு இல்லே'ன்னு சதா அவனைத் திட்டிக்கிட்டே இருந்தாராம். நான் போறப்பல்லாம் கூடப் பார்த்தேன். 'இனிமே இங்கே வேலை செய்ய முடியா து'ன்னு கறாராச் சொல்லிட்டுப் போன வாரம் பெருமாளு நின்னு போயிட்டான். இவரு அதுக்கு மேல ரோஷத்தோட, 'என் காரியங்களை நானே செஞ்சிக்கிறேன்'னு வீம்பாச் சமைக்கப் போயி... சோத்தை வடிக்கத் தெரியாம கையில கொட்டிக் கிட்டு... மொத்தத்துல ரொம்ப அவஸ்தை... இதெல்லாம் கேள்விப்படறப்போ, பேசாம நாமளும் ஊரோட போய் அவர் கூடவே இருந்து பார்த்துக்கிடலாம்னு தோணுது வசு...

''......''

''சொல்லு வசு...''

''என்ன சொல்லணும்?''

''கிராமத்துக்குப் போயிட்டா என்ன?''

''விளையாடாதீங்க மாது...''

''சத்தியமா விளையாடலே... அப்பாவை நினைச்சா...''

வசந்தா கோபத்துடன் குறுக்கே வெட்டினாள்.

''அப்பாவை நினைக்கறது இருக்கட்டும். முதல்ல நீங்க பேசறது பிராக்டிகலா இருக் கான்னு யோசனை பண்ணிட்டுப் பேசுங்க... உங்க பாங்க் வேலையை என்ன பண்றதா உத்தேசம்? அங்க மாத்தல் கிடைக்காது... அப்புறம்? வேலையை ராஜினாமா பண்ண ரெடியா? பண்ணிட்டு? நிலத்தைப் பார்த் துப்பீங்களா? சரி, என் வேலை? விட்டுட்டு வீட்டோட கிராமத்துல உட்கார்ந்துக்கிட்டு வம்படிக்கச் சொல்றீங்களா?''

மாதவன் சரக்கென்று எழுந்து நின்றான்.

''பெரியவங்க நிம்மதி முக்கியம்னு செய் யத்தான் வேணும்... அப்பாகிட்ட பணம் காசுக்குப் பஞ்சமில்லை... நாம ரெண்டு பேரும் வேலையை விட்டாக் கூட, உக்கார வெச்சுச் சோறு போடற தகுதி அவருக்கு இருக்கு...''

கையை உதறிக் கொண்டு, கத்தலாகப் பேசியவனை வசந்தா அழுத்தமாக ஏறிட்டாள்.

''மாது, கோபத்துல எதையாவது அவசரப் பட்டுப் பேசிடாதீங்க... நாம சொல்றது நடைமுறைக்கு ஒத்து வருமான்னு கொஞ்சம் நிதானிச்சுப் பாருங்க. உங்க இஷ்டம் போலவே ரெண்டு பேரும் வேலையை விட்டுட்டுப் போயிடறதாவே வெச்சுப் போம்... அங்க அந்த ஊர்ஜனங்க மத்தி யிலே நாம நிம்மதியா இருக்க முடியும்னு நம்பறீங்களா? உங்கம்மா போனப்ப ரெண்டு மூணு நாளு அங்கே இருக்கறதுக் குள்ளே நான் என்ன பாடுபட்டேன்னு மறந்து போச்சா?''

''......''

''சரி, உங்கப்பாவோட சந்தோஷத்துக் காக நீங்களும், நானும், குழந்தையும் என்ன கஷ்டப்பட்டாலும் பரவாயில்லேன்னு அங்கே போய் இருக்கலாம்... ஆனால், அத்தம்மா? அவங்களை என்ன செய்யறது? 'இனிமேல் நீங்க எங்களுக்குத் தேவையில் லே'ன்னு அவங்களை இங்கேயே உதறிட்டு வந்திட முடியுமா? இத்தனையையும் சமாளிச் சுக்கிட்டு அங்கேயே போய் இருக்கிறோம்னே வெச்சுக்கிட்டாக் கூட, கிராம வாழ்க்கையில நாம எத்தனை தூரம் பொருந்த முடியும்னு நினைச்சுப் பார்த்தீங்களா? என்ன மாது... குழந்தை மாதிரி பிடிவாதம் பண் றீங்க...?''

மூச்சிரைக்க வசந்தா பேசி நிறுத்த, அவள் பேச்சில் இருந்த நியாயத்தை உணர்ந்து, மாதவன் தலையைக் குனிந்து கொண்டான். இதற்கு மேல் யோசிக்க எதுவுமே இல்லை என்கிற மாதிரி கைகளை விரித்து விரித்து மூடினான்.

தூங்கிவிட்ட குழந்தை மேல் மெல்லிசாக ஒரு துணியைப் போர்த்திவிட்ட வசந்தா, எழுந்து மாதவனுக்குக் கிட்டத்தில் வந்து நின்றாள்.

வேதனையோடு, செய்வதறியாமல் அடிபட்டு நின்றவனின் தோளில் கையை வைத்துத் தன் பக்கமாய்த் திருப்பினாள்.


''அப்பாவைத் தனிச்சு விடறது உங்களுக் குத் துன்பமா இருக்கு, விஷயம் அதுதானே மாது? அவர் ஏன் தனியா இருக்கணும்? பேசாம வீட்டை ஒழிச்சு இங்கே நம்மகூட தங்க அவரைக் கூட்டிக்கிட்டு வந்திட்டா, எந்தப் பிரச்னையும் இருக்காது இல்லையா?'' என்று மெதுவாக அவள் கேட்டபோது, 'உங்கள் வருத்தத்தில் எனக்கு மட்டும் பங்கு இல்லையா?' என்கிற கரிசனம் குரலில் நிறை யவே விரவி இருந்தது.

(தொடரும்)



• உங்களால் கீழ்ப்படிய முடியாதா? அப்படியென்றால் உங்களால் தலைமை தாங்கவும் முடியாது!
— இத்தாலியப் பழமொழி.
தகவல்:— ஏ. கே. நாசர்.

பூக்காத மாலை



தொழுவத்தில் கட்டிக் கிடந்த எருமை மாடு "ம் ம் மே.. ஏ.... ஏ...." என்று ஏக்கமாய்க் கதறியது. கதறிய கதறலில் அதன் பருத்த வயிறு விம்மித் தணிந்தது. இடி முழக்கமாய் நீண்ட அதன் கதறலில்... அந்தத் தெருவே அதிர்ந்தது.

காடியில் புல்லோ — கூளமோ, ஒரு துரும்பு கூட இல்லை. மதியத்திலிருந்து அதற்கு இரை இல்லை. புல்லறுத்துப் போடுகிற ராசாத்தியை எதிர்பார்த்து எதிர்பார்த்து ஆவலோடு அதன் கருங்கண்கள் வாசலைப் பார்த்தன.

வீட்டை விட்டு வெளிவர முடியாமல் வெட்கப்பட்டுப் போய் உள்ளேயே கிடந்தாள், ராசாத்தி. வெம்பலும் விசும்பலுமாய்... கசியும் கண்களுமாய், வெட்டுப்பட்ட கொடியாய்த் துவண்டு கிடந்தாள். ஊர் முகத்தை ஏறிட்டுப் பார்க்க அவளுக்குத் தைரியமில்லை. எப்படி அவள் ஊர் முகத்தைப் பார்க்க முடியும்? அய்யாதான் அவளை மூக்கறுத்து மூலையில் தள்ளி விட்டாரே!

அய்யாவும் வாய்க்கு வாய் ஆசையோடு சொல்வார். "இந்த வருஷ வெள்ளாமையிலே... எப்படியாச்சும் ஒனக்கு அஞ்சு பவுன் நகை வாங்கிப் போடணும். எந்தச் செலவை நிறுத்தினாலும் சரி... நகை கட்டாயமாக வாங்கிடணும்."

அவர் ஆசையும், ஆர்வமும் போலியல்ல. ஏமாற்றல்ல. உண்மையானவைதான். ஆனால் மிளகாயும் பருத்தியும் வருஷா வருஷம் விளையத்தான் செய்கிறது. வியாபாரிகளிடம் போய்ச் சேர்கிறது. கடைசியில் கணக்குப் பார்க்க ஒன்றும் இருக்காது. கைக்கு எட்டினால் வாய்க்கு எட்டாது. வாய்க்கு எட்டினாலும் வயிற்றுக்கு எட்டாது. என்னதான் மாயமோ, அது!

வருஷம் என்பது வருஷங்களாகி,.... அதுவும் ஏழு எட்டு என்றாகி விட்டது. அஞ்சு பவுன் நகை வாங்க முடியவுமில்லை. அய்யா ஆசையாய்ச் சொல்வதை நிறுத்தவுமில்லை.

இப்போ —

செடிப் பருவத்தில் நிற்கிற மிளகாய்ச் செடி சுருட்டையடித்துக் கிடக்கிறது. பூச்சி மருந்து அடிக்கணும், உர உப்புப் போடணும், முதல் தண்ணீர்ப் பாய்ச்சணும். அய்யாவும் சூறாவளியாய் ஓடிப் பார்த்தார். 'அங்கு, இங்கு' என்று குருட்டு ஈயாய்ப் பறந்து பார்த்தார். முட்டி மோதி, அலைந்து, அலுத்துச் சோர்ந்த நிலையில் —

ராசாத்தி காதிலும், மூக்கிலும் கிடந்த கம்மலையும், மூக்குத்தியையும் கழற்றும்படியாகி விட்டது.

மூளியாகிப் போன முகத்தோடு எப்படி வெளியே தலைகாட்டுவது? ஊர் முகத்தை எப்படி ஏறிட்டுப் பார்ப்பது? காதையும், மூக்கையும் பார்த்தவர்கள் என்ன நினைப்பார்கள்? முதுகுக்குப் பின்னால் கெக்கலி பண்ணி, நமுட்டுச் சிரிப்புச் சிரிக்க மாட்டார்களா?

ராசாத்திக்கு உள்ளுக்குள் குத்திக் குடைந்தது. எந்த வேலையும் செய்ய விருப்பமில்லாமல் உயிரற்ற மனத்தோடு... வெட்டுண்டு கிடந்தாள்.

அம்மா உயிரோடு இருந்திருந்தால்... இவளை இப்படி குறைகோலமாக்கிக் குப்புறக் கிடத்த விட்டிருப்பாளா? ராசாத்தியை இன்னும் இந்த வீட்டில் இருக்கவா விட்டிருப்பாள்? அடுத்த வீட்டுக்குக் காலா காலத்துலே மாலையும் கழுத்துமாய் அனுப்பி வைத்து, பேரன் பேத்தி என்று பூப்பிஞ்சுகளைப் பார்த்துப் பூரித்திருக்க மாட்டாளா?

அய்யா இவளை ஒரு கடமை — சுமை — என்று நினைக்கத்தான் செய்கிறார். இறக்கி வைக்க வேண்டும் என்று ஆசைப்படத்தான் செய்கிறார். ஆனால்... அதற்கான முன் முயற்சி எடுக்கத் தெரியவில்லையே...

அம்மா இருந்திருந்தால்... இவரைக் குத்திக் குடைந்து முடுக்கிவிட்டிருப்பாளே... புலம்பிப் புலம்பித் துரிதப்படுத்தியிருப்பாளே. 'கன்னி கழியாத புள்ளையை எம்புட்டு நாளைக்கு வீட்டிலே வைச்சிருக்கிறது' என்று நச்சரித்து நச்சரித்து... அய்யாவை ஏதாச்சும் ஏற்பாடு செய்ய வைத்திருப்பாளே...

இப்ப யாரு அய்யாவை நச்சரிக்கிறது?

பாவம், தூண்டிப் பத்த ஆளில்லாத மாடு போல... தன் நடையாய் நடக்கிறார். வெள்ளத்தில் மிதக்கிற மரக்கட்டையைப் போல் தன் போக்கில் புரண்டு கொண்டிருக்கிறார்...

ஊரில் இருக்கிற இரக்கப்பட்ட பெரிய மனிதர்கள்... இரண்டு தடவை 'ஏற்பாடுகளு'க்கு அய்யாவுடன் பேசிப் பார்த்தனர்.

முதல் தடவை, "எட்டு பவுன் நகை முடியுமா" என்றனர். இரண்டாவது தடவை "அஞ்சு பவுன் நகையாச்சும் போட முடியுமா" என்று கேட்டனர்.

அய்யா வெறும் கையைப் பிசைந்தார். ஏக்கப் பெருமூச்சுடன் சப்புக் கொட்டினார். அவ்வளவுதான்!

'சந்தைக்கு வராத மாடு இது' என்று சுத்தமாகக் கைகழுவி விட்டனர். இப்போ?

ராசாத்தியோடு அஞ்சாம் கிளாஸ் வரை ஒன்றாகப் படித்தவள் ராமாயி. இதோ... அவளது மகன் மூணாம் கிளாஸ் போய்க் கொண்டிருக்கிறான்!

இவள் சடங்காகி, மூலையில் பதினாறு நாள் இருந்த போது, பாவாடைச் சிறுமியாக வந்து, முட்டாள்தனமாய்ப் பல்லாங்குழி விளையாடிய கமலா, தலைப் பிள்ளையைப் பெற்றெடுத்துத் தாய் வீட்டில் வாங்கித் தந்த புதுச் சேலை, தொட்டில், வேட்டியோடு போன வாரம்தான் புருஷன் வீட்டுக்குப் போகிறாள்...

இவள் தாவணி போட்ட அதே மாதத்தில் பிறந்த பேச்சியம்மா, வளர்ந்து.

மேலாண்மை பொன்னுச்சாமி



''கணக்கு வாத்தியார்கிட்ட தினமும் என்னால அடி வாங்க முடியாது. அதனால...''

''அதனால?''

''பேசாம பிட் அடிச்சுட்டு ஜெயிலுக்குப் போயிடலாமுன்னு பார்க்கறேன்!''

— ஆல்பர்ட் ராஜ்.

மலர்ந்து, பெரிய மனுஷியாகி, இதோ.... தை ஏழாம் தேதி அவளுக்கு முகூர்த்தம் வைத்திருக்கிறார்கள்...

இவளைச் சுற்றிக் கொண்டு காலம் ஓடுகிறது. கண்ணாமூச்சி காட்டுகிறது. எல்லாவற்றையும் தழுவி வளர்க்கிறது. சிறு செடியை, பெரிய செடியாக்கி, மொட்டுகளை அரும்ப வைத்து, பிஞ்சாக்கி, காயாக்கி, கனிய வைத்து, பறிக்க வைத்து, விதையாக்கி...

மாய்மாலம் செய்கிற காலம், இவளை மட்டும் பூத்த நிலையிலேயே நிற்க வைத்து விட்டது.

காலமும் வாழ்க்கையும் இவளை விட்டு விட்டு... தன் போக்கில் ஓடிக் கொண்டேயிருக்கின்றன...

ராசாத்தி, கைத்துப் போன மனசோடு குமுறிக் குமுறி அழுதாள். சத்தமில்லாமல் அழுதாள். நெஞ்சின் ஆழத்தில் நைந்து கிடந்த ரகசிய உணர்ச்சிகளெல்லாம் பொங்கிப் பீறிட்டு, அவளை உலுக்கியெடுத்தன. அமுந்திக் கிடந்த அவலச் சோகம் விசுவரூபமெடுத்து... அவளை அடித்துப் புரட்டியது.

உள்ளுக்குள்ளேயே கொத்திக் குதறுகிற சோகம்; அடுத்த ஜீவனிடம் பகிர்ந்து கொள்ள முடியாத ஊமைச் சோகம்; சுமையாய் அழுத்தித் திணறடிக்கிற சொந்தச் சோகம்; மனத்தின் மெல்லிய ஜவ்வுகளைக் கிள்ளிக் கிள்ளித் துடிக்க வைக்கிற சோகம்; அவமானத்தில் குன்றிக் கூசிக் குறுகச் செய்கிற கொடிய சோகம்.

''அம்மா... தாயே'' என்று வெடித்துக் கதறி விட்டாள்.

''என்னை இப்படித் தவிக்க விட்டுட்டு, நீ மட்டும் போய்ச் சேர்ந்துட்டியே'' என்று புலம்பலோடு அழுதாள். மனத்தில் மண்டிக் கிடந்த அவலமெல்லாம் கண்ணீரில் கலந்து கரைந்தது. அழுது அழுது... விம்மி, விசும்பி... மெல்ல மெல்ல அடங்கினாள்...

''ம்ம் ம் ம் மே ஹ் ஹ் ஏ... ஏ...''

எருமையின் விடாப்பிடியான கதறல், இவளை நச்சரித்தது. 'பாவம் வாயில்லாச் சீவன்' என்று பரிவோடு சிந்திக்க வைத்தது. தாய்மை ததும்பும் அவளின் பெண்மை உள்ளம், வாயில்லாச் சீவனின் பசியை நினைத்துப் பதைத்தது.

தாயை விழுங்கிய சாமியையும், தகப்பனைக் கையாலாகாத நிலையில் நிற்க வைத்த வாழ்க்கையையும் சபித்துக் கொண்டே எழுந்தாள். முகத்தைக் கழுவி அழுந்தத் துடைத்துக் கொண்டாள். கலைந்து கிடந்த தலைமுடியைக் கோதி ஒழுங்குபடுத்திக் கொண்டாள்.

கடாப் பெட்டியையும், பன்னரிவாளையும் எடுத்துக் கொண்டாள். வெளியே வந்து பார்த்தாள். மஞ்சள் வெயிலில் நிழல்கள் நீளமாய்ப் படுத்துக் கிடந்தன. பொழுது, மேற்கு மலையின் முதுகை உரசிக் கொண்டிருந்தது. மேகங்கள் காயம்பட்ட ரத்தக் கசிவோடு மிதந்தன.

கதவைச் சாத்தினாள். எருமையின் முதுகைத் தட்டிக் கொடுத்தாள். ராசாத்தியைப் பார்த்ததும், ஆவலோடு தறிய முறிய விழுந்தது, எருமை.

''பொறுத்துக்க... இன்னும் அஞ்சு நிமிசத்துலே ஒனக்குப் புல்லைக் கொண்ணாந்துருவேன்... பொறு, பொறு...'' என்று சமாதானம் சொல்லிவிட்டுத் தெருவில் இறங்கினாள்.

நடுத்தெருவுக்குள் நுழைந்தாள். டீக்கடையில் டேப் ரிக்கார்டு காதல் பாட்டுப் பாடிக் கொண்டிருந்தது. அப்போதுதான் வந்த டவுன் பஸ்ஸில் இறங்கி, புத்தம் புதிய கல்யாணத் தம்பதியோடு உறவினர் குழு ஒன்று இவளைக் கடந்தது.


மடத்துத் திண்ணையில் சிலர் உட்கார்ந்திருந்தனர். மாடசாமியும் குத்துக் கால் வைத்து உட்கார்ந்திருந்தான். கடாப் பெட்டியோடு வந்த இவளை அவன் பார்த்தான்.

அவன் சும்மாதான் பார்த்தானோ... காரியமாய்ப் பார்த்தானோ... ஆனால், ராசாத்திக்கு அவன் பார்வையில் ஏதோ அர்த்தம் தொனிப்பது போலிருந்தது. காரியமும் கபடமும் ஒளிந்திருப்பது போலத் தோன்றியது. இரைக்காக ஒற்றைக் காலில் காத்து நிற்கிற கொக்கின் தாகம், அவன் கண்களுக்குள் பதுங்கியிருப்பது போல... இவளுக்குத் தோன்றியது.

மனத்துக்குள் படபடவென்று அடித்துக் கொண்டது. திகிலாகவும் திகைப்பாகவும் இருந்தது. பறவையின் இறக்கையைப் போல் துடித்தது, மனசு.

நாலு பக்கமும் ஆள் உயரத்துக்கு மேல் சோள நாற்றுப் புஞ்சை. சுவர் போல அடர்த்தியான நாற்று. நடுவில் பருத்திப் புஞ்சைகள். இங்கே கொலையே நடந்தாலும் வெளியே தெரியாது.

பொழிகளில் காடாய் வளர்ந்துகிடந்த அருகம்புல்லையும், மத்தாங்கப் புல்லையும் பரட் பரட்டென்று வேக வேகமாய் அறுத்துக் கொண்டிருந்தாள். உள்ளுக்குள் இனம் புரியாத பதைப்பு. பரபரப்பாய் அறுத்துப் போட்ட புல்லில் பெட்டி நிறைந்தது. இரு



டோபூ சைக்கிள் ஓட்டிய பருவத்திலிருந்து, உங்கள் குழந்தைகள் வளர்ந்து பெரியவனுவதை கவனியுங்கள். இரண்டு வயது குழந்தைகளுக் கான மூன்று சக்கர சைக்கிளில் துவங்கி உங்களின் எட்டு வயது பையன், உறுதியான பைசைக்கிள்களில் சுற்றி வருவதைக் கண்டு மகிழலாம். அக்குழந்தைகளுக்கு, பாலன்ஸ் செய்யவும், கன்ட்ரோல் செய்யவும் கற்றுத் தரும் சைக்கிள்கள், அத்துடன் அவர்களுக்கு நல்ல நம்பிக்கையையும் ஏற்படுத்துகின்றன.

விரிவான பலதரப்பட்ட வண்ணங்களிலும் டிசைன்களிலும் கிடைக்கும், இந்த குரோம் பெயிண்ட் பூசப்பட்ட நேர்த்தியான சைக்கிள்-கள், எஃகு மற்றும் முறிந்துபோகாத உறுதி வாய்ந்த பாலிமெர்களால் தயாரிக்கப்பட்டவை. அதுமட்டுமல்ல ; கடுத்தமான தரக்கட்டுப் பாட்டின் கீழ் தயாரிக்கப்பட்டவை. ஏனெனில், குழந்தைகள் விஷயத்தில் நாங்கள் எதையும் விட்டுக்கொடுப்பதில்லை.

Tobu®

குழந்தைகள் ஓட்டி மகிழும் சைக்கிள்கள்.

டோபூ என்டர்பிரைசஸ் பிரைவேட் லிமிடெட்,
8/29, கீர்த்தி நகர் இண்டஸ்ட்ரியல் ஏரியா, நியூதில்லி - 110015

everest/d87/TE/279 tam

கைகளாலும் அமுக்கி அமுக்கி நிறையப் புல்லைத் திணித்தாள்.

மனசுக்குள் மர்மமான படபடப்பு...

மஞ்சள் வெயிலும் மறைந்து விட்டது. மேகத்து வெளிச்சம் மட்டும் மிஞ்சி நின்றது. கருகருவென்று இருட்டு தூரத்திக் கொண்டு வந்தது.

ராசாத்தி துரிதமானாள். விறு விறுவென்று பெட்டியைத் தூக்கக் குனிந்த போது—

உரசிக் கொண்டு பின்னால் யாரோ நிற்பது போன்ற பதற்ற உணர்வு.

திரும்பிப் பார்த்தால்.... மாடசாமி.

அவனது சூடான மூச்சு இவளது தோளில் சுடுகிறது.

நிதானிப்பதற்குள் —

அவன் அவளைச் சுற்றித் தழுவிக் கொண்டான். முரட்டுத்தனமாய்ச் சேர்த்து அணைத்தான்.

திமிறினாள். தப்பிக்க முயன்று போராடினாள். திமிறிய திமிறலில் அலம்பி மல்லாக்க விழுந்தாள்.

நுகர்ந்து அறிந்திராத ஆண்வாடை; தொட்டு உணர்ந்திராத ஆண்மையின் உஷ்ணம்; அனுபவித்தறியாத ஆணின் மூர்த்தண்ய உணர்ச்சி... ஆற்று மணலை அள்ளி விழுங்குகிற புதுவெள்ளத்தின் வெறி வேகம்...

மலத்தை மிதித்துவிட்ட அருவெருப்பில் அவள் திமிறினாள்.

''டேய்... விடுடா... என்னை விடுடா... ஐயோ... கேவலப்படுத்திடாதேடா... விடுடா...'' என்று அலறிக் கொண்டே போராடினாள்.

''அங்க யார்டா அது?'' என்ற வேற்றுச் சத்தத்தில் மாடசாமி ஸ்தம்பித்துப் போனான். பதறிப் போய் எழுந்தான். அரை நிர்வாணமாய்—அலங்கோலமாய்—ராசாத்தி. உயிரையே அறுப்பது போல அவமானத்தில் துடித்தாள்.

பரபரவென்று துணியைச் சுற்றிக் கொண்டு எழுந்தாள். நனைந்த கோழிக் குஞ்சாக நடுங்கினாள்.

ஓட முயன்ற மாடசாமியை, வந்து சேர்ந்த மேலத் தெரு சின்னையா திமிற விடாமல் பற்றி, இறுகப் பிடித்துக் கொண்டார். ராசாத்தி தலையில் அடித்துக் கொண்டு அழுதாள்.

மாடசாமி அவரிடம் கெஞ்சி அழுதான். விட்டுவிடும்படி காலில் விழுந்து அர்த்தமில்லாத வார்த்தைகளை மிழற்றினான். அவர் அவனை அதட்டலான குரலில் சத்தம் போட்டார்.

''ஏலேய்... ஒனக்கு ராசாத்தி வேணும்னு தானடா... இம்புட்டுத் தூரம் வந்தே? படுவா ராஸ்கல், பயப்படாதே. ஊர்க் கூட்டத்துலே உங்களைக் கொண்டு போய் நிறுத்துறேன். ஊரறிய ராசாத்தியை ஏத்துக்கணும் நீ...''

உறுமினார். குற்றவாளியாய்த் தலைகுனிந்தான். அவரது மீசைக்கடியில் ஒரு பெருமிதப் புன்னகை.

''நீ என்னம்மா சொல்றே? ஒனக்குச் சம்மதமா?''

அவள் மௌனமாய் அழுது கொண்டிருந்தாள். காயம்பட்ட ரணத்தோடு கதறிக் கொண்டிருந்த அவளுக்கு, அவரது அதட்டலான கேள்வி ஆறுதலாய் இருந்தது...

கல்லில் மோதிய கால் பெருவிரல் சுரீரென்று வலித்தது. ராசாத்தி பிரக்ஞையுற்று, காலைப் பார்த்தாள். நகத்தைச் சுற்றி மெல்லிய ரத்தக் கசிவு. வலி சுண்டி இழுத்தது.

இன்னும் மஞ்சள் வெயில்தான் அடிக்கிறது. இடுப்பில் வெற்றுக் கடாப்பெட்டியோடு நடுத்தெருவின் இறுதி நுனியைக் கடக்கிற போது, திரும்பிப் பார்த்தாள்.

மடத்துத் திண்ணையில் குத்துக்கால் வைத்து உட்கார்ந்திருந்த மாடசாமி எங்கோ பார்த்துக் கொண்டிருந்தான்.

கண்ட கனவில் மனசு கசந்து அழுகியது. வெட்கத்திலும், அவமானத்திலும் மனசு குன்றிக் குறுகித் தவித்தது.

'ச்சே... இந்தக் கொரங்கு மனசு, எம்புட்டு வெக்கங் கெட்டுப் போய் அலையுது' என்று தன் மனசைத் தானே சபித்துக் கொள்ளும் போது... அவளுக்குள் ஓர் ஆழ்ந்த வேதனை சூழ்ந்து கொண்டு... நெரித்தது.



போலீஸ்: ரொம்ப ரொம்பக் கஷ்டப்பட்டுக் கடைசியில், கொலைகாரனைக் கைது பண்ணி லாக்கப்புல வச்சுட்டோம்!

இவர்: சபாஷ்... எங்கே சார் மாட்டினான்?

போலீஸ்: சரணடையணும்னு ஸ்டேஷனுக்கு வந்தான். விடுவோமா? 'லபக்'குன்னு பிடிச்சுக்கிட்டோம்...!

— கரடிகுளம் ஜெயாபாரதிப்ரியா.



அத்தியாயம் 47

பேய்ச் சிரிப்பு

இளவரசரும் பூங்குழலியும் யானை மீது ஏறிச் சென்ற பிறகு, பின் தங்கியவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பதை நாமும் நேயர்களுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம்.

"யானைக்கு மதம் பிடித்து விட்டது!" என்று சேநாதிபதி கூச்சலிட்டதைக் கேட்டு மற்றவர்களும் அப்படியே முதலில் நம்பினார்கள். யானையைப் பின்தொடர்ந்து குதிரைகளை வேகமாக விட்டுக் கொண்டு போகப் பார்த்தார்கள். ஆனால் அது இயலுகிற காரியமாயில்லை. யானை 'இறவு'த்துறையை அடைந்ததும் அவர்களுடைய பிரயாணம் தடைப்பட்டு விட்டது. வழக்கம் போல் எல்லாருக்கும் முதலில் சென்ற வந்தியத்தேவனுடைய குதிரை அக்கடல் துறையில் இறங்கிப் பாய்ந்து சேற்றில் அகப்பட்டுக் கொண்டது.

அமரர் கல்கி

மிக்க சிரமப்பட்டு அதை வெளியேற்றினார்கள். ஆனாலும் குதிரை இனிப் பிரயாணத்துக்குத் தகுதியில்லையென்று ஏற்பட்டது.

சேநாதிபதி பூதிவிக்கிரமகேசரி இன்னது செய்வதென்று தெரியாமல் தலையில் தலையில் அடித்துக் கொண்டார். "என் வாழ்க்கையில் இம்மாதிரி தவறு செய்ததில்லை. எல்லாரும் சும்மா நிற்கிறீர்களே? என்ன செய்யலாம்? இளவரசரை எப்படிக் காப்பாற்றலாம்? யாருக்காவது யோசனை தோன்றினால் சொல்லுங்கள்!" என்றார். அப்போது ஆழ்வார்க்கடியான் முன் வந்து "சேநாதிபதி! எனக்கு ஒன்று தோன்றுகிறது; சொல்லட்டுமா?" என்றான்.

"சொல்வதற்கு நல்ல வேளை பார்த்துக் கொண்டிருக்கிறாயா, சீக்கிரம் சொல்!" என்றார் சேநாதிபதி.

"இளவரசர் சென்ற யானைக்கு உண்மையில் மதம் பிடிக்கவில்லை......"

"என்ன உளறுகிறாய்? பின்னே யாருக்கு மதம் பிடித்தது? உனக்கா?"

"ஒருவருக்கும் மதம் பிடிக்கவில்லை. தாங்கள் வேண்டுமென்று பிரயாணத்தைத் தாமதப்படுத்துகிறீர்கள் என்ற சந்தேகம் இளவரசருக்கு உண்டாகி விட்டது. அதனால் நம்மை விட்டுப் பிரிந்து போவதற்காக யானையை அப்படித் தூண்டிவிட்டு வேகமாய்ப் போய் விட்டார். யானையைப் பழக்கும் வித்தையின் சகல இரகசியங்களையும் அறிந்தவர் இளவரசர் என்பதுதான் நம் எல்லாருக்கும் தெரியுமே?"

இது உண்மையாயிருக்கும் என்று சேநாதிபதிக்கும் பட்டது. அவர் உள்ளம் சிறிது நிம்மதி அடைந்தது.

"சரி அப்படியேயிருக்கட்டும்; ஆனாலும் நாம் தொண்டைமானாற்றின் முகத்துவாரத்துக்குப் போய்ச் சேர வேண்டும் அல்லவா? அங்கே நடப்பது என்ன என்றாவது தெரிந்து கொள்ள வேண்டும் அல்லவா?"

"போக வேண்டியதுதான். கடற்கழியின் ஓரமாகச் சென்று எங்கேயாவது படகு கிடைத்தால் அதில் ஏறிக் கொண்டுதான் கடந்தாக வேண்டும். அல்லது பார்த்திபேந்திர பல்லவரின் கப்பல் வரும் வரையில் காத்திருக்கலாம்."

"வைஷ்ணவரே! நீர் பொல்லாதவர். இளவரசரிடம் இப்படி ஏதாவது சொல்லி விட்டீர் போலிருக்கிறது."

"சேநாதிபதி! இந்தப் பிரயாணம் கிளம்பியதிலிருந்து நான் இளவரசருடன் பேசவே இல்லை."

இதன் பிறகு அவர்கள் அந்தக் கடற்கழியின் ஓரமாகக் கிழக்கு நோக்கிச் சென்றார்கள்.

சென்ற அத்தியாயத்தில் வெளியாகியிருந்த படங்களிலிருந்து நேயர்கள் இலங்கைத் தீவின் வடபகுதியின் இயல்பை ஒருவாறு அறிந்திருக்கலாம். இலங்கையின் வடக்கு முனைப் பகுதிக்கு அந்நாளில் நாகத்வீபம் என்று பெயர் வழங்கியது. அந்தப் பகுதியையும் இலங்கையின் மற்ற பெரும் பகுதியையும் இருபுறத்திலிருந்தும் கடல் உட்புகுந்து பிரித்தது. ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்குச் செல்லும்படியாகக் கடற்கழி மிகக் குறுகியிருந்த இடத்துக்கு 'யானை இறவு'த்துறை என்று பெயர். சில சமயம் இத்துறையில் தண்ணீர் குறைவாயிருக்கும். அப்போது சுலபமாக இறங்கிக் கடந்து செல்லலாம். மற்ற சமயங்களில் அதைக் கடப்பது எளிதன்று. படகுகளிலேதான் கடக்க வேண்டும். *

அந்தச் சமயத்தில் இலங்கைக் கடற்கரையோரமாக இருந்த படகுகள் எல்லாம் பெரும்பாலும் மாதோட்டத்துக்கும் திரிகோண மலைக்கும் சென்றிருந்தன. என்றாலும், தப்பித் தவறி எங்கேயாவது ஒன்றிரண்டு படகுகள் இருக்கலாம் என்று எண்ணிச் சேநாதிபதி முதலியவர்கள் பார்த்துக் கொண்டே சென்றார்கள். கடைசியாக மீன் பிடிக்கும் வலைஞனுடைய சிறிய படகு ஒன்று சிக்கியது. அதில் படகோட்டி ஒருவனேயிருந்தான். அவ

* யானை மந்தைகள் இந்த இடத்தில் கடலில் இறங்கிக் கடந்து செல்வது வழக்கமானபடியால் 'யானை இறவு' என்ற பெயர் வந்தது. முற்காலத்தில் இவ்விடத்தில் யானைகளைக் கப்பல்களில் ஏற்றி வெளி நாடுகளுக்கு அனுப்பியதாகவும் சொல்லப்படுகிறது.

னும் முதலில் வரமாட்டேன் என்று தகராறு செய்தான். கேட்கிறவர் சோழ நாட்டுச் சேநாதிபதி என்று தெரிந்து கொண்டு சம்மதித்தான்.

படகில் ஏறிக் கடல் கால்வாயைக் கடந்தார்கள். ஆனால் பிறகு எப்படித் தொண்டைமானாற்றின் முகத்துவாரத்தை அடைவது? காட்டு வழியில் நடந்து போய்ச் சேர்வது சுலபமன்று. அதிக நேரமும் ஆகும். ஆகையால், அதே படகை உபயோகித்துக் கீழைக் கடற்கரையோரமாகவே சென்று தொண்டைமானாற்றின் சங்கமத்தை அடைவதென்று தீர்மானித்தார்கள்.

நள்ளிரவு வரையில் படகுக்காரன் கடலோரமாகப் படகு விட்டுக் கொண்டு சென்றான். அதற்குப் பிறகு அவன் களைத்து விட்டான். மற்றவர்கள் உதவி செய்வதாகச் சொல்லியும் பயனில்லை. "இனி அடிக்கடி திசை திரும்ப வேண்டும். மூலை முடுக்குகளும் கற்பாறைகளும் அதிகம். பாறையில் மோதினால் படகு உடைந்து சுக்குநூறாகி விடும். இனிப் பொழுது விடிந்துதான் படகு செலுத்த முடியும்" என்றான். சேநாதிபதி முதலியவர்களும் களைப்ப





டைந்து போயிருந்தார்கள். ஆகையால் கரையில் இறங்கித் தோப்பு ஒன்றில் படுத்தார்கள்.

வந்தியத்தேவனுக்கு இது ஒன்றும் பிடிக்கவில்லை. அவன் ஆழ்வார்க்கடியானோடு சண்டை பிடித்தான். "எல்லாம் உன்னாலே வந்த வினை!" என்றான்.

"என்னால் என்ன இப்போது வந்தது?" என்று ஆழ்வார்க்கடியான் கேட்டான்.


"நீ ஒன்றையும் மனம் விட்டுச் சொல்வதில்லை. கடம்பூரிலிருந்து நானும் பார்த்துக் கொண்டுதான் வருகிறேன். கொஞ்சம் சொல்வது போல் சொல்கிறாய்; பாதிச் செய்தியை இரகசியமாய் வைத்துக் கொள்கிறாய். இளவரசர் யானைமேல் ஏறியதன் நோக்கம் உனக்குத் தெரிந்திருக்கிறதே? அதை என்னிடம் முன்னமே சொல்லியிருந்தால் நானும் அந்த யானையின் மேல் ஏறியிருப்பேன் அல்லவா? இவ்வளவு கஷ்டப்பட்டுத் தேடிப் பிடித்த இளவரசரை இப்போது கைநழுவ விட்டு விட்டோமே? பழையாறைக்குப் போய் இளையபிராட்டியிடம் என்ன சொல்வது?" என்றான் வந்தியத்தேவன்.

"ஓலையைக் கொடுத்ததும் உன் கடமை தீர்ந்து விட்டது. இன்னும் என்ன?" என்றான் ஆழ்வார்க்கடியான்.

"அதுதான் இல்லை. இளவரசரை இளையபிராட்டியிடம் கொண்டு போய்ச் சேர்த்த பிறகுதான் என்னுடைய கடமை தீர்ந்ததாகும். நீயே அதற்குக் குறுக்கே நிற்பாய் போலிருக்கிறதே!"

"இல்லை, அப்பா, இல்லை! நான் குறுக்கே நிற்கவில்லை. நாளைக்கே நான் சேநாதிபதியிடம் விடைபெற்றுக் கொண்டு என் வழியே போகிறேன்."

"உன் காரியம் முடிந்துவிட்டது. இளவரசரைப் பிடித்துக் கொடுத்தாகி விட்டதுஎன்றுபோகப்பார்க்கிறாயாக்கும். உன்பேரில் எனக்கு எப்போதுமே கொஞ்சம் சந்தேகமிருந்தது. இப்போது அது உறுதியாகிறது."



இவ்விதம் அவர்கள் சிறிது நேரம் சண்டைபிடித்துக்கொண்டிருந்தபிறகு தூங்கிப் போனார்கள். நன்றாகக் களைத்திருந்தபடியால் அடித்துப் போட்டவர்களைப் போல் தூங்கினார்கள்.

பலபலவென்று பொழுது விடியும் சமயத்தில் படகு வலிக்கும் சத்தம் கேட்டு ஆழ்வார்க்கடியான் முதலில் விழித்துக் கொண்டான். அவன் எதிரே தோன்றிய காட்சி அவனைத் திடுக்கிடச் செய்தது. கடலில் கொஞ்ச தூரத்துக்கப்பால் பாய்மரம் விரித்த மரக்கலம் ஒன்று நின்று கொண்டிருந்தது. அது பயணப் படுவதற்கு ஆயத்தமாக நின்றதாக நன்கு தெரிந்தது. அந்த மரக்கலத்தை நோக்கிக் கரையிலிருந்து ஒரு படகு போய்க் கொண்டிருந்தது. அதில் படகுக்காரனைத் தவிர மூன்று பேர் இருந்தார்கள். அந்தப் படகு முதல் நாள் மாலை தங்களை ஏற்றி வந்த படகுதான் என்று தெரிந்து கொள்ள ஆழ்வார்க்கடியானுக்கு அதிக நேரம் பிடிக்கவில்லை.

அந்த மரக்கலம் எங்கிருந்து திடீரென்று கிளம்பிற்று என்பதையும் அவன் விரைவிலே ஊகித்துக் கொண்டான். அவர்கள் படுத்திருந்த இடத்துக்குப் பக்கத்தில் கடல் பூமிக்குள் குடைந்து சென்றிருந்தது. மரங்கள் அந்த இடத்தை ஓரளவு மறைத்திருந்தன. அந்தக் குடாவிலேதான் அம்மரக்கலம் நின்றிருக்க வேண்டும். பொழுது விடிந்ததும் புறப்பட்டிருக்க வேண்டும்.

அந்த மரக்கலம் யாருடையது? எங்கிருந்து வந்தது? எங்கே போவது? படகு எதற்காகக் கப்பலை நோக்கிப் போகிறது? அதில் இருப்பவர்கள் யார்?

இவ்வளவு கேள்விகளும் ஆழ்வார்க்கடியானுடைய மனத்தில் மின்னலைப் போல் தோன்றி மறைந்தன.

"சேநாபதி! சேநாபதி! எழுந்திருங்கள்!" என்று கூவினான்.

சேநாதிபதியும் வந்தியத்தேவனும் மற்ற இரு வீரர்களும் திடுக்கிட்டு விழித்

தெழுந்தார்கள்.

முதலில் கடலில் நின்ற பாய்மரக் கப்பல் அவர்கள் கண்ணில் தென்பட்டது.

சேநாதிபதி, "ஓ! அது சோழ நாட்டுக் கப்பல்தான்! பழுவேட்டரையர்கள் அனுப்பிய கப்பலாகவே இருக்கலாம்! இளவரசர் ஒருவேளை அதில் போகிருரோ, என்னமோ? ஐயோ! தூங்கிப் போய் விட்டோமே! என்ன பிசகு செய்தோம்!" என்ருர்.

பிறகு, "படகு எங்கே? போய்க் கப்பலைப் பிடிக்க முடியுமா என்று பார்க்கலாம்?" என்ருர்.

அதற்குள் படகு சென்று கொண்டிருப்பதும் அவர் கண்ணில் படவே, "அடடே! அதோ போகிறது நாம் வந்த படகல்லவா? அதில் ஏறிப் போகிறவர்கள் யார்? அடே படகுக்காரா! நில் நில்!" என்று இரைந்தார்.

படகுக்காரனின் காதில் அது விழுந்ததோ என்னவோ தெரியாது. அவன் படகை நிறுத்தவில்லை. மேலே செலுத்திக் கொண்டு போனுன்.

இதையெல்லாம் பார்த்துக் கொண்டும் கேட்டுக் கொண்டுமிருந்தான் வந்தியத்தேவன். "அந்தக் கப்பலில் இளவரசர் போகிருர்!" என்று சேநாதிபதி கூறியது அவன் செவி வழியாகப் புகுந்து மனத்தில் பதிந்தது. அதற்குப் பிறகு வேறு எந்த நினைவிற்கும் அவன் மனத்தில் இடமிருக்கவில்லை. அவன் செய்ய வேண்டியது என்னவென்பதைப் பற்றித்தான் ஏதேனும் சந்தேகம் உண்டா? அவன் கால்களுக்குக் கட்டளையிட வேண்டிய அவசியந்தான் உண்டா? இல்லவே இல்லை! அடுத்த நிமிஷத்தில் அவன் கடலில் பாய்ந்து இறங்கினுன். அலைகளைத் தள்ளிக் கொண்டு அதிவேகமாகச் சென்ருன். நல்ல வேளையாகக் கடலோரத்தில் அங்கே தண்ணீர் அதிகம் இல்லை. ஆகையால் அதி சீக்கிரத்தில் வெகு தூரம் போய்விட்டான். படகின் அருகிலும் சென்று விட்டான். தண்ணீரின் ஆழம் திடீரென்று அதிகமாகி விட்டது. தத்தளிக்கும் நிலைமை ஏற்பட்டது. "ஐயோ! நான் முழுகிச் சாகப் போகிறேன்! என்னைக் காப்பாற்றுங்கள்!" என்று கத்தினுன். படகில் யாரோ சிரிக்கும் சத்தம் கேட்டது. பிறகு சிலர் பேசும் குரல்கள் கேட்டன. படகு நின்றது. படகுக்காரன் குனிந்து கைகொடுத்தான். வந்தியத்தேவன் படகில் ஏறி உட்கார்ந்தான். படகு மேலே சென்றது.

படகில் இருந்தவர்களை வந்தியத்தேவன் ஆராய்ந்து பார்த்தான். ஒருவன் தமிழ்நாட்டானே அல்ல. அரபு நாட்டான் போல் காணப்பட்டான். அவன் எப்படி இங்கு வந்தான் என்ற வியப்புடன் மற்ற இருவரையும் பார்த்தான். அவர்கள் முகத்தில் பாதியை மறைத்து முண்டாசு கட்டிக் கொண்டிருந்தார்கள். ஆனாலும் தமிழ் நாட்டவர்கள் என்று தெரிந்தது. அதுமட்டுமன்று. பார்த்த முகங்களாகவும் காணப்பட்டன. எங்கே, எங்கே பார்த்தோம் இவர்களை?—ஆ! நினைவு வருகிறது! பார்த்திபேந்திர பல்லவனுடன் தம்பளையிலிருந்து திரும்பி வந்தவர்கள் அல்லவா இவர்கள்? ஆழ்வார்க்கடியான் இவர்களைத்தானே இளவரசரைக் கொல்ல வந்தவர்கள் என்று சொன்னுன்? ஓகோ! இவர்களில் ஒருவனை வேருேர் இடத்தில்கூடப் பார்த்திருக்கிருேமே? மந்திரவாதி ரவிதாஸன் அல்லவா இவன்? ஆந்தை கத்துவது போல் கத்திவிட்டுப் பழுவூர் ராணியைப் பார்க்க வந்தவன் அல்லவா இவன்? சரி, சரி! இளவரசர் கப்பலில் இருப்பது தெரிந்துதான் இவர்கள் அதில் ஏறிக் கொள்ளப் போகிருர்கள்! ஆகா! இளவரசர் போகும் வழியில் இது ஓர் அபாயமா? நாம் அவசரமாய் ஓடி வந்து இந்தப் படகைப் பிடித்து ஏறியது எவ்வளவு நல்லதாய்ப் போயிற்று?......

படகு போய்க் கொண்டிருந்தது; மரக்கலத்தை நெருங்கிக் கொண்டிருந்தது.

படகில் இருந்தவர்கள் மௌனம் சாதித்தார்கள். வந்தியத்தேவனல் மௌனத்தைப் பொறுக்க முடியவில்லை. பேச்சுக் கொடுத்துப் பார்க்க

விரும்பினான்.

"நீங்கள் எங்கே போகிறீர்கள்?" என்று கேட்டான்.

"தெரியவில்லையா? அதோ நிற்கும் கப்பலுக்குப் போகிறோம்!" என்றான் மந்திரவாதி. பாதி மூடியிருந்த வாயினால் அவன் பேசிய குரல் பேயின் குரலைப் போலிருந்தது.

"கப்பல் எங்கே போகிறது?" என்று வந்தியத்தேவன் கேட்டான்.

"அது கப்பலுக்குப் போன பிறகு தான் தெரிய வேண்டும்" என்றான் ரவிதாஸன்.

மறுபடியும் படகில் மௌனம் குடி கொண்டது. வெளியில் கடலின் ஓங்கார நாதம் சூழ்ந்தது.

இப்போது மந்திரவாதி ரவிதாஸன் மௌனத்தைக் கலைத்தான். "நீ எங்கே அப்பா, போகிறாய்?" என்று கேட்டான்.

"நானும் கப்பலுக்குத்தான் போகிறேன்" என்றான் வந்தியத்தேவன்.

"கப்பலுக்குப் போய், பிறகு எங்கே போவாய்?"

"அது கப்பலில் ஏறிய பிறகுதான் தெரிய வேண்டும்!" என்று பாடத்தைத் திருப்பிப் படித்தான் வந்தியத் தேவன்.

படகு கப்பல் அருகில் சென்றது. மேலேயிருந்து ஓர் ஏணி கீழே இறங்கியது. அதில் ஒவ்வொருவராக ஏறிச் சென்றார்கள். ஏணி மேலே போவதற்குள் வந்தியத்தேவன் அதில் தொத்திக் கொண்டான். கப்பலின் மேல் தளத்தில் ஏதோ பேச்சு நடந்தது. அவனுக்குப் புரியாத பாஷையாகத் தொனித்தது. வந்தியத்தேவன் இன்னும் துரிதமாக ஏணியின் மீது ஏறிக் கப்பலின் தளத்தில் குதித்தான். குதித்த உடனே, "எங்கே இளவரசர்?" என்று இரைந்து கொண்டு சுற்றுமுற்றும் பார்த்தான்.

சுற்றிலும் அவன் பார்த்த காட்சி அவனுடைய இரும்பு நெஞ்சத்தையும் சிறிது கலக்கி விட்டது. அவனைச் சுற்றிலும் பயங்கரரூபமுள்ள அரபுநாட்டு மனிதர்கள் நின்றார்கள். ஒவ்வொருவனும் ஒரு ராட்சதனைப் போல் தோன்றினான். எல்லாரும் அவனை வெறித்துப் பார்த்துக் கொண்டு நின்றார்கள். அவனுடைய கேள்விக்கு யாரும் பதில் சொல்லவில்லை.

"ஏதோ பெரிய தவறு செய்து விட்டோம்" என்ற உணர்ச்சி வந்தியத்தேவன் உள்ளத்தில் உதித்தது. இது சோழ நாட்டுக் கப்பல் அல்ல; இருக்க முடியாது. இதில் உள்ளவர்கள் தமிழ் மாலுமிகள் அல்ல. பெரிய பெரிய குதிரைகளை விற்பதற்காகக் கொண்டு வரும் அரபு நாட்டு மனிதர்கள்.

இந்தக் கப்பலில் இளவரசர் இருப்பது இயலாத காரியம். அவசரப்பட்டு வந்து ஏறிவிட்டோம். தப்பிச் செல்வது எப்படி? கப்பல் ஓரத்தில் நின்று குனிந்து பார்த்தான். படகு போய்க் கொண்டிருந்தது. "படகுக்காரா! நிறுத்து!" என்று கூவிக் கொண்டு கடலில் குதிக்கப் போனான். அச்சமயம் ஒரு வஜ்ரத்தை நிகர்த்த கை பின்னாலிருந்து அவனுடைய குரல் வளையைப் பிடித்தது. ஓர் இழுப்பு; ஒரு தள்ளு. வந்தியத்தேவன் கப்பல் தளத்தின் மத்தியில் வந்து விழுந்தான். அவனுக்கு உக்கிர ஆவேசம் வந்துவிட்டது. குதித்து எழுந்து அவனைத் தள்ளியவனது முகவாய்க் கட்டையில் ஓங்கி ஒரு குத்து விட்டான். அந்த ஆறு அடி உயரமுள்ள அராபியன் தனக்குப் பின்னால் நின்றவனையும் தள்ளிக் கொண்டு படார் என்று விழுந்தான்.

வந்தியத்தேவனுக்குப் பின்னால் பயங்கரமான உறுமல் சத்தம் கேட்டது. நல்ல சமயத்தில் திரும்பிப் பார்த்தான். இல்லாவிட்டால் அவன் முதுகில் கத்தி பாய்ந்திருக்கும். திரும்பிய வேகத்தோடு கத்தியைத் தட்டிவிட்டான். அது 'டணார்' என்ற சத்தத்துடன் கப்பலில் விழுந்து, அங்கிருந்து தெறித்துப் பாய்ந்து, கடலில் விழுந்து மறைந்தது.

மறுகணம் வந்தியத்தேவனை நாலாபுறத்திலிருந்தும் பலர் வந்து பிடித்தார்கள். பிடித்தவர்கள் புரியாத பாஷையில் ஏதேதோ பேசிக் கொண்டார்கள். அவர்களுடைய தலைவன் அதிகாரக் குரலில் கட்டளையிட்டான். உடனே மணிக்கயிறு கொண்டு வந்து வந்தியத்தேவனுடைய கால்களையும்

அருள்வாக்கு



ஆசாரியர்களின் உயரிய நூல்களில் ஒன்று பஜகோவிந்தம். பக்தி இல்லையென்றால் அறிவினால் பயன் இல்லை என்றும் எனவே கல்வியின் லட்சியம் ஈஸ்வர பக்தியை வளர்ப்பதுவே என்றும் ஆசாரியர் அந்த ஸ்துதியால் உணர்த்துகிறார்.

மற்ற எதற்கும் நேரமில்லாத அளவுக்கு மக்கள் சதா சர்வ காலமும் உலகியல் கஷ்டகாலங்களினால் அவதிப்படுகின்றனர். இந்தக் கஷ்டங்கள் சொப்பன நிலையிலும் சென்று துன்புறுத்துகின்றன. ஒருவனது உத்தியோகம் அல்லது கல்வி நிலை எதுவாக இருந்தாலும் ஒவ்வொருவரும் கடவுள் தியானத்திற்குச் சிறிது நேரம் ஒதுக்கி வைக்க வேண்டும். இதனால் மன அழுக்கு நீங்க வழி பிறக்கும். ஒவ்வொரு நாளும் சேரும் அழுக்குகளை அன்றாடம் நீராடுவதால் நீக்குவதைப் போல் 'பஜ கோவிந்தம்' என்ற நீராட்டத்தினால் மனத்தைப் புனிதமாக்க வேண்டும் என்று சொல்கிறார் மகாகவி ஆசார்யர். அவர் வெறும் கவி மட்டுமல்ல. அருளும் நிறைந்தவர். ஆகவே அருட்கவியாவார். ஆசார்யரவர்களின் தரிசனத்தால் உலகம் க்ஷேமம் அடையும். அவரைத் தரிசனம் பண்ணும் பாக்கியம் உலக மக்களுக்கு முப்பத்திரண்டு வருஷங்கள்தான் கிடைத்தது. ஆனால் உலகம் உள்ள வரையில் அழியாத சிறந்த கவிதைகளை அவர் இயற்றியதன் மூலம் என்றும் நம்முடைய மக்களின் மனக்கண் முன் நிலைபெறச் செய்துவிட்டார். அவருடைய கவிதைகளை எல்லோரும் படிக்க வேண்டும். கேட்க வேண்டும்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

கைகளையும் கட்டினார்கள். கைகளை உடம்போடு சேர்த்துப் பிணைத்தார்கள். பின்னர் நாலு பேராக அவனைத் தூக்கிக் கொண்டு கீழ்த் தளத்துக்குப் போனார்கள். போகும்போதெல்லாம் உதைத்துத் திமிறி விடுவித்துக் கொள்ள வந்தியத்தேவன் முயன்றான். அந்த முயற்சி பலிக்கவில்லை. கப்பலின் அடித்தளத்தில் கொண்டு போய் அங்கே அடுக்கியிருந்த மரக் கட்டைகளின் மீது அவனைப் படார் என்று போட்டார்கள். அந்தக் கட்டைகளில் ஒன்றோடு சேர்த்துக் கட்டிவிட்டு மேலே சென்றார்கள்.

கப்பல் அப்படியும் இப்படியும் அசைந்து ஆடிற்று. கப்பல் தன் பிரயாணத்தைத் தொடங்கி விட்டது என்று வந்தியத்தேவன் அறிந்தான். கப்பல் ஆடியபோது மரக்கட்டைகள் அவன் மீது உருண்டு விழுந்தன. அவற்றை விலக்கிக் கொள்ள முடியாமல் அவனுடைய கைகள் கட்டப்பட்டிருந்தன.

"இந்தமுறைமட்டும்தப்பிப்பிழைத்தால்இனி அவசரப்பட்டுஎந்தக்காரியமும் செய்வதில்லை. ஆழ்வார்க்கடியானைப் போல் ஆழ்ந்து யோசித்த பிறகே செய்ய வேண்டும்" என்று வந்தியத்தேவன் மனத்தில் எண்ணிக் கொண்டான்.

அச்சமயம் பேய் சிரிப்பது போன்ற சிரிப்புச் சத்தம் அருகில் கேட்டது. வந்தியத்தேவன் மிகச் சிரமத்துடன் சற்று முகத்தைத் திருப்பிப் பார்த்தான். அங்கே மந்திரவாதி ரவிதாஸன் நின்று கொண்டிருப்பதைக் கண்டான். இதுவரை மந்திரவாதியின் முகத்தில் பாதியை மறைத்துக் கொண்டிருந்த துணி இப்போது நீக்கப்பட்டிருந்தது.

"அப்பனே! அந்தச் சோழர் குலத்துப் புலியைத் தேடிக் கொண்டு வந்தேன். புலி அகப்படவில்லை. ஆனால் வாணர் குலத்து நரியாகிய நீ அகப்

பட்டுக் கொண்டாய்! அந்த வரைக்கும் அதிர்ஷ்டந்தான்!'' என்றான்.

மேற்கூறிய நிகழ்ச்சிகளில் வந்தியத்தேவன் படகில் ஏறிச் சென்ற வரையில்தான் கரையில் இருந்தவர்கள் பார்த்தார்கள். மரக்கலத்திற்குள்ளே நடந்தது இன்னவென்பது படகோட்டிச் சென்றவனுக்கே தெரியாது. அவன் உடனே திரும்பிக் கரைக்கு வந்து சேர்ந்தான்.

சேநாதிபதி முதலியவர்கள் படகில் ஏறிக் கொண்டார்கள். இனி அந்த மரக்கலத்தைத் தொடர்ந்து போய்ப் பிடிக்க முடியாது என்ற தீர்மானத்துக்கு அவர்கள் வந்திருந்தார்கள். ஆகையால், தொண்டைமானாற்றின் சங்கமத்துக்குப் போய்ப் பார்க்க அவர்கள் எண்ணினார்கள். இன்னொரு கப்பல் அங்கே இருக்கலாம். அதில் ஒருவேளை இன்னும் இளவரசர் இருக்கலாம். எப்படியும் ஏதாவது செய்தியாவது கிடைக்கும் அல்லவா?

படகுக்காரனைக் கேட்டுப் பார்த்தார்கள். அவனிடமிருந்து ஒரு விவரமும் தெரியவில்லை. ''படகில் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தேன். அதிகாலையில் யாரோ வந்து தட்டி எழுப்பினார்கள். கப்பலில் கொண்டு விட்டால் நிறையப் பணம் தருவதாகச் சொன்னார்கள். நீங்கள் விழித்தெழுவதற்குள் திரும்பி வந்து விடலாம் என்று போனேன். வேறொன்றும் தெரியாது'' என்றான்.

மேலே கண்ட வரலாறுகளில் ஆழ்வார்க்கடியான், தான் அறிந்த வரையில் ஒன்று விடாமல் இளவரசரிடம் கூறினான்.

பின்னர், ''இளவரசே! வந்தியத்தேவன் கடலில் குதித்துப் பாய்ந்து சென்றபோது அவனைத் தொடர்ந்து நானும் போகலாமா என்று முதலில் நினைத்தேன். ஆனால் எனக்குக் கடல் என்றால் எப்போதுமே சிறிது தயக்கம் உண்டு. நன்றாக எனக்கு நீந்தத் தெரியாது. அத்துடன், அதோ போகிறதே, அந்தக் கப்பலைப் பற்றியும் எனக்குச் சிறிது சந்தேகம் ஏற்பட்டது. அதில் தாங்கள் ஏறிப் போவது சாத்தியமில்லை என்று தோன்றியது. இன்னும், அந்தக் கப்பல் சோழ நாட்டுக் கப்பலாயிருக்க முடியுமா என்ற ஐயமும் உண்டாயிற்று. இதைப் பற்றிச் சேநாதிபதியிடமும் கூறினேன். இருவரும் இங்கே வந்து பார்த்து முடிவு செய்வது என்று தீர்மானித்துக் கொண்டு வந்தோம். தங்களைப் பார்த்த பிறகுதான் எங்கள் மனம் நிம்மதி அடைந்தது!'' என்றான்.

ஆழ்வார்க்கடியான் கூறியதையெல்லாம் கவனமாகக் கேட்டுக் கொண்டு வந்த அருள்மொழி வர்மர், ''ஆனால் என் மனத்தில் நிம்மதி இல்லை. திருமலை! வந்தியத்தேவன் அந்தக் கப்பலில் போகிறான். அவனைப் பழுவேட்டரையர்கள் பிடித்துப் பாதாளச் சிறையில் தள்ளி விடுவார்கள்!'' என்றார்.

அப்போது சேநாதிபதி, ''இளவரசே! அந்தக் கொடியவர்களின் அதிகாரத்தை எதற்காகப் பொறுத்திருக்க வேண்டும்? தாங்கள் மட்டும் சம்மதம் கொடுங்கள். அடுத்த பௌர்ணமிக்குள் பழுவேட்டரையர்களின் அதிகாரத்தைத் தீர்த்துக் கட்டி அந்தப் பாதாளச் சிறையில் அவர்களையே அடைத்துவிட்டு மறு காரியம் பார்க்கிறேன்'' என்றார்.


''ஐயா! என் தந்தையின் விருப்பத்துக்கு விரோதமாக நான் அணுவளவும் நடந்து கொள்வேன் என்று தாங்கள் கனவிலும் எதிர்பார்க்க வேண்டாம்!'' என்றார் இளவரசர்.

இந்தச் சமயத்தில் குதிரை ஒன்று வேகமாக வரும் சத்தம் கேட்டு எல்லாரும் திரும்பிப் பார்த்தார்கள். சற்றுத் தூரத்திலேயே அந்தக் குதிரை நின்றது. முகக் கயிறு, உட்கார ஆசனம் ஒன்றுமில்லாமல் அந்தக் குதிரைமேல் ஏறி வந்தவள் ஒரு ஸ்திரீ என்று அறிந்ததும் அனைவரும் வியப்படைந்தார்கள்.

(தொடரும்)

N.S.K. பில்டர்ஸ்

அறிமுகப்படுத்துகிறோம்!




இந்தியாவிலேயே, முதல் முறையாக அனைத்து பிக்சட் டெபாஸிட்டுகளுக்கும் நில உத்திரவாதம் அளிக்கும் புரட்சிகரமான திட்டத்தை அறிமுகப்படுத்துகிறோம். உங்களின்சேமிப்பிற்கு முழுப் பாதுகாப்பு.

R.B.I. யின் வரம்புக்கு உட்பட்டு இன்னும் சில டெபாஸிட்டுகளே ஏற்றுக் கொள்ளப்படும். 30-4-88 வரை வட்டி விகிதங்கள்.

1 வருடம்	2 வருடங்கள்	3 வருடங்கள்	5 வருடங்கள்
17%	18%	19%	21%

மேலும், 5 ஆண்டு டெபாஸிட்டுகளுக்கு இலவச பரிசுகள் வழங்கப்படும்.

டெபாஸிட் தொகை	இலவச பரிசு
ரூ. 5000	குவார்ட்ஸ் சுவர்க் கடிகாரம்
ரூ. 10000	மின் விசிறி
ரூ. 25000	மிக்ஸி
ரூ. 50000	வெட்கிரைண்டர்
ரூ. 100000	1 சவரன் தங்கக்காசு











மேற்கண்ட வட்டி விகிதங்களும், இலவச பரிசுகளும் 30.4.88 வரை மட்டுமே.

மே 1 முதல் வட்டி விகிதங்கள் குறைக்கப்படுவதால், ஏப்ரல் 30 தேதிக்குள் டெபாஸிட்டை செலுத்தி பயனடையும். அரிய சந்தர்ப்பத்தை நழுவ விடாதீர்கள்.

மே 1 முதல் புதிய வட்டி விகிதங்கள்.

1 ஆண்டு	2 ஆண்டுகள்	3 ஆண்டுகள்	5 ஆண்டுகள்
16%	17%	18%	20%

ஆண்டு வட்டிக்கு 1% அதிகம்.

NSK பில்டர்ஸ்
58-B, பர்கிட் சாலை (முதல் மாடி), தி. நகர், சென்னை-600 017.
தொலைபேசி எண்: 445252, 442106

வளமான வாழ்க்கைக்கு N.S.K.

EXELADS/NSK 004/88 (TAM)

எமிலியா இப்படிச் செய்து விட்டாள்? கேள்விப்பட்ட விஷயத்தை என்னால் நம்ப முடியவில்லை.

எனக்கு எமிலி சத்யதேவியை ரொம்பவும் பிடிக்கும். ரொம்பவும் என்றால்? —

கல்யாணம் ஆகி பதினேழு வருடமான பிறகு, நாற்பத்தோராம் வயதில், 'சே!' இது வரைக்கும் கல்யாணம் பண்ணிக்காமலே இருந்திருந்தால் நல்லாயிருக்கும்' என்று என்னை இப்போது நினைக்கத் தூண்டுமளவிற்கு...

— எமிலி சத்யதேவி என் மாணவி — மூன்றுமாண்டு வேதியியல் மாணவிகளில் ஒருத்தி. வயது... பதினெட்டு அல்லது பத்தொன்பது...

— இது வரை சொன்னதை வைத்துக் கொண்டு அவசரப்பட்டு என்னைப் பற்றி ரொம்ப மட்டமான முடிவுக்கு வந்து விடாதீர்கள், ப்ளீஸ்! எமிலியைப் பற்றித் தெரிந்து கொள்ளும் ஒரு முதல் தர, கண்ணியமான மனிதருக்குக் கூட அப்படி ஒரு நினைப்புத் தோன்றாமல் இருந்தால் ஆச்சரியம்!

— அவள் அப்படி!

—அவளது குணம் அப்படி!

நல்ல நிறமென்றோ, ரொம்ப அழகான முகமென்றோ, கவர்ச்சியான உடல் வாகென்றோ சொல்லிவிட முடியாது. அப்படி யாராவது எமிலியைப் பார்த்துச் சொன்னால் அது வெறும் பிதற்றலாக இருக்க



மென்மைக்குள் வன்மம்

வேண்டும் அல்லது சொல்பவன் எமிலியைக் காதலிப்பவனாக இருக்க வேண்டும்.

நான் எமிலியைக் காதலிக்கவில்லை. அது முடியவும் முடியாது. காரணம் வேறொன்றுமில்லை — வயது!

இருந்தாலும்...

— எனக்கு எமிலியை ரொம்பவும் பிடிக்கும்.

ஆண், பெண் இருபாலரும் சேர்ந்து பயிலும் கல்லூரி எங்களுடையது. முதல் நாள் வகுப்பிற்குள் பயந்து செத்தபடியே நுழையும் மாணவிகளெல்லாம், இரண்டாம் ஆண்டு நுழையும்போது மாணவர்களோடு சகஜமாக அரட்டை அடிக்கும் அளவிற்கு மனத்தில் உறுதியும் தைரியமும் பெற்று விடுவது இங்கே வாடிக்கைதான்.

ஆனால் எமிலி இவர்களிடமிருந்தெல்லாம் விலகி, தனித்து நின்றாள்.

நான் அனிச்ச மலரைப் பற்றி இலக்கியத்தில்தான் படித்திருக்கிறேன். பார்த்ததில்லை. ஆனால் யாராவது அனிச்ச மலரைப் பாரக்க வேண்டுமென்றால், நான் தயங்காமல் எமிலியைத்தான் காட்டுவேன்!

மென்மை!

அவ்வளவு மென்மை! — தோற்றம், நடத்தை இரண்டிலுமே —

எப்போதும் பயந்து, மருண்டு நிற்கும் கண்கள். நாலு வார்த்தைகள் உச்சரிப்பதற்குள் பட்டுப்பூச்சி இறகுகள் போல் படபடக்கும் இமைகள், சாந்தமான முகம். ஒரு வார்த்தை பேசிவிட்டு, அடுத்து இந்த வார்த்தை பேசலாமா? — அது தப்பாகி விடுமோ? — வேறு வார்த்தை பேசலாமா? — அது பொருத்தமாயிருக்காதோ? என்று தேடித் தேடிப் பாதிப் பாதி வார்த்தைகளைப் பிரசவித்து விட்டுத் துடிக்கும் உதடுகள்!

அதே எமிலி — கொஞ்சமும் மாறிவிடவில்லை!

எனக்கு நன்றாக நினைவிருக்கிறது — அவள் கல்லூரியில் அட்மிஷனுக்கு வந்த நாள்...

"புரொபஸர்... புரொபஸர் நாகராஜன்...?" — என்னிடமே வந்து தயங்கித் தயங்கிக் கேட்டாள்.

"யெஸ். நான்தான்."

"கெமிஸ்ட்ரி அப்ளிகேஷன் கொடுக்கணும்" — மீண்டும் வார்த்தைகளை உதிரிகளாக உதிர்த்தாள். நெற்றி வியர்த்து விட்டது.

"கொடுக்கலாமே" என்றேன்.

கொடுத்தாள். கொடுக்கும் போதே டிசம்பர் மாதத்து ஊட்டிக் குளிர் போல அவளது கைகளும் விரல்களும் நடுங்கின.

வாங்கிப் பார்த்தேன். குண்டு குண்டான கையெழுத்து என்னை ஈர்த்தது.

"பேரென்னம்மா?"

"எமிலி..."

"சத்ய தேவியா?"

"ஆமாம் சார்..."

"கிறிஸ்டியனா?"

"ஆமாம்... சார்..." — அவளது கண்கள், இமைகள், நாசி, உதடுகள், கரங்கள், விரல்கள் — அவள் உடல் முழுவதும் நடுக்கம்.

"ஏம்மா இப்படி பயந்து நடுங்கறே? தைரியமா இரு..."

கைக்குட்டையால் முகத்தைத் துடைத்துக் கொண்டாள். அதன் பெரும் பகுதி நனைந்து போயிற்று.

அப்ளிகேஷனைப் புரட்டிப் பார்த்தேன். நல்ல மார்க் வாங்கியிருந்தாள். புரட்டிக் கொண்டே வந்தேன். கடைசியில் கையெழுத்துப் போட வேண்டிய இடத்தில் போட மறந்திருந்தாள்.

"கையெழுத்து போடக் காணோம்? யார் போடுவா?" — நான் அதட்டவில்லை. மெதுவாகத்தான் கேட்டேன். அவள் அழுது விடுவாள் என்று தெரிந்திருந்தால் அதைக் கூடக் கேட்டிருக்க மாட்டேன்.

கேவ ஆரம்பித்து விட்டாள்!


ஒரு கையால் கண்களைத் துடைத்துக் கொண்டே, நடுங்கும் பேனாவினால் கையெழுத்திட்டாள். அப்போது கூட அந்தக் கையெழுத்து அழகாகத்தான் இருந்தது.

கல்லூரியில் நுழையும் காலத்தில் இப்படி நடுங்குவதும் அழுவதும் பெரிய அதிசயமென்று சொல்ல முடியாது.

ஆனால் எமிலி மூன்றுமாண்டு வந்த பின்னும் அப்படியே இருந்தாள் — அதே பதற்றம் — அதே நடுக்கம்!

அந்த நாணம், அமைதி, அடக்கம் எல்லாம்

'ராஜ்கோகுல்'



மனைவி: சான்ஸ் கிடைத்தும் அந்தச் சபாவுக்கு ஏன் பாடப் போகாமல் இருந்துட்டீங்க?

பாகவதர்: கனவில் கப்புடு வந்து ஒரு முறை முறைத்ததில் குலைநடுக்கம் எடுத்துட்டுது!

— உ. ராஜாஜி.

ஒரு ரசனைகெட்ட ஜென்மத்தைக் கூட அவளை ரசிக்க வைத்துவிடும்.

'செருப்பாலே அடிப்பேன்' என்று ஒருத்தி விடாமல் எல்லா மாணவிகளிடமும் திட்டு வாங்கும் ரௌடி மாணவர்கள் கூட எமிலியைக் கண்டால் ஒதுங்கி விடுவார்கள். ''அது பாவம்டா, பயந்தாங்கொள்ளி! விட்டுடுங்க'' என்பார்கள்.

நான் பலமுறை நினைத்திருக்கிறேன் — என் மனைவி கௌரி கூட இவளைப் போலவே பயந்தவளாக, அட்லீஸ்ட், எனக்கு மட்டுமாவது பயந்தவளாக இருந்திருக்கக் கூடாதா?

இன்னும் ஒரு படி மேலே போய் இப்படியும் நினைத்திருக்கிறேன். நான் ரொம்ப அவசரப்பட்டு விட்டேன். இருபது வருஷங்கள் கழித்துப் பிறந்திருக்கலாம். எமிலிக்கு எதிர் வீட்டில் பிறந்திருக்கலாம். அல்லது எமிலியாவது இருபது வருஷங்கள் முந்திப் பிறந்திருக்கலாம். என் பக்கத்து வீட்டில் பிறந்திருக்கலாம். இரண்டுமே தப்பி விட்டது!

ஒரு பொய்ப் போர்வைக்குள் என்னை நான் மறைத்துக் கொள்ள விரும்பவில்லை.

என் கௌரியைப் பற்றிக் குறை சொல்ல எதுவும் இல்லை. இந்தப் பதினேழு வருட வாழ்க்கையில் அவள் என்னையும், என் இரு பிள்ளைகளையும் கண் போலக் காத்து வருகிறாள்.

இருந்தாலும் எமிலியின் மென்மை என்னை ஆட்கொண்டுதான் விட்டது. மறுப்பதற்கில்லை.

அப்படிப்பட்டவளுக்கு....

அவ்வளவு மென்மையானவளுக்கு...

எப்படி இவ்வளவு தைரியமும் உறுதியும்...?

நான் கேள்விப்பட்ட செய்தி என்னை ஓர் உலுக்கு உலுக்கி எடுத்து விட்டது.

லாப் அசிஸ்டெண்ட் மகாதேவன்தான் விஷயத்தைச் சொன்னான். அவன் குரலில் கிண்டல் கலந்திருந்தது.

''அந்தப் பொண்ணு எதிர் வீட்டுப் பையனோட ஓடிப் போயிடுச்சாம், புரொபஸர். இந்தப் பூனையும் பால் குடிக்குமாங்கிற கதையா இருக்கு!''

''ஓடிப்போயிடுச்சா...?'' —நான் அதிர்ந்து போனேன்.

— நீ ஏன் அதிர்ச்சியடைய வேண்டும்? என்னவோ உனக்காகவே பூத்திருந்த பூவை எவனோ கிள்ளிக் கொண்டு போவதைப் போல?

— இல்லை. அது அப்படியில்லை. அவள் சீரான பாதையில் நெடுங்காலம் ஓட வேண்டிய அழகிய ரதம். அது பாதை தவறித் தடம் புரண்டு போய்விடக் கூடாது. அதுதான் என் கவலையெல்லாம். அதனால்தான் அதிர்ச்சி.

''இப்ப எங்கே இருக்காங்களாம்?'' — நான் தொடர்ந்து கேட்டேன்.

''தெரியலீங்க புரொபஸர். நேற்று சாயந்திரம் காலேஜ் முடிஞ்சு வீட்டுக்குப் போகலையாம். மன்னார்குடி பெரிய கோவிலிலே போய்க் கல்யாணம் பண்ணிக்கிறதா திட்டம்னு பேசிக்கிறாங்க...''

'இராசகோபால சாமியே! எமிலியைக் காப்பாத்திடுப்பா!'— நான் மானசீகமாக வேண்டிக் கொண்டேன்.

இனி எமிலியைப் பார்க்கவே முடியாதோ?

நான் வருத்தப்பட்டேன். ஒரு நல்ல மாணவியை, புத்திசாலி மாணவியை இழப்பதற்காக வருத்தப்பட்டேன்.

வகுப்பில் முதல் வரிசையில் அமர்ந்து நான் சொல்லும் ஒவ்வொரு வார்த்தையையும் கிரகித்துக் கொள்வாள். நான் சொன்னதைப் புரிந்து கொண்டதற்கு அடையாளமாக அவள் கண்களில் ஒளி ஓடும். அப்படித் தோன்றும் ஒளியும், முகமலர்ச்சியும்தான் ஒரு நல்ல ஆசிரியருக்கு டானிக். என் திறமையை நானே பார்த்துக் கொள்ள அவள் ஒரு பிரதிபலிப்புக் கண்ணாடி!

இனி நான் எந்தக் கண்ணாடியில் பார்ப்பது?

ஒரு வாரமாக ஊரில் இல்லை. பரீட்சை பேப்பர் திருத்தும் வேலையாக மாயவரம் சென்று விட்டு நேற்று இரவுதான் திரும்பியிருந்தேன்.

ஒரு வாரத்திற்குப் பின் வகுப்பிற்குள் நுழைந்தேன். எப்போதும் உட்காரும் இடத்தில் எமிலி இல்லை. அட்டெண்டென்ஸ் எடுக்க ஆரம்பித்தேன்.

''எக்ஸ்க்யூஸ் மீ சார்'' — வெளியிலிருந்து ஒரு குரல்.

யாரது? எமிலியின் குரல் மாதிரி?

அதே விநாடியில் திரும்பிப் பார்த்தேன். எமிலியேதான் வாசலில் நின்றாள். எனது சந்தோஷம் கொப்பளித்தது.

''யெஸ்... கம் இன்...'' சொல்லும்போது தான் கவனித்தேன் — அவள் கழுத்தில், மொத்தமாக, பளிச்சென்று ஒரு புது மஞ்சள் கயிறு!

என் சந்தோஷம் அதிர்ச்சியாக உருமாறியது.

வகுப்பு முடிந்ததும் பியூனைவிட்டு எமிலியை என் அறைக்கு அழைத்து வரச் சொன்னேன்.


அமிர்தாஞ்சனின் ஹீரோ சூப்பர் பாம்.
சீன மொழியில் இதன் மறுபெயர்
'வலி நிவாரணம்'.
HERO
Limited
OBM 707 TM
ஹீரோ சூப்பர் பாம் தமிழ்நாட்டில் மட்டுமே கிடைக்கிறது.

வாசகர் பங்கு:



மாறிவரும் அரசியல் சூழ்நிலைகள் சமுதாயப் பிரச்னைகள் போன்ற எதையும் நமது ஆஸ்தான ஜோக்கர் விட்டு வைக்க மாட்டார். என்ன 'விட்' அடிப்பார் என்பதைத்தான் கீழே கூப்பனில் நீங்கள் எழுதி அனுப்ப வேண்டும். கூட்டத்தில் பேசுவது போலவோ தலைவர் அல்லது தோழரிடம் உரையாடலாகவோ அமைந்திருக்கலாம். பிரசுரமானால் பரிசு ரூ. 25. தவிர ஒருவரே எழுதிய துணுக்குகள் சில அடுத்த பல இதழ்களில் பிரசுரமானால் ஒவ்வொரு முறையும் பரிசு இரட்டிப்பாகும். அதிகபட்சப் பரிசு ரூ. 400! உறை மீது "தளபதி இடமதி" என்று குறிப்பிடுக.

கூப்பன்:

கல்கி இதழ் 14.2.88 — முடிவு தேதி: 23.2.88.

தளபதி இடமதி:"...........................

....

....

....

....

....

....

....

....

....

....

....

என் பெயர்:..............................

விலாசம்:.................................

....

வந்து நின்றான்.

என்ன கேட்பது? எங்கே ஆரம்பிப்பது? அவளது சொந்த வாழ்க்கையைப் பற்றித் துருவிக் கேட்பது நாகரிகமா?

அவளே பேச ஆரம்பித்தாள். குரலில் அதே தடுமாற்றம். "நான், புதன்கிழமை... கல்யாணம் பண்ணிக்கிட்டேன் சார்..." வார்த்தைகள் கோவையின்றி உதிரியாக வெளிப்பட்டன. அதே எமிலி! பேசும்போது அதே நடுக்கம்.

"கங்கிராஜுலேஷன்ஸ்! பெஸ்ட் விஷஸ் ஃபார் எ ஹாப்பி மாரீட் லைஃப்!" —என்னால் எப்படி மனம் திறந்து வாழ்த்துச் சொல்ல முடிகிறது!

"அவர் — உன் ஹஸ்பண்ட் என்ன பண்றார்?"

"கூட்டுறவுக் கடையிலே சேல்ஸ் மேனா இருக்கார் சார். பேரு சீனிவாசன். நீங்க பார்த்திருப்பீங்க."

"அவரு கிறிஸ்டியன் இல்லையா?"

"ஹிந்து!"

"வீட்டிலே பேரண்ட்ஸ் சம்மதத்தோட நடந்துதா?"

"இல்லீங்க புரொபஸர். இந்த நிமிஷம் வரைக்கும் சம்மதிக்கலே. கூடிய சீக்கிரம் சமாதானமாகிடுவாங்க. ஆகலேன்னாலும் பரவாயில்லே" அவளது குரலில் அதே நடுக்கம். ஆனால் வார்த்தைகளில் உறுதி!

"உங்க வீட்டுக்காரர்கிட்டேயும் இப்படித் தான் பயந்து நடுங்கிக்கிட்டே பேசுவியா?"

"இல்லே" என்ற அர்த்தத்தில் தலையை ரொம்ப வேகமாக ஆட்டுகிறான். முகத்தில் புன்னகை அரும்பு கட்டுகிறது.

ஒரு பெண் எவ்வளவுதான் மென்மையானவளாக இருந்தாலும், அந்த மென்மைக் குள்ளே ஓர் ஆண் மகனை அடக்கியாளக் கூடிய வன்மை இருக்கத்தான் செய்யுமோ?

"ஓ. கே. எமிலி. உன்னுடை தைரியத்தையும், உறுதியையும் நான் உண்மையிலேயே பாராட்டறேன். ஆல் தி பெஸ்ட்."

நன்றி சொல்லிவிட்டுத் திரும்பி நடந்தாள் திருமதி எமிலி சீனிவாசன்.

ரொம்ப மென்மையானவள் என்று நான் நினைத்துக் கொண்டிருந்த எமிலியின் உறுதியின் முன்னே தவிடு பொடியாகிப் போயிருந்தேன்.

'யூ ஆர் ரியலி கிரேட் எமிலி. 'வாருங்கள், எங்கேயாவது போய்த் திருமணம் செய்து கொள்ளலாம்' என்று நீ அழைத்திருந்தாலும், நான் தைரியமாக வந்திருக்க மாட்டேன். சாதி, மதம், சம்பிரதாயம், குடும்பம், சமுதாயம் எனும் வேலிகளுக்குள்ளேயே நான் கட்டுப்பட்டுக் கிடந்திருப்பேன். மதம் மாறிக் கல்யாணம் செய்து கொள்ளும் துணிவு என்னிடம் நிச்சயம் இருந்திருக்காது. நல்ல காலம்! நீ இருபது வருடங்களுக்கு முந்தியோ நான் இருபது வருடங்களுக்குப் பிறகோ பிறக்க வில்லை! ஆனால், முன்பு எப்போதையும் விட உன்னை எனக்கு ரொம்ப ரொம்ப, ரொம்பப் பிடித்திருக்கிறது!



அறிமுகப்படுத்துகிறோம் சகலகலா வல்லவரை

ULIP

வேறு எந்த திட்டத்தாலும் உங்களுக்கும் உங்கள் குடும்பத்திற்கும் இவ்வளவு செய்ய இயலாது.

- ஆயுள் மற்றும் விபத்திற்கான காப்பு
- வருடாந்திர லாபப் பங்கு 13.25%
- திட்ட முதிர்ச்சியின்போது ஊக்கத் தொகை 5% to 7.5%
- வருமான வரி விலக்கு
- உங்கள் பணத்திற்கு முழு பாதுகாப்பு

Rs. 300/- முதல் Rs. 4000/- வரை யூனிட் டிரஸ்டின் யூனிட்டுடன் இணைக்கப்பட்ட காப்பு திட்டத்தில் (Unit Linked Insurance Plan) வருடாந்திர முதலீடு செய்வதால் மேற்கூறிய அனைத்தும் பெறலாம்.

தற்போது 50 வயதுக்கு உட்பட்ட எவரும் இத்திட்டத்தில் சேரலாம்.

உங்களுக்கு அருகாமையில் உள்ள கனரா வங்கியின் கிளையையோ, யூனிட் டிரஸ்டின் முக்கிய பிரதிநிதியையோ அல்லது முகவரையோ உடனே அணுகுங்கள்.

யூனிட் டிரஸ்ட் ஆஃப் இந்தியா
(ஒரு பொதுத்துறை நிதி நிறுவனம்)
தலைமை அலுவலகம் பம்பாய்-400 020.

UNIT TRUST OF INDIA

Regional Office : 45, II Line Beach, Post Bag No : 5063, Madras - 600 001 Phone : 27433/20938

Bangalore Office : 'World Trade Centre', Chamber of Commerce Building, K.G. Road, Bangalore 560 009. Phone : 28739.

Hyderabad Office : 203/204, Moghul Court Complex, II Floor, Basheer Bagh, Hyderabad 500 001.

Trichur Office : 12/758, Thekkemadom Road, Trichur 680 001. Phone : 24690.

Vijayawada Office : Challapally Bungalow Eluru Road, Governorpet Vijayawada 520 002. Phone : 63964.

ULIP - அனைத்தும் ஒன்றாய் இணைந்த திட்டம்.

6,7 நட்சத்திர ஓட்டல்களும் உண்டு!



பொதுவாக, ஐந்து நட்சத்திர ஓட்டல்கள் பற்றித்தான் பேசுகிறோம், படிக்கிறோம். ஆனால், இதற்கும் மேல், ''ஐந்து நட்சத்திர டீலக்ஸ் ஓட்டல்களும் ஆறு, ஏழு நட்சத்திர ஓட்டல்களும் கூட உண்டு!'' என்கிறார் தாஜ் ஹோட்டல் மார்க்கெட்டிங் நிர்வாகி சேகர் மணி.

''ஓட்டல்களுக்கு நட்சத்திர அந்தஸ்து வழங்குவது யார்?''

''அந்தந்த நாட்டு அரசாங்கத்தின் சுற்றுலாத் துறைதான்.''

''நட்சத்திர அந்தஸ்து பெற ஓட்டல் எப்படி அமைய வேண்டும்?''

விளக்குகிறார் சேகர் மணி:

* மிகவும் சிறப்பாகக் கட்டப்பட்ட, காற்றோட்டமுள்ள குளியலறை வசதியுடன் கூடிய பத்து அறைகள் கொண்டிருக்க வேண்டும். ஒவ்வோர் ஒற்றை அறையும் நூறு சதுர அடியும், இரட்டை அறை நூற்றியிருபது சதுர அடியும் பரப்புடையதாய் இருக்க வேண்டும். டெலிபோன், உணவகம், வசதியான சமையலறை ஆகியவை இருக்க வேண்டும். வேலை செய்கிறவர்கள் சுத்தமான சீருடை அணிந்து, ஆங்கில அறிவு பெற்றிருக்க வேண்டும் — இதெல்லாம் இருந்தால் 'ஒரு' நட்சத்திர அந்தஸ்து கிடைக்கும்.

** இரண்டு நட்சத்திர ஓட்டல் என்றால், ஒரு நட்சத்திர ஓட்டலில் உள்ள வசதிகளுடன், ஷவருடன் கூடிய குளியலறைகள், இருபத்தைந்து சதவிகித அறைகளில் ஏர்கண்டிஷன் வசதி, விசாலமான லவுஞ்ச், ஒவ்வொரு தளத்திலும் டெலிபோன் வசதி, சமையலக வசதி ஆகியவை கொண்டிருக்க வேண்டும்.

*** மூன்று நட்சத்திர ஓட்டல்களில் குறைந்தபட்சம் இருபது அறைகளாவது இருக்க வேண்டும். அவற்றில் ஐம்பது சதவிகித அறைகள் ஏர்கண்டிஷன் செய்யப்பட்டிருக்க வேண்டும். இரண்டு மாடிகளுக்கு அதிகமாயிருந்தால் லிஃப்ட் வசதி இருக்க வேண்டும். இவை தவிர புத்தக ஸ்டால், டிராவல் ஏஜென்ஸி, பாங்க் வசதி, ஒவ்வோர் அறையிலும் டெலிபோன் வசதி, ஏ. சி. செய்த டைனிங் ரூம், பர்மிட் ரூம், நவீன சமையலறை இத்தனையும் இருக்க வேண்டும்! மேலும், இந்திய, அகில உலக உணவு வகைகள் வழங்கும் வசதி, அனுபவம் மிக்க ஆங்கில அறிவு உடைய பணியாளர்கள், போன்றவையும் பெற்றிருக்க வேண்டும்.

**** நான்கு ஸ்டார் ஓட்டல்களில் மூன்று ஸ்டார் வசதிகள் + அயல்நாட்டு மொழியறிவுடைய சில பணியாளர்கள், இருபத்திநாலு மணி நேரமும் குழாயைத் திறந்தால் வெந்நீர் வழங்கும் வசதியான பாத்ரூம்கள், நடனம் ஆட வசதியுடன் கூடிய ரெஸ்டாரண்ட்கள் ஆகியவை இருக்க வேண்டும். குறைந்தபட்ச அறைகளின் எண்ணிக்கை இருபத்தைந்து.

***** ஐந்து நட்சத்திர அந்தஸ்து பெற அத்தியாவசியமான தகுதிகள்: நீச்சல் குளம், மாநாடுகள் நடத்த ஹால்கள், பியூட்டி பார்லர், சலூன், இருபத்தி நாலு மணி நேரமும் சர்வீஸ், என்று சில. ஐந்து நட்சத்திர ஓட்டல்களில் ஒற்றை அறை நூற்றியெண்பது சதுர அடியும், இரட்டை அறை இருநூறு சதுர அடியும் இருக்க வேண்டும்.

நட்சத்திர ஓட்டல்களாய் இருந்தால், வருமான வரியில் சலுகை, டெலிபோன், டெலக்ஸ், எரிவாயு சிலிண்டர் வழங்குவதில் முன்னுரிமை, அயல்நாடுகளில் விளம்பரம் செய்ய அனுமதி, தேவையான பொருட்களை இறக்குமதி செய்ய வரிச் சலுகை, நிதி நிறுவனங்களிலிருந்து கடனுதவி முதலிய சில சலுகைகளை இந்திய அரசாங்கம் வழங்குகிறது.

'இந்த நட்சத்திர ஓட்டல்களால் நமக்கென்ன பயன்? நாமென்ன அங்கு போய்த் தங்கவா போகிறோம்' என்று கேட்கிறீர்களா?

நல்ல கேள்வி. ஐந்து நட்சத்திர ஓட்டல்களில் அயல்நாட்டுச் சுற்றுலாப் பயணிகள் வந்து தங்குவதால் நமக்கு அந்நியச் செலாவணி நிறையவே கிடைக்கிறது. நமது அயல்நாட்டுக் கடன்கள் அந்த அளவுக்குக் குறைகிறது. இல்லாவிட்டால் அதையும் சேர்த்து நாமும் நமது சந்ததியினரும்தானே சுமக்க வேண்டும்?

— எஸ். சந்திரமௌலி

ஆகவே, செக்ஷன் 302 படி...

5

ரூ. 1000/— பரிசு!

இந்தக் கதை 26 வாரங்கள் தொடரும். சுமார் 20, 22 அத்தியாயங்கள் முடிந்ததும் கதை தொடர்பாகச் சில கேள்விகள் தரப்படும். ஓரிரு வார்த்தை பதில்களை ஒரு தபால் கார்டில் நீங்கள் எழுத வேண்டியதுதான்!

கடைசிக் கேள்வியை இப்போதே கூறி விடுகிறோம்!: "இந்தத் தொடரில் உங்களை மிகவும் கவர்ந்த 'நறுக்'கென்ற மைந்த நாலு வரிகள் எவை?"

எனவே, கவனமாகப் படித்து வருவதுடன், 'நறுக்' வரிகளை அவ்வப்போது குறித்து வைத்துக் கொள்ளவும்!

— ஆசிரியர்.

பல வர்ண மலர்கள் நீளமான காம்புடன், இலைகளுடன் ஒரு கவர்ச்சியான நேர்த்தியில் அமைக்கப்பட்டு, அரை இஞ்ச் தங்க நிற ரிப்பனால் கட்டப்பட்டிருந்தது. மொத்த மலர்களையும் கண்ணாடிக் காகிதம் போர்த்தியிருக்க... விரல் பட்டதும் சடசடத்தது.

அந்த 'பின்' செய்யப்பட்ட சீட்டை மறுபடி மறுபடி படித்தாள் நிவிதா.

'நிவிதா, உன் வருகையால் சென்னையே அழகானது. வருக, வருக!'

இளம் பச்சை நிற ஸ்கெட்ச் பேனாவில் எழுதப்பட்டிருந்தது. யார்? இது விநோத்தின் கையெழுத்தில்லை. இத்தனை நிதானமாக எழுதுகிற பொறுமை அவருக்கு இல்லை. ஒரு வரி எழுதினாலும் அது டாக்டரின் பிரிஸ்கிரிப்ஷன்தான். வேறு யார்?

"என்னங்க யோசிக்கிறீங்க?" என்றாள் தாமரைச் செல்வி.

"இதை யார் அனுப்பியிருப்பாங்கன்னு..."

"இது கூடத் தெரியலையா? மெட்ராஸ் கார்ப்பரேஷன் அனுப்பியிருக்குங்க! சென்னையோட அழகைப் பத்தி அதுக்குத்தானே கவலை" என்று சிரித்தாள். "இதிலே குழம்பறதுக்கு என்ன இருக்கு? உங்க விநோத்குமார்தான் அனுப்பி இருப்பார்."

"இது அவர் கையெழுத்தில்லைங்க!"

"அதனால என்ன? பொக்கே கடையிலே பணம், அட்ரஸ், விஷயம் மூணையும் கொடுத்துட்டுப் போயிருப்பார். அவங்க எழுதி அனுப்பியிருப்பாங்க."

"இப்பதானே பார்த்து ரெண்டு மணி நேரத்துக்கு மேல் பேசிட்டிருந்துட்டு வர்றேன். சொல்லியிருக்கணுமே.."

"ஒரு சஸ்பென்சுக்காகச் சொல்லாம இருந்திருக்கலாம். இவ்வளவு உரிமையோட வேறே யாருங்க அனுப்ப முடியும்? சாப்பிட்டாச்சா?"

"இன்னும் இல்லை."

"வாங்க மெஸ்சுக்குப் போய்ட்டு வந்துடலாம்."

விநோத் குமாராகத்தான் இருக்க வேண்டும் என்ற தீர்மானத்திற்கு வந்து, அந்தப் பூங்கொத்தைச் சுவரில் இருந்த ஆணி ஒன்றில் மாட்டிவிட்டுச் சாப்பிடப் புறப்பட்டாள் நிவிதா.

சாப்பிட்டுவிட்டு அறைக்கு இருவரும் திரும்பிய போது, வெளியில் போயிருந்த பத்மா வந்திருந்தாள். போட்டிருந்த கொண்டையை அவிழ்த்து லூசாகக் கூந்தலை முதுகு முழுக்கப் படர விட்டுக் கொண்டிருந்தாள்.

"சாப்பிட்டாச்சா பத்மா?" என்றாள் தா. செல்வி.

"ம். ஹோட்டல்லயே சாப்ட்டுட்டு எக்மோர் போய் அவரை வழியனுப்பிட்டு வந்துட்டேன். யாரைன்னு கேக்க மாட்டீங்களா நிவிதா?"

"யாரை?" என்றாள் நிவிதா.

புடைவையிலிருந்து நைட்டிக்கு மாறிக் கொண்டே சொன்னாள் பத்மா, "என் புருஷனை — மாயவரத்திலே டெலிபோன் எக்ஸ்சேஞ்சல வேலை பார்க்கிறார். குரல் கேட்டு, கேட்டு ஒருத்தரை ஒருத்தர் பார்க்காமலேயே காதலிச்சு வீட்டை எதிர்த்துக் கிட்டுக் கல்யாணம் பண்ணிக்கிட்டோம்."

"அதெப்படி முகத்தைப் பார்க்காமலேயே காதலிக்க முடியும்?"

"முடிஞ்சதே. நாங்க நேசிச்சமே. நிறைய டெலிபோன் ஆபரேட்டர்ஸ் கல்யாணம் காதல் கல்யாணமாத்தான் இருக்கும். விசாரிச்சிங்கன்னா, குரல் கேட்டே காதலிச்சோம்னு சொல்வாங்க. பேனா நட்பு மாதிரி இது ஒரு சுவாரசியமான விஷயம் தெரியுமா? பழகிப் பழகி இப்பல்லாம் குரலை வச்சே ஒருத்தர் குணாதிசயத்தை அனுமானிக்கக்கூட என்னால முடியும்."

நிவிதா கட்டிலில் அமர்ந்து தலையணை ஒன்றை எடுத்து மடியில் வைத்துக் கொண்டு, "வெரி இண்ட்ரெஸ்டிங். அப்புறம்? எத்தனை நாள் கழிச்சு நேர்ல பார்த்துக்கிட்டீங்க?" என்றாள்.

"நாளா? ரெண்டரை வருஷம் கழிச்சுத்தான் சந்திச்சோம். நேர்ல சந்திக்கிற வரைக்கும் யாரும் போட்டோ அனுப்பறதில்லைன்னு தீர்மானம். சந்திச்ச நாள் மறக்கவே முடியாதுங்க. மெட்ராஸ்ல தாஜ் ஹோட்டல் ரிஸப்

பட்டுக்கோட்டை பிரபாகர்

ஷன் ஹால்ல மஞ்சள சட்டை, கறுப்பு பேண்ட்ல அவர் வர்றதுன்னும், சிவப்புச் சேலையிலே நான் வர்றதுன்னும் பேச்சு. நான் வேணும்னே நீல ஸாரி கட்டிக்கிட்டு முன்கூட்டியே போய், கைல ஒரு புத்தகம் வச்சிக்கிட்டுப் படபடப்பா எதிர்பார்த்துக் கிட்டிருந்தேன். ரெண்டு மணி நேரமாச்சு—அவர் வரவே இல்லே. வெறுத்துப் போய்த் திரும்பிட்டேன். மறுநாள் கோபமா நான் போன்ல பேச... உன்னை ஏமாத்தறதுக்காக வேணுமின்னு வேற கலர் சட்டை போட்டுட்டு வந்து காத்திருந்தேன், நீதான் வர லேன்னு அவர் சத்தம் போட.. ஆக ரெண்டு மணி நேரம் ரெண்டு பேரும் அதே ஹால்ல உட்கார்ந்து அடையாளம் புரியாம நொந்திருக்கோம். அப்புறம் அடுத்த சந்திப்பு. இதுவும் தமாஷ்தான். போன்ல அரை மணி நேரத்துக்குக் குறையாம அரட்டை அடிச்சுட்டு... நேர்ல ரெண்டு பேருமே குறுகுறுன்னு பார்த்துக்கிட்டு எதுவுமே பேசாம 'மழை வருமா, காப்பி ரொம்ப சூடு இல்லே?'ன்னு இப்படியே பேசிட்டுப் பிரிஞ்சிட்டோம். அப்புறம் வீட்ல எதிர்த்தாங்க. நண்பர்களைச் சாட்சியா வச்சுப் பதிவுத் திருமணம் செஞ்சிக்கிட்டோம். ரெண்டு பேர்ல யாராச்சும் ஒருத்தருக்கு டிரான்ஸ்ஃபர் எதிர்பார்க்கறோம். அது வரைக்கும் ஹாஸ்டல்தான்.''


''சரி தூங்கலாமா?'' என்றாள் நிவிதா.

''விட்டுடுவமா? அடுத்தவங்க கதைன்னு மட்டும் நாக்கைச் சப்புக் கொட்டிக்கிட்டுக் கேக்கறீங்க. உங்க லவ்வைப் பத்தி சொல்லிட்டுத்தான் தூக்கம்'' என்றாள் தாமரைச் செல்வி.

''அதுக்கு முன்னாடி ஒரு தீர்மானம்'' என்றாள் பத்மா. ''முதல் நாளே வாங்க, போங்கங்கற மரியாதையைக் கழட்டிடலாம். இல்லேன்னா நட்பு கொஞ்சம் தள்ளியே நிக்கும். என்ன சொல்றீங்க நிவிதா?''

''சரி.''

''அப்படின்னா உன் 'மேட்டரை'ச்



சொல்லு''

சில விநாடிகள் யோசித்தாள் நிவிதா. எப்படிச் சொல்வது? ஒரே நாளில் கண்ணோடு கண் நோக்கி ஏற்பட்ட இலக்கியக் காதல் இல்லையே.. எத்தனை சம்பவங்கள்! எத்தனை சந்திப்புகள்! அவ்வளவுக்கும் பிறகும்கூட என் மனம் அவரை நேசிக்கிறது உண்மைதானா என்று என்னையே எத்தனை நூறு முறை கேள்வி கேட்டுக் கொண்டேன். ஆம் என்ற பதில் ஒரே நாளில் எனக்குக் கிடைக்கவில்லையே...

மனத்தின் மெல்லிய உணர்வுகளின் தவிப்புகளை, குழப்பங்களை, சங்கடங்களை எல்லாம் எப்படி வார்த்தை வடிவத்தில் வெளிப்படுத்துவது?

இவர்களுக்குத் தேவை சுவாரசியமான அந்த ஆரம்பம்.

எப்படி ஆரம்பித்தது?

திருச்சியில் ஒரு சமுதாய அமைப்பு ஏற்பாடு செய்திருந்த புத்தகக் கண்காட்சி. அன்று கடைசி நாள். கடைசி நாள் என்பதால் விசேஷமாக ஒரு பத்து சதவிகிதம் தள்ளுபடி அறிவித்திருந்ததால் எக்கச்சக்கமான கூட்டம். கண்காட்சி நிறைவு பெற இன்னும் பதினைந்து நிமிடங்கள் இருந்த போது...

தமிழ் நாவல்கள் வெளியிடும் ஒரு பதிப்பகத்தின் ஸ்டாலில் நிவிதா ரொம்ப நாட்களாகத் தேடிக் கிடைக்காமலிருந்த ஒரு குறிப்பிட்ட நாவலைப் பார்த்து உற்சாகமாகி அதைக் கையில் எடுத்து பில் போடச் சொல்லிப் பணம் கொடுத்த போது...

''எக்ஸ்க்யூஸ் மி மேடம். இந்த நாவலை நீங்க வாங்கப் போறீங்களா?'' என்றான் டை கட்டின, ஷாம்பு போட்ட கிராப்பைத் தூக்கி வாரின, ஓர் இளைஞன்.

''வாங்கிட்டேன்.''

''ஸாரி. நான் வாங்கிக்கறதா இப்பதான் அவர்கிட்டே சொன்னேன். இதில இதான் கடைசி 'காப்பி'ன்னுகூட அவர் சொன்னார். சொன்னீங்களா இல்லையா சார்?''

''நீங்க எடுத்துப் பார்த்தீங்க, கேட்டீங்க. பில் போடச் சொல்லலை. யோசனையிலயே இருந்துட்டீங்க. அதனாலதான் அவங்களுக்குத் தந்தேன்'' என்றார் கடைக்காரர்.

''லெட்டர் ஹெட்லே எம்.எல்.ஏங்கிறதுக்குப் பக்கத்திலே (ப.வா.)ன்னு போட்டிருக்கே, என்னங்க...?''

'''பழிவாங்கப்பட்டவன்'கிறதை உணர்த்துவதற்காகத்தான்!''

— டி. எஸ். சீதாராமன்.



''மேடம், ப்ளீஸ்.. நான் இந்த நாவலுக்காக மூணு வருஷமா அலையறேன். கிடைக்கலே. நான் வாங்கிக்கறேனே...''

அவன் உயரத்துக்கும், அவன் பர்சனாலிட்டிக்கும் இப்படி தவிப்பது சிரிப்பாய் இருந்தது. இரக்கத்தை வரவழைத்தது.

''நானும் ரொம்ப நாளா இந்த நாவலைத் தேடிக்கிட்டிருந்தேன். பரவாயில்லை. நீங்க வச்சுக்கங்க'' என்று புத்தகத்தையும், பில்லையும் அவனிடம் கொடுத்தாள்.

கண்காட்சி நிறைவு பெறுவதற்கான மணியொலிக்க... அனைவரும் வெளியே நடக்க ஆரம்பிக்க, ''வாங்க, வெளில போய்ப் பணம் எடுத்துத் தர்றேன்'' என்றான்.

இருவரும் வெளியில் வந்ததும் அவன் பில்லைப் பார்த்து, ''நாப்பத்தி ஏழு ரூபாய் என்ன நூறு ரூபாயே தரலாங்க இந்த நாவலுக்கு'' என்று சட்டைப் பைக்குள் கைவிட்டுப் பணத்தை எடுத்தவன் விழித்தான். சட்டென்று புத்தகத்தை அவளிடமே கொடுத்து, ''நீங்களே வச்சுக்கங்க மேடம்'' என்றான்.

''ஏன்? என்ன ஆச்சு?''

''ஸாரி. பாக்கெட்ல நூத்தி நாப்பது ரூபா வச்சிருந்தேன். வழில ஒரு ஃப்ரெண்டு அவசரம்னு நூறு ரூபாய்க் கடன் கேட்டான். கொடுத்தேன். அவனுக்கு நூறு ரூபா கொடுத்ததைச் சுத்தமா மறந்துட்டு நான் இங்கே வந்துட்டேன். நல்ல வேளை நூறு ரூபாய்க்கு புக்ஸ் வாங்கி பில் போடச் சொல்லாம இருந்தேனே.. மானம் போயிருக்கும். ஸாரி, தொந்தரவு கொடுத்துட்டேன்.''

''பரவாயில்லை'' என்றுநிவிதாநடந்தாள்.

''ஒரு நிமிஷம் மேடம்'' என்று பின்னால் வந்தவன் தன் விசிட்டிங் கார்டை எடுத்தான், ''நான் இந்த மருந்துக் கம்பெனில ரெப்ரசென்டேடிவா இருக்கேன். உங்களுக்கு நம்பிக்கை இருந்தா புக் கொடுங்க. நாப்பது ரூபா தர்றேன். மிச்சம் ஏழு ரூபாயை உங்க அட்ரஸ் சொன்னீங்கன்னா இன்னும் ஒரு மணி நேரத்துல கொண்டாந்து தர்றேன். தப்பா நினைக்காதீங்க. புக்கை விட மனசு வரலை. இஷ்டமிருந்தா கொடுங்க.''

நிவிதா புத்தகத்தைக் கொடுத்துத் தன் அலுவலக விலாசத்தையும் கொடுத்து நாற்பது ரூபாய் பெற்றுக் கொண்டு நகர்ந்தாள், அவனின் பத்து தேங்க்யூக்களுடன்.

''அதான் எங்க முதல் சந்திப்பு'' என்றாள் நிவிதா.

''அப்புறம்?'' என்றாள் பத்மா ஆர்வமாக.

''அப்புறம் ஒரு வாரமாச்சு. பத்து நாளாச்சு. ஒரு மாசமும் ஆச்சு. பணம் வரலை. அவரோட விசிட்டிங் கார்ட் என்கிட்டே இருந்திச்சா. அதை வச்சி காரசாரமா திட்டி ஏழு ரூபா பெரிசில்லை, ஆனா நாணயத்தைக் காப்பாத்தற பொறுப்பு இல்லையா உங்களுக்குன்னெல்லாம் எழுதிப் போட்டேன். உடனே மணியார்டரும், லெட்டரும் வந்துச்சி. என்கிட்டே வாங்

னை அட்ரசைத் தொலைச்சுட்டாராம். பணம் அனுப்பாதது குத்திக்கிட்டே இருந் துச்சாம். என் திட்டல் லெட்டர்ல இருந்த அட்ரசை வச்சுத்தான் மணியார்டர் அனுப் பினாராம். என்னை மன்னிச்சேன்னு நீங்க எழுதியே ஆகணும்னு எழுதியிருந்தார். நான் பதில் எழுதலை. அப்புறம் நேர்ல ஒரு தடவை ஆபீசுக்கே வந்து மன்னிப்பு கேட்டார். அவர் படிச்சுட்டதாச் சொல்லி அந்த புக்கைத் திருப்பி எனக்கே வற்புறுத் திக் கொடுத்தார். அந்த நாவலை விமர்சித் தார். நான் படிச்சுட்டு அவர் விமர்சனம் தப்புன்னு என் கருத்தை எழுதினேன். மறு படி சந்திச்சு நாவலைப் பத்திப் பேசினோம். அப்புறம் எங்களைப் பத்தி பேசினோம்.''

''அதுக்கப்புறம் எப்படி டெவலெப் ஆகியிருக்கும்னு எங்களால புரிஞ்சுக்க முடியும். ஆமாம், எப்ப கல்யாணம்?''

''அவங்க வீட்ல பிரச்னை எதுவும் இல்லை. இவர் வச்சதுதான் சட்டம். செல் லப்பிள்ளை. பர்மிஷனும் வாங்கிட்டார். அடுத்த வாரம் அவங்கப்பாவுக்கு அறிமுகப் படுத்தி வைக்கிறேன்னு சொல்லியிருக் கார். என் சைடிலேயும் அம்மா எதுவும் சொல்ல மாட்டாங்க. அப்பா இல்லை. ரெண்டு தம்பிங்கதான். பெரிய தம்பிக்கு ஒரு நிரந்தர வேலை கிடைக்கிற வரைக்கும் காதலிச்சிக்கிட்டே இருக்கலாம்னு திட்டம். அப்புறம்? செல்வி, உனக்கு எதுவும் விவ காரம் இல்லையா, இதுமாதிரி?''

''கேக்கறதுக்கு ஆசையாத்தான் இருக்கு. ஒண்ணும் அமைய மாட்டேங்குதே. பெரு மூச்சு விட்டுக்கறதோட சரி. கனவு கண்டுக் கிறதோட சரி'' என்று சிரித்தாள் தாமரைச் செல்வி. எழுந்து கொசு வலை கட்ட ஆரம்பித் தாள்.

''இவ கனவை யாரும் திருடக்கூடாதாம். அதுக்குத்தான் வலை கட்டிக்கிறா'' என்றாள் பத்மா.

மூன்று பெண்களும் இணைந்து சிரித் தனர்.

காலையில் அலுவலகம் புறப்படுவதற்கு முன்பு, ஹாஸ்டலில் இருந்து வினோத் குமா ரின் அலுவலகத்திற்கு போன் செய்தாள்.

''ஹலோ குட்மார்னிங். ஒரு ராத்திரி கூடத் தாண்டலை. அதுக்குள்ளே போன் பண்ணிட்டே. நீ எப்படி கண்டிஷன்களைக் கடைப்பிடிக்கப் போறே நிவி?''

''இருக்கட்டும். நீங்க அனுப்பின 'பொக்கே'க்குப் பதில் சொல்லத்தான் கூப்ட்டேன். எப்படி? சென்னையே அழகா னதா? நான் வர்றதுக்கு முன்னாடி அசிங் கமா இருந்துச்சா? நமக்குள்ளே சஸ்பென்ஸ் எதுக்கு? உங்க கையெழுத்தைப் போட்டி ருக்கக் கூடாதா?''

''ஒரு நிமிஷம். எதுவும் கிராஸ் டாக்கா? நான் நிவிதாகிட்டேதானே பேசிக்கிட்டு இருக்கேன்? என்ன உளர்றே? எதுவும் புரி யலை.''

''எனக்கு நேத்து ஒரு பூங்கொத்து அனுப்பலை நீங்க?''



மேடையில் அரசியல்வாதி: ''நான் அடிக் கடி கோஷ்டி தாவுகிறேன் என்று கூச்ச லிடும் எதிர்க்கட்சியினருக்குக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். நான் தேர்த லில் நின்று ஜெயித்ததே கங்காருச் சின்னம்தான் என்பது உங்களுக்குத் தெரியுமா?

— கீழை. அ. கதிர்வேல்.

''பூங்கொத்தா? உனக்கா? நீயே ஒரு பூங் கொத்து. நிலாவைக் காட்டி நிலாவுக்கே எப்படி சாதம் ஊட்ட முடியும்?''

''கவிதை எல்லாம் அப்புறம் சாவகா சமா வச்சிக்கலாம். 'நிவிதா, உன் வருகை யால் சென்னையே அழகானது. வருக, வருக'ன்னு எழுதின சீட்டைப் 'பின்' செஞ்சி யாரோ ஒரு பொக்கே அனுப்பி யிருக்காங்க கையெழுத்தில்லாம.''

''நோ, நான் இல்லைம்மா. ஹாஸ்டல்ல ஃபிரெண்ட்ஸ் யாராச்சும் குறும்பா செஞ் சிருப்பாங்க. விசாரிச்சிப் பாரு. ஸோ, ஒப் பந்தப்படி நாளைக்குத்தான் சந்திக்கி றோமா?''

''இன்னும் முடிவு செய்யலை. செஞ்சதும் போன் செய்யறேன்.''

வைத்து விட்டுக் குழம்பினாள். அப்படி யென்றால் யார்? ஹாஸ்டலில் என் அறைத் தோழிகள் தவிர வேறு யாரையும் தெரி யாதே. அவர்கள் செய்திருந்தால் நேற்றே சொல்லியிருப்பார்களே...

ஒருவேளை... வித்யா சாகர் அனுப்பி யிருப்பானா?

சேச்சே. இப்படி அந்நியத்தனமாய் அது வும் பெயர் சொல்லி அழைத்து எழுதப்பட் டிருக்கும் சீட்டோடு.. வாய்ப்பே இல்லை.

வேறு யார்? வேறு யாருக்கு என் விடுதி முகவரி கொடுத்தேன்?

இது யாரோ ஒரு ஆணின் குறும்புதான். 'உன்' என்று எடுத்த எடுப்பிலேயே ஒருமை யில், உரிமையாய் விளிக்கும் திமிர் பிடித்த ஒரு ஆண். எவன்?

யோசனையாய் நிவிதா தன் ஹாஸ்டலை விட்டு வெளியேறி, அருகே இருந்த பஸ் ஸ்டாப்பை நோக்கி நடந்—கினிக்—தாள். வந்து நின்று யோசனைகளின் மத்தியில் பஸ் வரும் திசையைப் பார்த்—கினிக்—தாள். காலை வெயிலுக்கு லேசாகக் கண்ணைச் சுருக்—கினிக்—கினாள்.

சாலையில் எதிர்த் திசையில் டிரைவர் சீட்டில் அமர்ந்து, பாதி ஏற்றிவிடப்பட்டி ருந்த கதவின் இடைவெளி வழியாக டெலி லென்ஸ் பொருத்தப்பட்ட பவர்ஃபுல் கேமிராவில் நிவிதாவை மூன்று கோணங் களில் சிறைப்படுத்தின திருப்தியோடு, காரை ஸ்டார்ட் செய்தான் ஷியாம்.

(தொடரும்)



எல்லோரும்...
..எல்லோரும்...
..எல்லோரும்...
எல்லோருமே
விரும்புவது
நியூட்ரின்
ட்விங்க்
Twink
SOFT DRINK CONCENTRATE
Orange
ஆரஞ்சு
லெமன்
மேங்கோ
பைனாப்பிள்
கிரேப்
ட்விங்க்
ஸாஃப்ட் டிரிங்க் கான்ஸன்ட்ரேட்
nutrine
சுவைகளும் புதுமை, சுவைத்திட இனிமை
ACIL/090/87-Tam

தேசியக் கவிஞர்;  ஓவியக் கலைஞர்!

நூற்றாண்டு விழாக் காணும் தேசியக் கவிஞர் நாமக்கல் ராமலிங்கம் பிள்ளையை ஓர் ஓவியக் கலைஞ ராக அறிமுகப்படுத்துகிறது இந்தக் கட்டுரை!

செட்டி நாட்டுப் பகுதியில், யார் வீட்டி லாவது பழங்கால ஆயில் பெயிண்டிங் உரு வப் படம் ஒன்று கண்ணில் பட்டால், அதில் 'வி. ஆர். லிங்கம்' என்று ஓவியர் கை யெழுத்து இருக்கிறதா என்று கவனியுங்கள்.

அப்படி இருந்தால் அதை வரைந்த 'வி. ஆர். லிங்கம்' வேறுயாருமில்லை. நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளைதான்!

ஒரு சமயம், நகரத்தார் பெரியவர் ஒரு வரின் ஆயில் பெயிண்டிங் வரைந்தார் லிங் கம். படம், காலஞ்சென்ற அந்தப் பெரிய வரின் துணைவியார் பார்வைக்குப் போனது. சாதாரணமாகத் துணையிழந்த நகரத்தார் வீட் டுப் பெண்கள் எந்த ஆடவரிடமும் பேச மாட்டார்கள்.

அந்த அம்மையார் தம் கணவரின் படத் தைப் பார்த்து விட்டு மகிழ்ச்சிப் பெருக்கில் திக்குமுக்காடிப் போனார். படம் வரைந்த ஓவியரைப் பார்க்க வேணும் என்று சொன் னார்.

ஓவியர் லிங்கம் அம்மையார் முன் போய் நின்றார். '' அவுகளை... அப்பிடியே எளுதிப் புட்டிங்களே.. அச்சா.. அவுக இப்பிடித் தானே இருப்பாக.. ஏங்க.. இவுகளைப் பேச வக்க முடியாதுங்களா...?'' என்று உணர்ச்சி வசப்பட்ட அந்த அம்மையார் கேட்டார்.

''இல்லே ஆச்சி... படம் போட மட்டுந் தான் எனக்குக் கடவுள் சொல்லிக் கொடுத் திருக்காரு... பேச வைக்கிறதுக்குச் சொல்லித் தரல்லீங்களே..'' என்று லிங்கம் பதில் சொன்னார். அவர் கண்கள் பனித்தன.

ஓர் ஓவியக் கலைஞனுக்கு இதைவிடவும் ஒரு பாராட்டுக் கிடைத்துவிட முடியுமா?

சென்னைக்கு மகாத்மா காந்தி வந்திருந்த நேரம். அதுவரை நாமக்கல்லார் பாபுஜி யைப் பார்த்ததில்லை. ராஜாஜி மூலமாக அவரைச் சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

காலைப் பிரார்த்தனை முடிந்த நேரம்... ஏழரை மணிக்கு கவிஞர், அவருடைய மனைவி, குழந்தைகள் எல்லோரும் உள்ளே சென்றார்கள்.

''பாபுஜியின் கொள்கைகள் முழுவதை யும் இவர் தன்னுடைய கவிதைகளில் கொண்டுவந்து விட்டார்..'' என்று சொல்லி ராஜாஜி நாமக்கல்லாரை காந்திஜிக்கு அறி முகம் செய்து வைத்தார்.

ஒரு தேசியக் கவிஞனுக்கு இதை விடவும் ஒரு பாராட்டு கிடைத்துவிட முடியுமா!

தேச விடுதலை இயக்கத்தில் ஈடுபட்ட பின்னர் வண்ணங்களுக்கும், தூரிகைகளுக் கும் விடைகொடுத்து விட்டார் கவிஞர். ஆனாலும் நண்பர்கள் அவரை விட்டு வைக் கவே இல்லை. சேலத்தில் ஜில்லாபோர்டு மெம்பராக இருந்த நேரத்தில், தலைவர் கே. ஏ. நாச்சியப்பக் கவுண்டரின் தூண்டுதலின் பேரில், காந்திஜியின் படம் ஒன்றைப் பெரிய அளவில் வரைய ஒப்புக் கொண்டார்.

ஆளுயர வண்ணப் படத்தில் கையில் கைத்தடியுடன் பாபுஜி சிரித்துக் கொண்டிருந் தார். பாபுஜிக்குப் பக்கத்தில் இரண்டு தொட்டிகளில் ரோஜாச் செடிகளையும் வரைந் திருந்தார் கவிஞர்.

ஆந்திர மாநில அமைச்சராக இருந்த கோபால ரெட்டி படத்தைப் பார்த்துக் கேட் டார்.

''அது என்ன கவிஞரே? ரோஜாப் பூவை மட்டும் போட்டால் போதாதா... தொட்டி யோடு எழுதி வைத்திருக்கிறீர்களே...''

கவிஞர் பதில் சொன்னார். "பாபுஜிக்கு மலர்களைச் செடியிலிருந்து பறிக்க மனம் வராது. அது பாவம் என்பார். செடியிலிருந்து அப்படியே வளைத்துப் பார்ப்பது தான் அவருக்குப் பிடிக்கும். அதனால்தான் ரோஜாச் செடியைத் தொட்டியோடு வரைந்தேன்...". பாபுஜியை நன்குணர்ந்த கவிதை மனம் அது.

எத்தனையோ பட்டங்கள் பரிசுகள் என்று பெற்றிருந்தாலும் முதன் முதலில் தங்கப் பதக்கம் பரிசு பெற்றது டில்லியில் ஐந்தாம் ஜார்ஜ் மன்னரின் முடிசூட்டு விழாவை ஒட்டி நடந்த ஓவியக் காட்சியில்தான். மன்னர் அளித்த விருந்துபசாரத்தில் கலந்து கொள்ளும் பெருமையும் கிடைத்தது.

பிரிட்டிஷ்கார துரை சிம்சன் என்பவரின் இறந்து போன குழந்தையின் படத்தை வரைந்த அனுபவத்தை — 'என் கதை' நூலில் அழகாக எழுதியிருக்கிறார் கவிஞர். ஐம்பது ரூபாய் பேசி எழுதிய அந்தக் குழந்தையின் ஓவியம் நிறைவடைந்தபோது கிடைத்த சன்மானம் அறுநூற்று எழுபத்தைந்து ரூபாய்! அத்தனை மகிழ்ச்சி சிம்சனுக்கு!

நிறையச் சம்பாதித்தார். காலணாச் சேர்த்து வைத்துக் கொள்ளப் பழகிக் கொள்ளாமல் அவ்வளவையும் அப்போதே செலவழித்தார். உறவுக்காரர்களோ, மற்றவர்களோ கடன் என்று எது கேட்டு வந்து நின்றாலும் தரவே மாட்டார். திருப்பி ஒன்றும் தரவேண்டாம் என்று, அன்பளிப்பாகவே நூறு இருநூறு என்று தந்து அனுப்பி விடுவார்.

சினிமாப் பார்க்கும் பழக்கமே இல்லாதவர் நாமக்கல் கவிஞர். பாபுஜி பார்த்த ராமராஜ்யா படமும், தன்னுடைய கதையான 'மலைக் கள்ளனும்' ஆக இரண்டே படங்கள்தான் அவர் பார்த்தது.

இராமலிங்கம் என்ற பெயர் வந்தது ஒரு சுவையான நிகழ்ச்சி. 'ராமேசுவரப் பிரசாதம்' என்று வாழ்த்துச் சொன்ன பெரியவர்களின் வாக்குப் பலித்ததால் இவருக்கு அந்தப் பெயரைச் சூட்டினார்கள். ஆனாலும், அவருடைய அன்னையார் அம்மணியம்மாள் நாலடிக் கறுப்பண்ணசாமிக்கு நேர்ந்து கொண்டு பெற்ற பிள்ளையாகையால், கடைசி வரை 'கறுப்பண்ணா' என்றுதான் அழைப்பார்!

— கவிஞரின் துணைவியார் சவுந்தரம் அம்மாள், குமாரர் இரா. அமிர்தலிங்கம் கூறியவை.

தொகுப்பு: சுப்ர. பாலன்.




சர்க்கரை பற்றிய பயத்தை விட்டொழியுங்கள்
சர்க்கரையின் முழுச்சுவையை அனுபவியுங்கள்!
இப்போது
ஸ்வீட்'அன்லோ
சர்க்கரைக்கு
பதிலாக
SWEET'N LOW
GRANULATED SUGAR SUBSTITUTE
நான்கே
கலோரிகள்
கொண்டது.
கசப்பற்றது.
SWEET'N LOW
ஆரோக்கியத்தில் அக்கறை
உள்ளவர்களுக்கு தேவை—
''ஸ்வீட் அன்லோ'' சர்க்கரை நோய்
உள்ளவர்களுக்கு அவசியம்
தேவை— ''ஸ்வீட் அன் லோ''
உடல் பருமனை குறைப்பதற்கும்
''ஸ்வீட் அன் லோ''
SWEET'N LOW
காபி, டீ மற்றும்
அனைத்து பானங்
களிலும் சர்க்கரைக்கு பதிலாக
உபயோகிக்கலாம்.
28 மேலை நாடுகளில்
30 ஆண்டுகளாக பிரசித்தி
பெற்ற ''ஸ்வீட் அன் லோ''
இப்போது தமிழகத்தில்
முக்கிய கடைகளில்
கிடைக்கிறது.
SWEET'N LOW
ஒரு பாக்கெட் ''ஸ்வீட்
அன் லோ'' = இரண்டு ஸ்பூன்
சர்க்கரைக்கு சமம்.
இந்தியாவில் தயாரிப்போர்.
இபிஸ் ஹெல்த் எய்ட்ஸ்
லிமிடெட், தும்கூர், கர்நாடகம்.
மொத்த விற்பனையாளர் (தமிழ்நாடு)
யோக்ராஜ் எண்டர்பிரைசஸ்,
870, டாக்டர் இராமசாமி சாலை, கே.கே. நகர்,
சென்னை-600 078 தொலைபேசி: 427738

அட்டீடரரன்றன்ன்...!

MI GENERAL: ராணுவ ஜெனரல்களின் அதிகார கம்பீர மெஷின் உருவங்களுக்குள்ளே ஒளிந்திருக்கும் முரண்டு பிடிக்கும் அடிப் படைக் குணத்தை வெகு அழகாக, நகைச்சுவை ஜூஸ் கலந்து, சற்றே சைக்காலஜியை வருடி, காதல், சோகம், அழுகை, எல்லா வற்றையும் டேபிள் ஸ்பூன்களால் தூவிய திரைக்கதை. நூற்றுப் பத்து நிமிடங்களா ஓடியிருக்கிறது! இந்த ஸ்பெய்ன் தேசத்துப் படக்கதையைத் தழுவி......

கார்கள் பளபள வென்று கண்ணாடி போல் பாலீஷ் செய்யப்பட்டிருந்தன. ஒன்றன் பின் ஒன்றாக, எறும்புப் படை போல் மலைப்பாதையில் ஏறின. கடைசி வளைவில் திரும்பின. மகா அகலமாகத் திறக்கப்பட்டிருந்த இரும்பு கேட்களின் வழியே அந்தக் கட்டடத்திற்குள் நுழைந்தன.

உடன் கட்டடத்திற்குள்ளேயிருந்து ட்ரம்களின் வாசிப்புப் போல் கனத்த பூட்ஸ்கள் சீராக ஓடிவந்தன. ராணுவ வீரர்கள்.

ஐந்து கார்களின் கதவுகளும் ராணுவ வீரர்களால் திறந்து பிடிக்கப்பட, மெலிதான கொட்டாவிகளை அடக்கிக் கொண்டு, அவர்கள் இறங்கினார்கள்...

மேஜர் ஜெனரல் அப்பாஸ் மந்திரி, மே. ஜெ. வேல்சங்கர், மே. ஜெ. ஸ்டாலின் ராஜ், மே. ஜெ. ஜெயபாலன், மே. ஜெ. கவுஸ் அகமத்.

வேல்சங்கர் சோம்பலான கண்களோடு சல்யூட்களை அவமதித்தார்.

'**THE ARMY TRAINING COLLEGE**' என்று ஸ்டாலின் ராஜ் எழுத்துக்கூட்டிப் படித்தார்.

டிக்கிகள் திறக்கப்பட்டு, அவரவர் பெட்டிகள் சுமக்கப்பட, ஐந்து பேரும் மிடுக்காக அந்தக் கட்டடத்திற்குள் நுழைந்தார்கள்.

சரியாக ஒரு மணி நேரம் கழித்து ஐந்து மே. ஜெனரல்களும் கூடியிருந்தார்கள். லெப்டினென்ட் ஜெனரல் தர்ஷன் சிங்கிற்கு எதிரே விறைப்பாக நின்றிருந்தார்கள்.

"சரி, சரி... இது ராணுவ முகாம் இல்லை. நாம் போர்முனையிலும் இல்லை. நீங்கள் ஐந்து பேரும் நமது ராணுவத்தில் அபாரமான சாகசங்கள் செய்து, பல்வேறு சந்தர்ப்பங்களில் பெரிய பெரிய மெடல்களும் பரிசுகளும் பெற்றவர்கள்... உங்களை இங்கே அழைத்திருப்பது ஒரு ட்ரெயினிங்கிற்காக...

"மறுபடியும் பயிற்சியா? அதுவும் இந்த வயதில்?" — மே. ஜெனரல் வேல்சங்கர் தம் வழுக்கையைத் தடவிக் காட்டினார்.

"விஞ்ஞானம் நாளுக்கு நாள், மணிக்கு மணி முன்னேறிக் கொண்டிருக்கிறது. சங்கர்... நீங்கள் துப்பாக்கியை உயர்த்துவதற்குள் லேஸர் பீம் உங்களைப் பொசுக்கி விடும் காலம் வந்துவிட்டது. வல்லரசுகள் பூமியில் எதற்கு யுத்தம் என்று விண்வெளியில் போர் புரியத் தயாராகி விட்டன. லேட்டஸ்ட் மாடல் ஆயுதங்கள் பற்றியும், அவற்றை இயக்குவது எப்படி என்பது பற்றியும் உங்களுக்கெல்லாம் தெரிய வேண்டாமா? ஏற்கெனவே கப்பல் படை, விமானப்படையின் மூத்த அதிகாரிகள் எல்லோரும் இதே பயிற்சிக்காக வந்து விட்டார்கள். மொத்தம் இருபத்திரெண்டு — வாட் டு ஸே — மாணவர்கள்..."

அப்பாஸ் மந்திரி இருமிக் காட்டினார். "எங்களுக்குச் சொல்லிக் கொடுக்க, எந்தெந்த விஞ்ஞானிகள் வருகிறார்கள், சார்?"

லெ. ஜெனரல் தர்ஷன் சிங் சிரித்தார். "விஞ்ஞானிகளா? நம்முடைய இளைய தலைமுறைதான் நமக்கு இன்றைக்கு ஆசிரியர்கள். இந்த ட்ரெயினிங் காலேஜை முழுக்க முழுக்க இளைஞர்களின் பொறுப்பில் விட்டிருக்கிறேன், நண்பர்களே...



ஆல் தி பெஸ்ட்..."

இரவு.

அப்பாஸ் மந்திரி தமக்கு ஒதுக்கப்பட்ட அறையில் எழுந்து உட்கார்ந்தார். அழைப்பு மணிப் பொத்தானை அழுத்தினார்.

உடனே கதவு திறந்தது. வெளியே நின்ற ஜவான் சல்யூட் விறைப்பைக் காட்ட, "யாரு மேன் இங்கே இன்சார்ஜ்?" என்றார்.

"கர்னல் ராம்சிங் சார்..."

"கூப்பிடு அவனை..."

மேஜர் ஜெனரலின் அழைப்பு என்றதும் கர்னல் கால் இடற ஓடி வந்தான்.

"சார்?" என்று சல்யூட் அடித்ததும் முகத்தில் தலையணை வந்து மோதியது. "முதலில் எனக்கு ரூமை மாற்று. இங்கே கொசுத் தொல்லை தாங்கவில்லை..."

"ஆனால் சார், மற்ற அறைகள் நிரம்பி விட்டன..." கர்னல் ராம்சிங் அசையாமல் சொன்னான்.

"ஏன் என் எதிரே கையைப் பிசைந்து



கொண்டு நிற்கிறாய்? ஓடு. இன்னும் பத்து நிமிடத்திற்குள் என் அறையில் கொசு வலை தொங்க வேண்டும்."

"உடனே சார்..."

ராம்சிங் திரும்பியதும் அப்பாஸ் மந்திரி சொடுக்குப் போட்டார். "என்னைக் காலையில் எட்டு மணி வரை டிஸ்டர்ப் பண்ண வேண்டாம்..."

"ஆனால் சார், வகுப்புகள் எட்டு மணிக்கு ஆரம்பமாகின்றன..."

"நீ இங்கே டீச்சராய் இருக்கலாம். ஆனால் ரேங்க்கில் எனக்குக் கீழ்ப்படிந்தவன். கெட் அவுட்..."

ராம்சிங் விடுவிடுவென்று அந்த இடத்திலிருந்து நகர்ந்த போது, எதிர்சாரியில் ஒரு கதவு படீரென்று திறந்தது.

"ஏய் கர்னல், இங்கே வா" —வேல்சங்கர்!

"இதோ பார், எனக்கு இந்த ரூமில் காற்றே போதவில்லை. தெற்குப்புறம் ஜன்னல் வைத்த ரூம் கிடைக்குமா?"

"வாய்ப்பில்லை சார்..." ராம்சிங் கால் மாற்றி நின்றான்.

"என்ன தைரியம் உனக்கு, எனக்கு நோ சொல்ல!"

எதிர் ரூமிலிருந்து அப்பாஸ் மந்திரி வேல் சங்கரைப் பார்த்தார்.

"கொசுவலை... கொசுவலை..." என்று கிசுகிசுத்தார். "அதையும் கேள்..."

"ஆம், கொசுவலை... எனக்கு ஒன்று போதாது... இரண்டு வேண்டும்... நான் உட்கார்ந்து எழுதும் மேஜைக்கு ஒன்று, கட்டிலுக்கு ஒன்று..."

ராம்சிங் "யெஸ் சார்" என்ற கணத்தில் அந்த இடத்தில் நிற்காமல் ஓடியே போனான்.

மறுநாள்.

ட்ரெயினிங் காலேஜின் பின்புறம் இருந்த மெஸ். கரண்டிகளும், பாத்திரங்களும் தனி ஆவர்த்தனம் செய்யும் குழப்பமான இரைச்சல். லெப். ஜெனரல் தர்ஷன் சிங் ஓட்டமும் நடையுமாக உள்ளே நுழைந்தார். நுழைந்ததும் மோதிக் கொண்டார். மோதியது தலைமை குக் ஸோமனின் மீது.

ஸோமன் பதறி விலகி நின்று சல்யூட் வைத்தான். ''சார், நானே உங்களைப் பார்க்கத்தான் வந்து கொண்டிருந்தேன். இந்தாருங்கள்...''

தர்ஷன் சிங் அவன் கையில் படபடத்த பேப்பரைப் பிடுங்கினார். ''என்ன இது?''

''என் ராஜினாமா...''

''வாட்?''

''பின்னே என்ன சார்... இந்த லிஸ்ட்டைப் பாருங்கள்...''

''என்ன லிஸ்ட்?''

''பிரேக்ஃபாஸ்ட் மெனு... லஞ்ச் மெனு... ட்ரெயினிங்கிற்கு வந்திருக்கும் மேஜர் ஜெனரல்கள் ஆளாளுக்குக் கொடுத்திருக்கும் லிஸ்ட்... இப்படித்தான் சமைக்க வேண்டுமாம்...''

தர்ஷன் சிங் அந்தக் காகிதத்தை வாங்கிப் பிரித்தார். அப்பாஸ் மந்திரியின் கையெழுத்து.

பிரெட் — மெல்லிய பிரவுன் நிறத்திற்கு (நேற்று தோட்டத்தில் பார்த்த பூனையின் ரோமக் கலர்) டோஸ்ட் செய்து, சற்று மிளகு தூவி, உப்புப் போடாமல் சிவந்த தக்காளியின் ஸ்லைஸ்களை மத்தியில் வைத்து...

அடுத்த மெனு ஸ்டாலின் ராஜின் கைவண்ணம்.

அறுபத்தைந்து நாள் கோழிக்குஞ்சைப் பிடித்து...

வேல்சங்கர் தம் பங்குக்கு:

சுத்த சைவம் நான். விரதம் இருக்கும் நேரம் இது. முட்டை சமைத்த பாத்திரம் கூட எனக்குப் பயன்படுத்தக் கூடாது... ஜாக்கிரதை!

''வாட் இஸ் ஆல் திஸ்?''

''நான் என்ன செய்யட்டும்? எல்லோரும் உயர் அதிகாரிகள். ஏதாவது பேசினால் பூட்ஸாலேயே இடிப்பார்கள் போலிருக்கிறது. ஒவ்வொரு சமையலாக நான் செய்து கொண்டிருந்தால் ராத்திரி எட்டு மணிக்குத்தான் பிரேக்ஃபாஸ்ட்டே ரெடியாகும்... ஆளை விடுங்கள் சாமி...''

''போ, கிச்சனுக்குள்...'' தர்ஷன் சிங் அவன் நீட்டிய ராஜினாமாக் கடிதத்தைக் கிழித்தார். ''போய், எல்லோருக்கும் ஸோயா கஞ்சியும், இரண்டு மெதுவடையும், ஒரு கிண்ணம் பச்சைக் காய்கறியும் சமை, போ...''

ஸோமன் நகர்வதற்கு முன்னால், ''ஸார், நீங்கள் கொடுத்த மெனு... எந்த ஐடியாவில் கொடுத்தீர்கள், சார்?''

''ஐடியா எதுவும் இல்லை. என் டாக்டர் காலையில் அதைத்தான் நான் சாப்பிட வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்!''

வகுப்பு.

கரும்பலகை நெடுக எதை எதையோ கிறுக்கி அந்தத் தியரங்களையெல்லாம் கர்ம சிரத்தையாக விளக்கிக் கொண்டிருந்தான் ராம்சிங். அவன் கவனத்தை எதுவோ நெருடியது.

அது என்ன சத்தம்?

க்ர்ர்ர்ர்... க்ர்ர்ர்ர்... க்ர்ர்ர்ர்...

பாட்டரி தீர்ந்த கார் கிளம்புவதற்குப் பிரயத்தனம் செய்வது போல் விநோதமான ஒலி எங்கே இருந்து வருகிறது என்பதை ராம்சிங் கண்டுபிடித்தான்.

கடைசி வரிசையில் அப்பாஸ் மந்திரியின் குறட்டை.

அவனுடைய பார்வை அங்கே பாய்ந்ததும் வகுப்பில் இருந்த மற்றவர்களுக்கெல்லாம் நமுட்டுச் சிரிப்பு. அந்தச் சிரிப்பு கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து பகபகவென்று அறையெங்கும் அதிர, ராம்சிங் மேஜர் ஜெனரல்களை 'ஷட்டப்' என்று சொன்னால் ஆர்மி ரூல்கள் அவனை என்ன செய்யும் என்பது புரியாமல் தவித்து நின்றான்.

சத்தத்தில் அப்பாஸ் மந்திரி திடுக்கிட்டு விழித்துக் கொண்டார்.

''மேஜர் ஜெனரல் அப்பாஸ் மந்திரி, தயவுசெய்து மேடைக்கு வருகிறீர்களா?'' ராம்சிங் அழுத்தமாகக் கூறினான்.

அப்பாஸ் மந்திரி தடுமாறி எழுந்தார். தம் நண்பர்களைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே டீச்சர் நாற்காலியின் அருகே நடந்தார். சிரிப்பலைகள் தொடர்ந்தன.

''கூப்பிட்டாயா, டீச்சர்?''

''ஆமாம், ஸார். கடந்த அரை மணி நேரமாக நான் இங்கே சொல்லிக் கொடுத்ததையெல்லாம் கொஞ்சம் திருப்பிச் சொல்ல முடியுமா?''

அப்பாஸ் மந்திரியின் முகம் மெல்ல மெல்லக் கீழ் வானம் போல் கடுமையானது.

''நீ யார் தெரியுமா? சாதாரண கர்னல்!''

''இப்போது டீச்சர்... சொல்லுங்கள், அரை மணி நேரமாக நான் நடத்தியது என்ன?''

''குப்பை!''

''டியர் மேஜர் ஜெனரல் சார், எனக்கு டிஸிப்ளினைப் போதித்தவர் நீங்கள். இதையெல்லாம் என்னால் அனுமதிக்க முடியாது.''

''என்ன செய்வாய்?''

''உங்களை வெளியே அனுப்ப வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு என்னைத் தள்ளாதீர்கள், சார்...''

''நான் அந்த அவமானத்தை எப்படிப் பொறுத்துக் கொள்ள முடியும், நீங்களே சொல்லுங்கள்.'' அப்பாஸ் மந்திரி கடுப்பாக இரைந்தார்.

தர்ஷன் சிங் மேஜைக் கண்ணாடியிலிருந்த சின்ன தூசியை ஒதுக்கினார்.

''நீங்கள் வகுப்பில் தூங்கியது உண்



''மாப்பிள்ளை இருப்புக் கொள்ளாமல் தவிக்கிறாரே! என்னவாம்?''

மையா அப்பாஸ் மந்திரி?''

''நிச்சயமாக இல்லை...''

''மேஜர் ஜெனரல் சொன்னாலும் பொய், பொய்தான்...'' ராம்சிங் சற்றே கோபமான குரலில் சொன்னான்.

''ராம்சிங்!''

''ஸாரி, சார்...''

''உண்மை என்னவென்றால், இவன் நடத்திய வகுப்பில் நான் ஒரு சந்தேகம் கேட்டேன். இவனால் பதில் சொல்ல முடியவில்லை. அந்த ஆத்திரத்தில் என்னை 'வெளியே போ' என்று சொல்லி விட்டான்...''

''சார், இது பச்சைப் பொய்...''

''ராம்சிங், நீ பேசாமல் இரு... சந்தேகம் கேட்டால் தீர்த்து வைக்க வேண்டியது உன் கடமை. இதோ என் எதிரிலேயே அதைச் செய்யப் போகிறாய். இன்றைக்கு வகுப்பில் என்ன நடத்தினாய்?'' தர்ஷன் சிங் மிடுக்காகக் கேட்டார்.

''ஐன்ஸ்டைன் தியரி...''

''அதில் உங்கள் சந்தேகம் என்ன அப்பாஸ் மந்திரி?''

அப்பாஸ் மந்திரி தாம் கார்னர் செய்யப்பட்டு விட்டதை உணர்ந்தார். என்ன எழவு நடத்தினான் என்பது புரிந்தால்தானே சந்தேகம் கேட்டுத் தொலைக்க முடியும்?

எத்தனையோ போர் முனைகளில் நெஞ்சை நிமிர்த்தி ஆணவம் காட்டியிருந்த மேஜர் ஜெனரல் அப்பாஸ் மந்திரி எச்சிலைக் கூட்டி விழுங்கினார்.

''ஐ யாம் ஸாரி'' என்றார். எழுந்து வெளியே நடந்தார்.

''தாங்க்யூ சார்'' என்றான் ராம்சிங்.

''உட்கார், உன்னிடம் நான் கொஞ்சம் பேச வேண்டும்...''

ராம்சிங் தயக்கத்துடன் உட்கார்ந்தான்.

''வகுப்பெல்லாம் எப்படி நடக்கிறது, ராம்சிங்?''

''எங்களை விடப் பெரிய மேலதிகாரிகளெல்லாம் கிளாஸிற்கு வருகிறார்கள் என்பதற்காகவே நாங்கள் இரவெல்லாம் விழித்து, மிகுந்த அக்கறையுடன் பாடங்களைத் தயார் செய்கிறோம் சார்... ஆனால் இந்த மேஜர் ஜெனரல்களின் போக்கு விசித்திரமாயிருக்கிறது...''

''என்ன செய்கிறார்கள்?''

''எங்களைக் கொஞ்சம் கூட மதிப்பதில்லை சார்... வகுப்பு நடக்கும் போது ஷூக்களைத் தரையில் தேய்த்துச் சத்தம் செய்கிறார்கள். நேற்றைக்கு ஒரு பேப்பர் ராக்கெட் கூட விட்டார்கள், சார்... இன்று காலை ஒரு ஸ்மால் டெஸ்ட் வைத்தோமில்லையா...? எனக்குச் சொல்லவே கூச்சமாயிருக்கிறது. மேஜர் ஜெனரல் ஸ்டாலின் ராஜ் தம் மெடல்களுக்குப் பின்னேயெல்லாம் பிட் எழுதி ஒட்டியிருந்தார் சார்!''

''ரியலி?'' — தர்ஷன் சிங்கின் முகத்தில் புன்னகை விரிந்து, அது சிரிப்பாக வெடித்தது. சிரிப்பில் உடம்பும், கையூன்றியிருந்த மேஜையும் குலுங்கின. சிரிப்புச் சற்று அடங்கியதும் நிமிர்ந்தார். ''இதற்கெல்லாம் என்ன காரணம் என்று நினைக்கிறாய் ராம்சிங்?''

''ரேங்க்தான் சார். அவர்களை விட நாங்கள் தாழ்ந்தவர்கள். கீழ்ப்படிய வேண்டியவர்கள்.... நாங்கள் சொல்லி என்ன கேட்பது என்ற ஆணவம்...''

''அதைவிடப் பெரிய காரணம் இருக்கிறது, ராம்சிங். எல்லோரும் பொறுப்பான பதவியில் இருப்பவர்கள். ராணுவத்திற்கே உரித்தான டிஸிப்ளின்... கட்டுப்பாடு, கட்டுப்பாடு, கட்டுப்பாடு... எத்தனை தூரம் டென்ஷனாகியிருப்பார்கள்? ட்ரெயினிங்கிற்குக் கூப்பிட்டதும், ஒருவித ஜாலியான மூடு வந்து விட்டது. ஸ்டூடண்ட்களாய், பொறுப்பில்லாமல் முரண்டு பிடிப்பதில், அவர்களுக்குள் அடக்கி அடக்கி வைத்த அந்த டென்ஷன் கொஞ்சம் ரிலீஸாகிறது... அஃப்கோர்ஸ் அத்தனை எரிமலைக் கொதிப்பையும், பாவம், நீங்களெல்லாம் தாங்க வேண்டியிருக்கிறது...''

ராம்சிங் மௌனமாக அவர் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தான்.

''ஜஸ்ட் அலௌ தெம்... அபாயமான வரம்பை மீறும் போது அதற்குக் குறுக்கே கழி போட நான் இருக்கிறேன். அதுவரை இந்தக் கிழ இளைஞர்களை அட்ஜஸ்ட் செய்து கொண்டு போ... ஆஃப்டர் ஆல், நம் நாட்டிற்காக அவர்கள் எத்தனையோ சொந்த ஆசைகளை விட்டுக் கொடுத்தவர்கள்...''

''எனக்குப் புரிகிறது சார்... இனிமேல் என் மாணவர்களைப் பற்றி உங்களிடம் நிச்சயம் புகார்கள் கொண்டுவர மாட்டேன்...'' ராம்சிங்கின் குரலில் தெளிவு இருந்தது.

— ஜெயமன்மதன்

முகவரி மாற்றம்

கல்கி, கோகுலம், மங்கையர் மலர் ஆகிய பத்திரிகைகளின் ஆசிரியர் குழுவினர் இந்நாள் வரை நுங்கம்பாக்கத்தில் பணியாற்றி வந்தனர். தற்போது வசதி கருதி, கிண்டியில் அச்சகக் கட்டடத்துக்கே இடம் மாறியுள்ளனர். இனி மூன்று பத்திரிகைகளுக்கும் நிர்வாகக் காரியாலயம், ஆசிரியர் குழு அலுவலகம், அச்சகம் ஆகிய எல்லாமே ஒரே இடத்தில் இயங்கும். முகவரி:

ரேஸ்கோர்ஸ் சாலை; கிண்டி,
சென்னை — 600 032.

பகவான் கூறுகிறார்

எது சமம்	பகவானிடம் புத்திநிலை பெறுதலே சமம்.
எது தமம்	இந்திரிய நிக்கிரகமே தமம்
எது திதிஷை	துக்கங்களைப் பொறுப்பது.
எது திருதி	நாவையும், உபஸ்தத்தையும் ஜயிப்பது
எது தவம்	காமத்தை விடுதல்
எது சிறந்த தானம்	பிராணி ஹிம்ஸையை விடுதல்
எது சூரத்தனம்	வாஸனையை ஜயித்தல்
எது ஸத்தியம்	எங்கும் ஸமமாயுள்ள பிரம்மத்தை எண்ணுதல்
எது சௌசம்	கர்மங்களில் பற்றின்மை
எது ஸந்நியாஸம்	கர்ம பலனை தியாகமே ஸந்நியாஸம்
எது பிரியமானதனம்	தர்மமே
எது யஜ்ஞம்	சிறந்த பகவான்
எது தக்ஷிணை	ஞானோபதேசம்
எது சிறந்த பலம்	பிராணாயாமம்
எது பாக்கியம்	பகவானை சேர்ந்த ஐஸ்வரிய பாவனை
எது உத்தம லாபம்	பகவானிடம் பக்தி ஆத்மாவில் பேத புத்தியை ஒழித்தல்
எது வெட்கம்	கெட்ட செய்களில் வெறுப்பே வெட்கம்
எது ஸ்ரீ	வேண்டாமை முதலிய குணங்களே
எது சுகம்	இன்பத் துன்பங்களை கடந்து நிற்றல்
எது துக்கம்	விஷய சுகத்தில் ஆசையே துக்கம்
எவன் பண்டிதன்	பந்தத்தினின்று விடுபடும் வழி அறிந்தவன்
எவன் முட்டாள்	தேக முதலியவற்றில் நான் என்ற புத்தியுள்ளவன்
எது நிவிருத்தி	செல்லத் தக்க வழி பகவானைப் பற்றிய ஞானத்தால்
எது பிரவிருத்தி	தகாதவழி சிதறிய மனத்தால்
எது ஸ்வர்க்கம்	ஸ்தவகுணத்தின் மிகுதி
எது நாகம்	தமோகுணத்தின் மிகுதி
எவர் பந்து	குருவே அதுவும் பகவானே
எது வீடு	சாரீரம் தான்
எவன் பிரபு	குணவானே
எவன் தரித்திரன்	ஸந்தோஷம் இல்லாதவன்
எவன் கிருபணன்	இந்திரியங்களை ஜெயிக்காதவன்
எவன் ஈஸ்வரன்	குணங்களில் பற்று விட்டவன்
எவன் அடிமை	பற்றுள்ளவன்

ஸ்ரீமத் பாகவதம்



வெகுஜன எழுத்தாளராக விளங்கி அதே சமயம் இலக்கியத் தரத்தையும் காப்பது என்பது மிகவும் அபூர்வமான விஷயம். அத்தகைய எழுத்தாளர்களுள் ஒருவர் அகிலன்.

கலைமகளில் அவரது நெஞ்சின் அலைகள் போன்ற ஆரம்ப காலத் தொடர்களைப் படித்து மனத்தைப் பறிகொடுத்திருந்தேன் நான். எனவேதான் கல்கியில் எனது சகாவாகப் பணியாற்றி வந்த பகீரதன், 'அகிலனிடம் தொடர்கதை பெற்றுவரப் போகிறேன்' என்று கூறிப் புறப்பட்ட போது, வெற்றித் திலகமிட்டு அனுப்பாத குறையாக வாழ்த்தி விடைகொடுத்தேன்! பகீரதன் தமது பெயருக்கேற்ப விடாக்கண்டர். எடுத்த காரியத்தை முடிக்காமல் விட மாட்டார். விகடன் வெள்ளி விழாப் போட்டிக்கென்று அகிலன் எழுதிக் கொண்டிருந்த

ஒரு முழுமையான எழுத்தாளர்!

நாவலை நயமாகப் பேசித் தட்டிக் கொண்டு வந்து விட்டார்! 'பாவை விளக்கு' கல்கியில் பிரசுரமாகிப் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. பெரும்பாலும் அகிலனின் சொந்த வாழ்க்கை அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டிருந்த நாவல் அது. வாசகர்களின் மனங்களைத் தொட்டது மட்டுமல்ல; அங்கே நிரந்தர இடம் பிடித்தும் விட்டது.

பாவை விளக்கின் வெற்றி அகிலனுக்கு மகிழ்ச்சி தரவில்லை; கலக்கத்தை ஏற்படுத்தி விட்டது! இனி இதைவிட உயர்வாக எழுத வேண்டுமே என்ற கவலை ஆட்கொண்டது. இலக்கியத் தரமுள்ளதாகத் தமது நாவல்கள் போற்றப்பட வேண்டும் என்ற ஆர்வமும் உருவாயிற்று. 'சரித்திர நாவல்கள் எழுதலாமே' என்ற யோசனையை உடனே ஏற்றார். அமரர் கல்கி அவர்கள் படித்திருந்த சரித்திர நூல்களையெல்லாம் என்னிடமிருந்து கேட்டு வாங்கிப் படித்தார். கல்கியைப் போலவே இவரும் வரிகளை அடிக்கோடிட்டதுடன், மார்ஜினில் ஏராளக் குறிப்புக்களை எழுதி வைத்தார்! 'வேங்கையின் மைந்தன்,' 'கயல்விழி,' 'வெற்றித்திருநகர்' முதலியவை எழுத, கல்கி அவர்களின் அடிச்சுவட்டில் தாமும் கதை நிகழும் இடங்களுக்கெல்லாம் போகப் பிரியப்பட்டார். கல்கி அதிபர் சதாசிவம் இதற்கு வசதி செய்து தந்தார். ஒரு பெரிய காரில் ஓவியர் வினு உள்பட நாங்கள் நான்கைந்து பேர் பயணம் செய்தோம். சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் சோறு தண்ணீர் இல்லாமல் தவித்தோம்! ஹம்பியில் ஒரு குடிசை வாழ் பாட்டியிடம் பணம் தந்து, சோறாக்கிப் போடச் சொல்லி நாலு நாட்கள் சாப்பிட்டது இன்றும் நினைவிருக்கிறது. சோழ நாட்டில் எந்த இடத்தைப் பார்த்தாலும் அகிலனுக்கு, அமரர் கல்கி அதனை அழகாகத் தமது நாவலில் பயன்படுத்தியிருப்பது நினைவுக்கு வர, ''என்ன ஸார், நமக்கு ஒரு விஷயத்தையும் அவர் விட்டு வைக்கவே இல்லையே'' என்று அடிக்கடி அங்கலாய்ப்பார். ஆயினும் மனம் சோர்ந்து விடாமல் அற்புதமான நாவல்களைப் படைத்து அவற்றுள் ஒன்றுக்கு சாகித்ய அகாதமி பரிசும் பெற்றார்!

பாவை விளக்கை நாங்கள் விகடனிட

மிருந்து பறித்ததற்குத் தண்டனையாகத் தானோ என்னவோ, 'சித்திரப் பாவை' விகடனில் இடம் பெற்று உன்னதமான ஞானபீடப் பரிசையே பெற்றது!

எழுத்தை மட்டுமே நம்பி ஆர். எம். எஸ். உத்தியோகத்தை விட்டு விட்டுச் சென்னைக்கு வந்த அகிலாண்டம், அந்த ஆரம்ப நாட்களில் பொருளாதார ரீதியாக மிகவும் சிரமப்பட்டார். ஆயினும் யாரிடமும் தமது கஷ்டங்களை வெளியிட மாட்டார். அதிர்ந்து பேசவே தெரியாத உயர்ந்த பண்பாளர். தமக்குத் தொடக்க கால ஆதரவு தந்த கி. வா. ஜ. அவர்களைக் குருவாகவே போற்றினர். கலைமகளுக்கும் அவ்வப்போது எழுதி வந்தார்.

சினிமாவுக்குக் கதை கொடுத்துவிட்டுப் பிறகு, அதைக் கெடுத்து விடுவார்களோ என்று பயந்து, பின்னோடேயே ஓட்டிக் கொண்டவர் அகிலன். சிறந்த நாவலைப் படிக்கும் வாசகர்கள் கதா பாத்திரங்களைத் துல்லியமாக இதயத்தில் சித்திரித்துக் கொண்டு, திரைப்படம் குறித்து எதிர்பார்ப்புக்களை வளர்த்துக் கொள்கிறார்கள். அந்த எதிர்பார்ப்புக்களைப் படம் பூர்த்தி செய்ய முடியாத போது தோல்வி காண்கிறது. அகிலனின் நாவல்களும் இதற்கு விதிவிலக்கல்ல.

அகிலன் எழுதும்போது அருகில் இருந்திருக்கிறேன். ஒவ்வொரு வாக்கியத்தையும் எழுதியதும் அதில் உள்ள எழுத்துக்களைச் செப்பனிட்டுச் சீர்ப்படுத்துவார். அப்போது அடுத்த வாக்கியம் பற்றி யோசிப்பார்! இவ்வாறு ஒவ்வொரு வாக்கியத்தையும் யோசித்து வார்த்தைக்கு வார்த்தை மெருகேற்றி எழுதுவார். உணர்ச்சிகளை உரையாடலாகவடிப்பதில்சிறந்தவராகக்கல்கிக்கு அடுத்தபடி அகிலனைத்தான் கூற முடியும். அதில் செயற்கைத்தனம் சிறிதும் இராது. அடுத்த வாரம் எழுதப் போகும் கதையை, இந்த வாரக் கதைப் பகுதியைப் பெற்றுச் செல்ல வரும் என்னிடம் உணர்ச்சிப் பெருக்குடன் விரிவாகச் சொல்வதில் அகிலனுக்கு ஆசை அதிகம். கருத்துக் கேட்பார். விமர்சிக்க ஊக்குவார். மனம் விட்டுப் பேசும் போது அவர் உள்ளத்தில் கதை செதுக்கப்பட்டுப் பூரணத்துவம் அடைவதைக் கண்டேன்.

எழுத்துத் துறையை மிகவும் தீவிரமாக எடுத்துக் கொண்டதாலேயே, கதா பாத்திரங்களின் உணர்வுகளையெல்லாம் தாமும் உணர்ந்து எழுதியதாலேயே, அவருக்கு உடல் நலம் பாதிக்கப்பட்டு ரத்த அழுத்தம் அதிகரித்தது. ஜுர வேகத்தில்கூடத் தமது கதா பாத்திரங்களை அழைத்துப் பேசியவர் அகிலன். ஓர் உண்மையான, முழுமையான எழுத்தாளர் என்பதற்கு இதை விட வேறு சான்று வேண்டுமா?

— கி. ராஜேந்திரன்

தளபதி திடமதி:

நியாய எடைக் கடை என்று சொன்னேனா..?

'' 'எங்கள் தலைவருக்குப் பின்னால் கட்
ஒயே இருக்காது' என்று ஜோசியம்
சொன்ன எதிர்க்கட்சியினர், அவமானப்
பட்டு, வெட்கப்பட்டு, முகத்தை மறைத்
துக்கொள்ளும் விதமாக, எங்கள் தலைவர்
மறைவுக்குப் பின்னால் ஒரு கட்சிக்குப்
பதில் இரண்டு கட்சிகளாக நாங்கள்
வளர்ந்திருப்பதைப் பெருமையோடு
கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்!''

— ஜே. சாய்ராஜ்குமார்,
கோபிசெட்டிபாளையம்.

'' அரசு நியமித்த நியாய விலைக் கடை
களில் எடை சரியில்லை என்று குறை
கூறிப் புலம்புபவர்களுக்கு ஒன்றைக் கூற
விரும்புகிறேன். எங்கள் தலைவர்
அவற்றை நியாய விலைக் கடை என்று கூறி
னாரே தவிர, ஒரு போதும் நியாய எடைக்
கடை என்று கூறவே இல்லை என்பதை
அழுத்தமாக நினைவூட்டக் கடமைப்பட்
டிருக்கிறேன்!''

— காயத்ரி, மதுரை — 14.

திடமதி: ''தேர்தலில் நிற்க டிக்கெட்
கொடுத்தால் போதும்; அமைச்சர்
பதவி கேட்க மாட்டோம்னு எழுதியே
தர்றதா எல்லாரும் சொல்றாங்க!''

தலைவர்: '' அட, ஆச்சர்யமா இருக்கே!''

திடமதி: '' ஆமா, அத்தனை பேரும் முத
லமைச்சர் பதவிக்குத்தான் போட்டி
போடுவோம்னு சொல்றாங்க!''

— லிப்டன் வெங்கடாசலம், சேலம்.

திடமதி: ஜனவரி முதல் தேதி தலைவர்
புத்தாண்டு சபதம் எடுத்திருக்கார்...

நண்பர்: என்னன்னு?

திடமதி: வரதட்சணை வாங்காத திரு
மணத்துக்குத்தான் வருவார்; நடத்தி
வைப்பார். ஆனால், கட்சி நிதிக்கு
அரை லட்சம் முன்கூட்டியே தர
வேண்டும்! காதணி விழாவில் கலந்து
கொண்டு பெயர் சூட்டப் பத்தாயிரம்
தந்தால் போதும்!

— ச. சீத்தாராம், கோம்பை.



கூஜாவுக்கு ஏற்ற மூடிதான்!

* மீட்கப்பட்ட கொத்தடிமைகளைப் பற்றி அநேகமாய் எல்லோரும் மறந்துவிட்ட இச் சமயத்தில் அவர்களின் துயரங்களை, அவல நிலையை வெளியிட்டு அனைவரின் கவனத்தையும் திருப்பியுள்ளீர்கள். அரசு தனது மெத்தனப் போக்கைக் கைவிட்டுக் கொத்தடிமைகளின் பிரச்னைகளுக்கு நிரந்தரத் தீர்வு ஏற்படத் தீவிரமாய் நடவடிக்கை எடுக்க வேண்டியது மிகவும் அவசியம்.

கும்பகோணம். எஸ். மங்களம்.

* கொடைக்கானல் கொத்தடிமைகள் பற்றிய கட்டுரை படித்தேன். பணம் இல்லாமலேயே பட்ஜெட் போட்டு, திறமை இல்லாமலேயே ஆட்சி நடத்தும் அரசுக்கு, நிலம் இல்லாமலேயே பட்டா வழங்கும் அதிகாரிகள்...! கூஜாவுக்கு ஏற்ற மூடிதான்! என்ன பொருத்தம்... ஆஹா என்ன பொருத்தம்!

திருக்குவளை. வெற்றிப்பேரொளி.

* பொருளாதாரக் கண்ணோட்டத்தின்படியும், மனிதத்துவ முறைப்படியும், நமது இந்திய அமைதிப் படை தொடர்ந்து இலங்கையில் தங்குவது சரியல்ல என்றும், ஈழத்தை விட்டுப் படிப்படியாக வெளியேறுவதற்கான சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும்; ராணுவத் தீர்வு ஒருபுறமிருக்க, உடனடியாக அரசியல் தீர்வு காண வழி செய்ய வேண்டும் எனவும் நடுநிலையோடு தாங்கள் கூறிய தலையங்கம் அருமை!

விருதுநகர். கே. டி. ஆர். சேகர்.

* தமக்கு எதுவுமே தெரியாது என்று கூறி ஒதுங்கிக் கொள்ளாமல், ஆர்வத்தோடு முன் வந்து, குறைகளைத் தீர்க்க அவகாசம் கேட்கும் சேலம் மாவட்ட புது கலெக்டர் உண்மையிலேயே பாராட்டுக்குரியவர்தான்!

குத்தாலம். எஸ். ராஜா.

* ''சிறந்தாய் வாழி காவேரி'' கட்டுரையின் மூலம் உழைப்பால் உயர்ந்த ஒருவரின் வெற்றிக் கதைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கிய வி.டி. தவமியின் வாழ்க்கை வரலாற்றையும், அன்றாடு தளராத மன உறுதியையும் பல்லாயிரக்கணக்கான வாசகர்களுக்கு எடுத்துக் கூறி ஒருவருக்கு எவ்வளவு கஷ்டங்கள் வந்தாலும் யாரும் மனந்தளர்ந்து விடக் கூடாது என்பதையும் எடுத்துரைத்த ''கல்கி''க்குப் பாராட்டுக்கள். மிகவும் பயனுள்ளதாக அக்கட்டுரை அமைந்திருந்தது.

திருமருகல். மு. செந்தில்வாசன்.

* 'ஹீரோ ஹிர்வானி' தொகுப்பு படித்தேன். அவரின் 16 விக்கட் 136 ரன்கள் என்பது அபாரமான உலக சாதனைதான்! ஆனால் இந்தச் சாதனைக்கு அடிகோலிய 'கிரன் மோரே'யின் ஒரே இன்னிங்ஸில் ஐந்து ஸ்டம்பிங்குகள் சாதனையும் உலக சாதனைதான்.

மயிலாடுதுறை. கி. எழில்.

* ''ஹீரோ ஹிர்வானி'' முதல் பக்கக் கட்டுரைக்கும் படங்களுக்குமே ஒரு சபாஷ் போட வேண்டும். கிரிக்கெட் ரசிகர்களுக்கு (குறிப்பாக ஹிர்வானி பிரியர்களுக்கு) 'பால் பாயாசம்' சாப்பிட்ட திருப்தி!

மேட்டுப்பாளையம். மா. கணேசன்.

* 'நாங்கள் இழந்து விட்டவையெல்லாம் இனி திரும்ப வராது. ஆனால் எஞ்சியிருப்பதைக் கடந்த காலத்தின் இனிய கனவுகளால் அலங்கரித்துக் கொண்டு வாழ எங்களுக்கு வழி செய்யுங்கள்'.... பூரபி பர்முதையின் அஸ்ஸாமிய மொழிக் கதை வரிகள் உள்ளத்தை உருக்கி விட்டன!

புகளூர். க. பொன்ராஜ்.

* எடிட்டரிடம் பேசும் பொழுது உள்ள கடமை உணர்வும், அம்மாவிடம் பேசும் பொழுது உள்ள உண்மையும், காதல் உணர்வு ஆக்கிரமித்தபின் அதை வெளிப்படுத்தும் பலவீனமும், உணர்வுகள் தோற்ற பொழுது அதிலிருக்கும் நியாயத்தை உணரும் அந்த மனோதிடமும்... அந்தப் பெண் நிருபர், அந்த மகள், அந்தக் காதலி, அந்த ஷோபியா — மிகவும் உயர்ந்து விட்டாள், திரைவிழாப் படக்கதையில்.

போடிநாயக்கனூர். மு. அப்பாஸ் மந்திரி

* ஆர். சூடாமணியின் உயில் சிறுகதையின் முடிவு உருக்கமாக இருந்தது. பேரன் மீது பேரன்பு வைத்திருந்த அண்ணாசாமியின் பாத்திரம் அற்புதம்!

தகலை. வீரபாண்டியன்.

* 'மாவட்ட சீ விசிட்டுகளின்' போது, குறைகளில் பாதி நிவர்த்தி செய்யப்பட்டிருப்பது மகிழ்ச்சியைத் தருகிறது. குறைகளை எழுதினோம் அதோடு விட்டோம் என்றில்லாமல் சீ விசிட் செய்து அப்பிரச்னைகளைக் கண்காணிக்கும் கல்கியின் சமுதாயப்பணி என்னை நெகிழ வைக்கிறது.

எஸ். அரிஅரன். திருநெல்விக்காவல்.

* கல்கி 24.1.88 இதழில் வேதம் புதிது விமர்சனம் கண்டேன். பிராமணர் குலத்தை மட்டும்தான், பிராமணப் பெண்களை மட்டும்தான் கொச்சைப்படுத்தியோ, தற்காலத்தில் நடக்காதவற்றைத் திரைப்படங்களில் சம்பவங்களாகச் சேர்த்துக் காட்டவோ முடியும்! இங்கு தமிழகத்தில் ஓர் இயக்கம் தாறுமாறாக பிராமணர்களைப் பற்றி எழுதியும், பேசியும் வருகிறது. அதைக் கண்டித்துத் தமது படங்களில் காட்டி, தமிழ் சமுதாயத்தில் ஒரு புரட்சியை உண்டு பண்ணப் பாரதிராஜா தயாரா?

'கரை கடந்த குறத்தி' 'கரை கடந்த ஒருத்தி'யாக மாறியது. இதில் எந்தத் தவறுமில்லை. குறவர்களுக்குத் தரப்படும் மரியாதை, பிராமண சமூகத்திற்கும் தரப்படாததுதான் வேதனை.

மல்லசமுத்திரம். க. கல்யாணராமன்.

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.
அலுவலகம்: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: 4 3154 3, 4 34 157.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 104/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 280/—; விமானத் தபால் ரூ. 680/—.
ஆறு மாதச் சந்தா — உள்நாடு: ரூ. 52/—; வெளி நாடு: கப்பல் தபால் ரூ. 140/—; விமானத் தபால் ரூ. 340/—.

அறிமுகம் இதோ ஒரு மணிப் பயல்.

பஜாஜ் காம்பேக்ட் வாஷிங் மெஷின். நாசூக்கான கலைதுலங்கும் நன்மணி... இதற்கு நாங்கள் இட்ட பெயர்: மணிப் பயல்.



காம்பேக்ட் என்னென்ன வரங்களை
வாரிவழங்குது பாருங்கள் வரிசையாக.

ஸிங்கிள் பட்டன் கண்ட்ரோல்: நவீனமிக்க CMOS மின் ஸர்க்யூட்—துணி வகைக்கேற்ப 1 முதல் 4 நிமிடங்கள் வரை, அலசி வெளுக்க 4 வித சுற்றோட்ட வகைகளை அமைத்துக் கொள்ள அனுமதிக்கிறது. பழங்கால பாணி டைமர்கள் இனி உமக்கில்லை.

எதிர்கால நவீனக் கலை: சிட்டு வடிவிலே சிகரமான கட்டழகு இழையும் வாஷிங் மெஷினாக ஓங்கி விளங்குவது காம்பேக்ட் தான். குறைந்த இடத்தில் அடங்கிடும். எளிதில் நகர்த்த சரளமான உருள் சக்கரங்கள் பதிந்த மெஷின்.

LED இயங்கு நிலைகாட்டி: எலக்ட்ரிக் ஸெட்டிங் நிலையினைக் காட்டுகிறது ஆடியோ ஒலிச் சைகைகளோடு. சலவை முடிந்ததுமே அதனை அறிவிக்கிறது ஓர் அலாரம் ஓசை.

திசை மாறிமாறிச் சுற்றும் வாஷர்: அதிகத் துப்புரவான சுத்தமும், உயர்த்தியான சலவையும் பெற உதவுகிறது.

திடவலு மிக்கது காம்பேக்ட். ஸ்டைல் மிளிரும் வலுவான ஃபைபர்கிளாஸ் கட்டுமானம். உட்புறம்: அரிமான எதிர்ப்புள்ள ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் தொட்டி.

உள்நோக்க வாகு: அக்ரிலிக் மூடி: உட்புறம் நடக்கும் சலவையை நேரில் நீங்கள் பார்த்திடலாம்.

நிறைவான சலவைத் திறம்: காம்பேக்ட் சிற்றடக்கமாக இருப்பினும் எத்தனை துணிகளை வெளுக்கிறது பாருங்கள்: ஒரே வீச்சில் 1 புடவை, 2 ஷர்ட்டுகள், 1 ஜீன்ஸ், 1 ஷீட், 5 சிறு உருப்படிகள்.

பேக்-அப் ஸ்விட்சு: உங்கள் காம்பேக்ட் மெஷினின் எலக்ட்ரானிக் பேனலுக்கு எப்போதேனும் ரிப்பேர் தேவைப்பட்டால், மெஷின் வேலை தடைப்படாது. பேனலைக் கழற்றிப் பழுது திருத்தக் கொடுத்துவிட்டு, பிக்-அப் ஸ்விட்சைப் பயன்படுத்தி மெஷினைத் தொடர்ந்து இயக்கலாம். மறவாதீர், சிறியதே அழகு; சிக்கனமே செழிப்பு. முத்தான அழகோடு மூளை பலம். இத்தனை பெருமைகளும் உரிமையோடு பளிச்சிடும் எந்திரம் பஜாஜ் காம்பேக்ட்— இல்லத்தரசிக்கு மகத்தான நல்வரம்.



bajaj COMPACT

பஜாஜ் காம்பேக்ட் வாஷிங் மெஷின்

LINTAS BE P 1 2416 TM

bajaj

அடக்கமான சிறு வடிவம், அபார முழுத்திறம், சலவைக்கு நல்வரம்.

ISTERED No. M. 4392
istered as a Newspaper in Sri Lanka

